
# வித்யாதனம்

6–9

1


ஜூலை — டிசம்பர்.
1937.



# வித்யாதனம்

(TAMIL TREASURE CHEST)

Vol 1. | செப்டம்பர் & அக்டோபர்மீ 1937ஹு | No. 6. 7.



# பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 | 8. | முதன்மையை நாடினேன் | 16 |
| 2. | நீ இதை அறியாயோ, நீ இதை கேட்டதில்லையோ? | 2 | 9. | அறைகள் நூறு அமைந்த அரண்மனை | 17 |
| 3. | அன்புக்குப் பொறுமையில்லை | 5 | 10. | குடும்பப் பயிற்சி | 19 |
| 4. | வேத வாசிப்பு | 8 | 11. | பாலரும் பச்சைப்பட்ட ரணிகளும் | 20 |
| 5. | அரிசி ஆசிரியன் | 9 | 12. | நிழல் விளையாட்டு | 23 |
| 6. | சுகாதாரக் குறிப்புகள் | 13 | 13. | விநோதக் கதை | 23 |
| 7. | பிள்ளைகளுக்குரிய பாடங்கள் | 15 | 14. | கீர்த்தனை | 22 |


## அக்டோபர்மீ


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 27 | 8. | கற்கவேண்டியவை | 33 |
| 2. | உலக செய்தி | 28 | 9. | இராட்சதர் | 33 |
| 3. | அமெரிக்கா ஐக்கிய மாகாணம் | 29 | 10. | கற்கும் முறை | 34 |
| 4. | சீனா ஜப்பான் சண்டை | 29 | 11. | குள்ளனும் இராட்சதனும் | 35 |
| 5. | சீனாவின்மேல் ஜப்பான் படையெழுச்சி | 30 | 12. | சரியான ஞாபக சக்தி | 37 |
| 6. | தீண்டாமை வேண்டாமே! | 30 | 13. | குடும்பப் பயிற்சி | 38 |
| 7. | சித்தியுள்ள ஜீவிய பிரமாணங்கள் | 31 | 14. | கடிதம் | 41 |


---


### பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |



REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George town,
MADRAS



Photo : Peter North

THEIR MAJESTIES THE KING EMPEROR GEORGE VI AND QUEEN ELIZABETH


# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி 1. | செப்டம்பர்மீ 1937ஸு | பகுதி 6.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 13 NOV 1937 MAD

## பத்திராதிபர் குறிப்பு.

இப்பத்திரிகையை ஆதரித்து வரும் அன்பர்களுக்கு எம் வந்தனம் அளிக்கின்றோம்.

மேன்மைக்கு முன்னுளது முதன்மையோ? இக்கேள்விக்கு விடை இதில் காணலாம். பாடசாலைகளில் காணப்படவேண்டிய இன்பம் போய் துன்பம் நுழைவதின் இரகசியம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆசிரியரும் மாணவரும் அதை வாசித்துப் பயன் பெறுவது அத்தியந்த அவசியம். சந்தோஷம் அடையும் திறவுகோலுமுண்டு. கண்டெடுக்கலாம். "பச்சைப் பட்டாணிகளும் பாலரும்" என்ற பொருளின் கீழ்வரும் பாட்டும் விளையாட்டும் சிறுவருக்கேற்றவை. பிள்ளைகளே! உங்கள் பாடசாலையில் கரு நடு விழா உண்டா? இல்லாவிட்டால் அதின் அவசியத்தைப்பற்றி இங்கு எழுதி யிருப்பதைப் படித்துப் பயிற்சி யடையுங்கள். வழக்கம்போல் சுகாதாரச் குறிப்புகள் வெளிவரும், இதில் முதற்சிகிட்சை செய்யும் முறை வெளியாகின்றது. உலக செய்தியுமுண்டு. இங்கு காணும் வேதக் கதை எங்குளது? விடுகதைகளுக்கு விடை பகருவோருண்டோ? கடைசியில் காணும் படங்களையும் சேர்த்து வைக்கலாம். பழைய கடிதத்தின் தொடர்ச்சியும் எதிர்பாருங்கள்.

கடந்த மாதம் வெளியாக வேண்டிய விடுகதைகள் வெளி வராததைப்பற்றி விசனப்படுகின்றோம். பத்திரிகையில் இடமில்லாதபடியால் அவை யாவும் இம்மாதம் வெளியாகின்றன. கவனமாய்ப் பாருங்கள். தேச சேவைக்கு ஏற்ற கீர்த்தனையும் காஹாப்ரீயா இராகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. உபயோகியுங்கள். குரங்கு ஆசிரியராய் விளங்கும் படத்தைப் பிள்ளைகளுக்குரிய படங்கள் வரும் பக்கத்தில் பெரிதாக அச்சடித்திருக்கின்றோம். அதை வெட்டி ஞாபகத்துக்கு உதவியாக ஓரிடத்தில் ஒட்டி வைத்துக்கொள்ளலாம். கடைசியில் காஷ்மீரத்துக் கலப்பையையுங் காணலாம்.

T. A. Fenn.

சென்னை-600 008



# "இதை நீ அறியாயோ, இதை நீ கேட்டதில்லையோ?"

களைப்படைந்து இளைப்பாறுங் காலத்திலே செடிகளைப் பிடுங்கி நடவேண்டும். புதுத் துளிர்விடும்போது இடம் பெயர்த்து நடக்கூடாது. இடமாற்றுமுன் வெட்டியெறியவேண்டிய கிளைகள் வெட்டப்படவேண்டும்.

மரங்களின் உச்சியில் எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடம் வேர்களோடும்படி இருக்கவேண்டும். மரம் நடும் குழி மூன்றடி ஆழமும் உச்சி எவ்வளவு அகலமாய்ப்படருமோ அவ்வளவு அகலமாயும் இருத்தலவசியம். மற்றப்படி வேர்களுக்கு வேண்டிய ஆகாரமில்லாமல் மரங்களின் வளர்ச்சி குன்றிப்போம்.

சிறு மரங்களா யிருக்கும்போது ஒரு வாரத்திற்கு ஒரு தடவையாகிலும் நான்கு அல்லது ஐந்து குடம் தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டும். காலையில் அல்லது மாலையில் தண்ணீர் விடவேண்டும். வெயில் நேரத்தில் தண்ணீர் விடக்கூடாது. மரங்களைச் சுற்றிலும் கொத்தி எருப் போடவேண்டும்.

ஓர் அடி உயரத்திற்கு அதிகமாய் மரத்தைச் சுற்றிலும் மண் போடுவது மரத்திற்குக் கெடுதியை விளைவிக்கும். வேர்கள் வெளியே தெரிந்தால் மண் போட்டு மூடலாம். மரங்களைச் சுற்றிலும் உட்காரும்படி மேடு போடுவது இந்தியாவில் வழக்கமாயிருக்கின்றது. சிலமரங்களுக்குக் கெடுதி செய்யா விட்டாலும், இது அநேக மரங்களின் வளர்ச்சிக்கு ஊனம் உண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

மரத்தின் தண்டு 10 அல்லது 12 அடி உயரம் இருக்கவேண்டும். அந்த உயரத்திற்குப்பின் கிளைகள் உண்டாக இடங்கொடுக்கலாம். அதற்குக் கீழே பிரியுங் கிளைகளை வெட்டியெறியவேண்டும். ஏனெனில் இவை மரங்களுக்குச் சரியான காற்றோட்டம் இல்லாதபடி தடுக்கின்றன.

நல்ல மரங்களின் அழகைக் கம்பளிப்பூச்சி கெடுக்கின்றன. இதைத்தடுக்க வழியில்லையோ? கம்பளிப்பூச்சிகள் ஏறின மரம் பாழ். இவை ஏறிப்போகாதபடி பிடித்துக் கொல்ல ஓர் இலகுவான வழியுண்டு. அதாவது மரத்தண்டை சுற்றி கோணிப்பைத் துணியைச்சுற்றிக் கட்டித் தொங்கவிடவேண்டும். மரத்தில் ஏறும் கம்பளிப்பூச்சிகள் மடிப்புக்குள் பிரவேசித்தவுடன் வெளியேற வழி தெரியாமல் அங்கு இருந்துகொள்ளும். கம்பளிப்பூச்சிகளுக்கு ஏறத் தெரியுமே யொழிய இறங்கத்தெரியாது. மேல்நோக்கிச்செல்வதே அவற்றின் சுயதன்மை ஆனது பற்றி அவற்றை எளிதில் அகப்படுத்திக் கொள்ளலாம். அதன்பின் அவற்றை அன்றன்று அப்புறப் படுத்திக்கொல்லலாம்.

---

# "அன்புக்குப் பொறுமையில்லை"

## Kanta Kumar

பாடசாலை மிசியம்மாள் அறையி லிருந்து பாக்கியம் வேகமாய் வந்து உபாத்திமார் வீடுகளுக்கு முன்னிருக்கும் வாசலண்டை தன் சிநேகிதியாகிய புஷ்பத்தைச் சந்தித்தனள்.

"வசந்தாவையும் சாரதாவையுங் கூப்பிடு. ஒரு விசேஷமானசெய்தி சொல்லவேண்டும்" என்றனள்.

பாடசாலை மூலையிலுள்ள ஒரு மரத்தின்கீழ் சென்றனர். அங்குதான் இரகசியங்கள் யாவும் வெளியாகும். மற்ற மூவரும் வந்தவுடன் பாக்கியம் சொன்னதாவது:—

"மிசியம்மாள் அறையில் நான் வேலைசெய்துகொண்டிருந்தேன். தலைமை உபாத்தினி தமது வேலையை விட்டுவிட்டுப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தபோது மிசியம்மாள் இப்போது இங்கிருக்கும் உபாத்தினிமாருள் ஒருவரைத் தலைமை உபாத்தினியாக்குவதாக சொன்னார்கள். நம்மில் ஒருவராய்த்தானிருக்கவேண்டும். மற்றவர்கள் நம்மைப்போல் படித்தவர்களில்லை."

"நம்மில் யாராய் இருக்கக்கூடும்?" என்று வசந்தா வினவி, "பாடசாலையை நமது இஷ்டம்போல் நடத்துவது எவ்வளவு நல்லது" என்றும் சொன்னாள்.

"உங்களில் யாரைத் தெரிந்துகொள்வார்களோ தெரியவில்லை. எனக்குக் கிடைக்காதென்பது நிச்சயம். அதைப்பற்றிக் கவலையில்லை. என்வகுப்புக்குப் படித்துக்கொடுப்பதே எனக்குப் போதும்" என்றுசொல்லி சாரதா சிரித்தனள்.

இந்த நான்கு பேரும் ஜெயபுரத்தைவிட்டு பட்டணத்துக்குப் போய் உயர்தரப் பாடசாலையில் படித்தவர்கள். முதல் மூவரும் நன்றாய்ப் படித்துப்பத்தாம் வகுப்புப் பரீக்ஷையிலும் தேறினவர்கள். சாராதாவோ தவறிப்போனாள். அவள் கலாசாலைக்குப்போக வழியில்லை. மற்றவர்கள் கலாசாலையில் படிக்கக்கூடிய தேர்ச்சியுடையவர்களா யிருந்தாலும் மிசியம்மாளுக்குப் படிக்க வைக்கப் பிரியமில்லை. ஆகையால் ஜெயபுரத்துப் பாடசாலையில் ஒருவருஷமாய் வேலைசெய்து வந்தனர்.

ஜமுக்காளம் செய்துகொண்டிருந்த சாரதாவிடம் புஷ்பம் வந்து உட்கார்ந்தனள். வருஷத்துக்கு வேண்டிய கைவேலையை தயார்செய்துகொண்டிருந்தனள். இது மாணுக்கர் பார்த்து செய்யவேண்டிய மாதிரிவேலை.

"ரஜா நாட்கள் துவங்கிவிட்டது. நீ வேலைசெய்வதை விட்டோயமாட்டாயோ?" என்று புஷ்பம் வினவ,

"இது எனக்குக்கஷ்டமில்லை. வேலையோடுவேலையாய்க் கைவேலை செய்வதைக்காட்டிலும் இப்போது செய்து வைப்பது எனக்கு இலகுவானது" எனக்கூறினள் சாரதா.

"அதைப்பற்றிக் காரியமில்லை. யாரை, அக்கா, தலைமை உபாத்தினியாக வைப்பார்கள்?" என்று புஷ்பம் கேட்க,

"எனக்குத் தெரியாது. உங்கள் மூவரில் ஒருவரைத்தான் வைப்பார்கள் என்றெண்ணுகின்றேன்" என மொழிந்தனள்.

"அது யார்? தகுதியான அந்த ஆள்யார்?" என மறுபடியும் வினவ,

எனக்குத் தெரியாது. தீர்மானிப்பது என்னுடைய வேலையுமல்ல. பிள்ளைகளுக்கு வேண்டிய கைவேலை ஆயத்தம் பண்ணினால் போதுமானது என்று சாரதா விடை பகர்ந்தனள்.

தங்கை வியாதியாயிருப்பதாய் மிசியம்மாளுக்குத் தந்திவந்தது. தூரமான இடத்துக்குப் போகவேண்டியதிருந்ததால் மிசியம்மாள்உபாத்திமார்கூட்டம் ஒன்றுவைத்துதான் சாரதாவைப் புதுதலைமை உபாத்தினியாக நியமித்திருப்பதாகவும் யாவரும் அவர்களுக்குக் கீழ்படிந்திருக்க வேண்டும் என்பதாகவும், தாயாரம்மாள் ஆலோசனைதந்து உதவிசெய்வார்கள் என்பதாகவும், தன் தங்கையின் சுகத்துக்காக யாவரும் ஜெபம்செய்யவேண்டும் என்பதாகவும் சொல்லி விடைபெற்றுப்போயினர்.

எல்லோரும் தம் தம் இடத்திற்கு ஏகினர். மௌனம் சாதித்தனர். சரியாய் விளங்கிக் கொண்டோமோ என்ற சந்தேகங்கொண்டனர். சாரதாவுக்கும் சந்தேகமே! அவள் தனக்கு அந்தவேலை வேண்டாமென்று சொல்லப்போகிறதாக மூன்று சிநேகிதிகளிடமும் சொல்லச சென்றனள். பாக்கியமும் புஷ்பமும் அவளோடே பேசமாட்டோமென்றிருந்தனர். அவள் ஏதோ நயவஞ்சகமாய் அவ்வேலையை அடைந்ததுபோல் எண்ணினர். வசந்தா கண்ணீர் விடாததுதான் குறை. அவளுக்கு அவ்வேலை வேண்டுமென்றிருந்தது. கிடைக்காதது மிவுகம் வருத்தம். வெளியே சொன்னால் வெட்கம் என்றிருந்தனள்.

சாரதா தாயாரம்மாளிடம்போய் தனக்கு அவ்வேலை வேண்டாமென்றுகூறினள். தாயாரம்மாள் ஒன்றும் செய்யமுடியாது. "என் உன்னை வைத்தார்களென்று மிசியம்மாள் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் சரியான காரணமில்லாமல் செய்திருக்கமாட்டார்கள். இப்போது அதைப்பற்றி அம்மாளிடம் பேசமுடியாது. அவர்கள் இட்டது சட்டம். அதின்படி செய்வது நமது கடமை" என்று தாயாரம்மாள் சொன்னார்கள்.

சாரதா தன்னால் இயன்றதைச்செய்ய முயன்றனள். தன் சிநேகிதிகளைக் காணச் சென்றனள். பாக்கியமும் புஷ்பமும் அவளோடு பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டனர். வசந்தாவோ தலையிடி யந்து படுத்துக்கொண்டனள்.

பாடசாலை துவங்குமுன் சாரதா செய்யவேண்டிய ஆயத்தம் யாவும் செய்தனள். தன் வகுப்புக்கு ஆயத்தம் செய்வதுபோல அவ்வளவு திட்டவட்டமாய் பாடசாலை முழுவதையும் நடத்த ஆயத்தஞ்செய்தனள். மாணவரின் உதவியையும் உற்சாகத்தையும் நாடினள். ஆனால்



அநேக மாணவர் தங்கள் தங்கள் உபாத்தியாரின் அன்புக்கு பங்கம் வருமே என்று பயந்து அவளோடு ஒத்துழைக்கவில்லை. அவள் வகுப்பு மாணவர் மாத்திரம் அவளோடு சேர்ந்துழைத்தனர்.

வசந்தா இணங்கிப்போகும்படி விரும்பினள். பாக்கியமும் புஷ்பமும் விரோதம் பண்ணிக்கொண்டேயிருந்தனர். தகுதியான தலைமை உபாத்தினி வைத்தால் வரும் நன்மைகளைப்பற்றி எடுத்துரைத்து பிள்ளைகளையும் மற்ற உபாத்திமாரையுங்கெடுத்து வைத்தனர். தேறின உபாத்தினிகளிருக்கும்போது தேறாதவளைத் தலைமை வகிக்கச் செய்வதினால் நஷ்டமடைந்த பாடசாலைகளைப்பற்றி எடுத்துக்கூறினர்.

வசந்தாவிடமும்சென்று பேசஆரம்பித்தனர். அவர்கள் அதிசயிக்கத்தக்கவண்ணமாய் அவள் கூறியதுயாதெனில்:—

"அந்த சிந்தையுடன் என்னிடம் பேசவேண்டாம். என் துன்பம் எனக்குப்போதும்."

"அதுசரி அந்த உத்தியோகம் உனக்குக் கிடைத்திருக்க வேண்டியதுதான்" என்றனர். அதற்கு அவள், "அதுபெரியகாரியமல்ல; எனக்கு அந்த உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்று விரும்பினது வாஸ்தவம். கிடைத்தால் பணம் சேர்த்துக் கலாசாலைக்குப் போக ஏதுவுண்டாயிருக்கும். ஆனால் அது இப்போதுள்ள வருத்தத்துக்குக் காரணமல்ல. என் இதயத்தில் பொறாமை உதயமாகியிருக்கிறதென்று காண்கிறேன்." என்றனள்.

"அப்படிச்சொல்லாதே. அது பொறாமையன்று. உனக்குக் கிடைக்கவேண்டிய ஸ்தானம் தகுதியற்றவளுக்குக் கிடைத்திருக்கிறதினால் ஏற்படும் நீதிக்குரிய கோபம்." என்று மற்ற இருவரும் கூறினர்.

அதற்கு அவள் "இல்லை. அது பொறாமையேயொழிய வேறல்ல. மற்றவள் வைத்திருப்பதை அபகரிக்கும்படி ஆசை கொண்டால் அது பொறாமையினாலுதிக்கும் ஆசையே. அவளுக்கு இந்த உத்யோகம் கிடைத்ததில் அவளுடன் சந்தோஷங்கொள்ள ஆசிக்கின்றேன்" என்றனள்.

"அது உனக் குரியதா யிருக்கும்போது அவளுடன் எவ்வாறு சந்தோஷமாயிருப்பாய்?" என்று வினவினர்.

"என்னோடு பேசுவதிற் பயனில்லை. என்னிதயத்தின் அக்கிரம நினைவுகள் எனக்குத் தெரியும் அதைவிட்டுவிலகி அவளுடன் சந்தோஷமாயிருக்க விரும்புகின்றேன்" என்று சொன்னதற்கு,

"அவள் சித்தியடையாவிட்டால் அவ்வேலை வேறொரு ஆளுக்குக் கொடுக்கப்படுமல்லவா?" என்று புஷ்பம் கேட்டனள்.

"அவள் சித்தியடையும்படியாக என்னாலியன்றமட்டும் நான் உதவிசெய்வேன்" என்று உறுதியாய்க் கூறினள்.

"அது என்ன மானங்கெட்ட பிழைப்பு? சுயமதிப்பு வேண்டாமா?" என்று புஷ்பம் கேட்டனள்.

"எனக்கு பெருமையும் வேண்டாம், பொறுமையும் வேண்டாம். நான் இக்ஷணமே அவளிடம் சென்று உங்களிடம் சொன்னவாறே சொல்லி இராசியாக விரும்புகின்றேன். அவளுக்கு வேண்டிய உதவி செய்வதாகவும் வாக்களித்து வருவேன். அப்போதுதான் என் துன்பம் இன்பமாகும்" என்று வசந்தா கூறினள்.

"அவள் உன்னைப்பற்றி என்னசொன்னாள் தெரியுமா?" என்று அவளுக்கு விரோதமாய் மூட்டிவிட்டனர்.

"தெரியாது. எனக்குத் தெரியவும்வேண்டாம். நேரில் பேசிக்கொள்ளுவேன் ஒருவரும் கோள் சொல்லித்' திரியவேண்டாம். எலும்பு கடிக்கும் நாய் ஒன்றை எடுத்துக்கொண்டலையும், புறங்கூறுகிறவர்களோ கொண்டுவந்ததோடு கூட ஒன்றை எடுத்துக்கொண்டலைவர்." என்று கடிந்து கூறினள்.

வசந்தா நேராய் சாரதாவிடம் சென்று சகலசங்கதிகளையும்திறந்து பேசினாள். தனக்குப் பொறுமையிருக்கிறதாகவும் அதை வேரற நீக்கப் பிரயாசப்படுவதாகவும் ஒப்புக்கொண்டனள்.

மற்ற இருவரும் அவள்மீது கோபங்கொண்டு எலும்பு கடிக்கும் நாயைப்பற்றி அவள் சொல்லியதைக் கூறி மாணவர் தங்களை வசந்தா நாய்கள் என்று கூறியதாக எண்ணும்படி வம்பு இழுத்துவிட்டனர். வசந்தா எதற்காக சாரதாவுக்கு உதவிசெய்ய எண்ணுகின்றாள் என்பதைச் சொல்லாமல் அவள் சாராதாவைச் சார்ந்திருக்கின்றாள் என்று எடுத்துரைத்தபடியால் ஏதோ லாபத்தைக் கருதி அவள் அவ்வாறு செய்கின்றாள் என்று யாவரும் எண்ணும்படி செய்து விட்டனர்.

வம்புவளர்ந்தது. பிரிவு ஏற்பட்டது. மாணவருக்குள்ளும் உபாத்திமாருக்குள்ளும் கட்சியுண்டானது வெளியிலுள்ளோர் கேள்விப்பட்டு உள் இரகசியங்களை அறிய ஆசைப்பட்டு வந்து மணிக்கணக்காய் பேசிக்கொண்டிருந்தனர். பாக்கியமும் புஷ்பமும் விடாமல் பேசிக்கொண்டேயிருந்தனர். அனுதாபங்காட்டுவதுபோல் மாயம்பண்ணி புறங்கூறுவதிலும் மூட்டிவிடுவதிலும் வெளிஜனங்கள் பங்கெடுத்தனர். வசாந்தாவிடம் அவர்கள் காரியம் செல்லவில்லை. ஏனெனில் எப்பொழுதும் மற்றவர்களைப்பற்றிப் புகழ்ந்தே பேசுவாள். நற்காரியங்களைக்கேட்க அவர்களுக்குப் பிரியமில்லை. வம்பு வார்த்தைகள் பேச வந்தவர்களுக்கு வசதி யேற்படவில்லை.

சாரதாவும் வசந்தாவும் கோள் கேட்கவே மாட்டார்கள். "நல்ல பிள்ளைகள் புறங்கூறார்கள். நல்லவர்கள் கெட்டபிள்ளைகள் சொல்லும் கோள் கேளார்கள்" என்று அடிக்கடி மாணவரிடம் பேசுவர்.

ஒரு நாள் வசந்தாவிடம் ஒரு பிள்ளை வந்து பொறுமையென்றால் என்ன? அது ஏன் கெட்ட குணம்?" என்று கேட்டனள்.

பொறுமை யென்றால் என்ன என்றும் அதை எவ்வாறு மேற்கொள்ளலாமென்றும் தற்கால காரிய சம்பந்த மில்லாமலே போதிக்கக்கூடியவராயிருந்தனர் அவ்விருவரும் பிள்ளைகள் அதைக்கேட்டு நல்ல பிள்ளைகளாயிருப்போம் என்று தீர்மானித்தனர். இனிஇவர்கள் கோட்சொல்லமாட்டார்கள். கோள் கேட்கவும் மாட்டார்கள் சண்டையிடவும் மாட்டார்கள்



தாயாரம்மாளுக்கு மிகவும் கலக்கமுண்டு, ஆயினும் இதில் பிரவேசிப்பதில பிரயோசனமில்லை என்று எண்ணியிருந்தனர். ஆனால் கோள் ஒன்றும் கேளாது ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தனர்.

சண்டைபோட ஆளில்லாதபடியால் பாக்கியத்துக்கும் புஷ்பத்துக்கும் கஷ்டமாயிருந்தது. தங்கள் பக்கமாயிருந்தவர்கள் எல்லாரும் பின்பக்கம் தங்களுக்கு விரோதமாய்ப் பேசுகின்றனர் என்றறிந்தனர். அடுத்தவர் சிநேகத்தைக் கெடுத்துவைக்க உதவி செய்கின்ற மித்துருக்கள் யாவரும் சத்துருக்களே என்பதை உணர்ந்தனர். பொறுமையுடையோர் இன்பம் பெறுமை ஆச்சரியமன்று என்பதையுமறிந்தனர்.

வசந்தாவைப்பற்றியும் சாரதாவைப்பற்றியும் புறங்கூற வழியில்லை யென்று கண்டு மாணவர் ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் கோட் சொல்லித் திரிய ஆரம்பித்தனர். பாக்கியமும் புஷ்பமும் யாவரோடும் விரோதம் பண்ணிக் கொண்டனர். அவர்கள் வகுப்பு மாணவர்கூட மதிக்க மாட்டார்கள்.

மற்றவர்களனைவரும் வசந்தாவோடும் சாரதாவோடும் ஒத்துழைத்தனர். இவ்விரண்டு பேரும் துண்டுபட்டனர். சாரதாவின் வேலை சித்திபெற்றது. அவள் வேலையினின்று விலக மாட்டாள் என்று பாக்யத்துக்கும் புஷ்பத்துச்கும் தெரிய வந்தது.

பெருந் துக்கம் இவர்களுக்குண்டானது. ஆகாரம் அருந்தார். கண் துஞ்சார், நாளுக்குநாள் இருவரும் மெலிந்து கருத்துப் போயினர். நடை, உடை பாவனையைப் பற்றி கவனமில்லை. சிநேகிதரை இழந்தனர். மதிப்பை இழந்தனர். எங்கும் எப்போதும் இருவராய் இருந்தனர்.

மிசியம்மாள் இரண்டு மாதங் கழித்துத் திரும்பி வந்தபோது இதுதான் பாடசாலையின் நிலைமை. பாக்கியமும் புஷ்பமும் தவிர மற்ற யாவரும் சீரும் சிறப்புமா யிருக்கக் கண்டனர். இவ்வி வரின் தோற்றமும் மிசியம்மாளை பிரமிக்கச் செய்தது. தாயாரம்மாளிடம் இவ்விருவரைப்பற்றியே விசேஷமாய் விசாரித்தனர்.

தாயாரம்மாள் நடந்தவை யாவற்றையும் எடுத்துக்கூற மிசியம்மாள் நடந்தவற்றை நாடகம் போலெண்ணிக் கவனித்தனர்.

"பிரவேசிக்காமலிருந்தது உத்தமம். ஒவ்வொருவரும் தாங்களே அநுபவத்தால் கற்றுக்கொள்ள வேண்டும். இன்பத்தையும் சுகத்தையும் கெடுக்கும் சக்தி வாய்ந்த கொடும் விஷம் பொறுமை என்பதையும், அதை மேற்கொள்ளும் வழி எவ்வாறு என்பதையும், புறங் கூறுகிறவர்களை நம்ப முடியாதென்பதையும், நமது பிள்ளைகள் கற்றுக் கொண்டால், எழுத, வாசிக்கக் கணக்குப் போடக் கற்றுக்கொள்வதிலும் சிறந்தவற்றைக் கற்றுக் கொண்டனர் என்று எண்ணுகின்றேன். அதே பாடத்தை பாக்கியமும் புஷ்பமும் கற்றுக்கொள்வர். ஒருவேளை இதற்குள் கற்றுக் கொண்டிருப்பார்கள். இதைப்பற்றி அவர்களிடம் நான் பேசமாட்டேன், எனக்குத் தெரிந்ததாகவும் பாவித்துக் கொள்ளேன்." என்று மிசியம்மாள் சொன்னார்கள்.

அம்மாள் எதிர் பார்த்தபடி பாக்கியமும் புஷ்பமும் மனங்கசந்தழுது தாங்கள் செய்த காரியங்களை நினைத்து விசனப்பட்டு, பொறுமையின் பலனாக வந்த துன்பங்களைப்பற்றி உணர்ந்து, ஜெபித்து பகிரங்க அறிக்கை செய்து தீய வழிகளை விட்டுவிடுவோம் எனத் தீர்மானித்தனர்.

மிசியம்மாள் மறுநாட்காலை கூட்டம் நடத்தும்போது இவர்கள் எழுந்து தங்கள் பொறுமையைப்பற்றியும் சத்தியத்தைப் புரட்டினதைப்பற்றியும், பட்சமற்ற காரியங்களைப் பற்றியும் விசனத்தோடும், வெட்கத்தோடும், அறிக்கையிட்டனர். சாரதாவும் வசந்தாவும் தங்களுக்கு மன்னிக்கவேண்டும் என வேண்டினர். பிள்ளைகளும் தாங்கள் அவர்கள் மதிப்புக் குரியவர்களாகும்படி தங்களுக் கொரு தவணை கொடுக்கவேண்டு மெனக் கெஞ்சினர்.

மிசியம்மாள், உபாத்திமார், பிள்ளைகள் யாவரும் இதைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தனர். சாரதா சகலத்தையும் மன்னித்து மறந்து அவர்களை எப்போதும்போல நேசிப்பதாகக் கூறினள். விரோதமா யிருந்தவர்கள் யாவரும் அறிக்கை செய்து சமாதானமானார்கள்.

"திடீரென்று நான் போக நேரிடாமலிருந்தால் இவை யாவும் நேரிட்டிருக்காது. பத்தாம் வகுப்புத் தேறினவர்கள் கலாசாலைக்குப் போகும்படி பணம் கிடைத்திருக்கிறதென்றும், சாரதா கலாசாலைக்குப் போகமுடியாதபடியாலும் தலைமை வகிக்கும் சக்தி வாய்ந்தவளா யிருக்கிறபடியாலும் அவளை ஏற்படுத்துவது ஏற்ற காரியமென்றும் சொல்லி யிருப்பேன். இதை அறிந்திருந்தால் இக்காரியங்களொன்றும் நடந்திருக்காது. இவைகள் வந்தது எனக்கு துக்கமல்ல. பொறுமையின் கொடுமை இன்னதென்று அறிய இடமிருந்தது. எவ்வாறு பொறுமையை நேற்கொள்ளலாமென்று அநுபவத்தில் கண்டிருக்கின்றீர்கள். இவ்வளவு இன்பந்தரும் நன்மையடைவதற்கு நீங்களடைந்த துன்பம் ஈடல்ல. இனி பொறுமையென்னும் தீமை உங்களையணுகாது." என்று பேச,

மாணவர் ஏகோபித்து "அணுகவே அணுகாது" என்று கூறினர்.

மிசியம்மாளும் அது அநுபவ சாட்சியென அறிந்துகொண்டனர்.

---

## வேத வாசிப்பு

யோபு 5 : 2 பொறுமையின் புத்தியீனம்
சங். 37 : 1 பொறுமைக்காரரின் முடிவு
ரோம. 1 : 23 பொறுமையாகிய பாவம்
1 கொரி. 3 : 3 பொறுமை மனுஷ மார்க்கத்திற்குறியது
யாக். 3 : 14—18 பொறுமையின் பேத்தனம்
கலா. 5 : 19 பொறுமை மாமிசத்தின் கனி

---



# அரிசி ஆசிரியன்


"என்னைப் பின்பற்றுங்கள்; என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்ன குருவிடம் கற்ற சீஷன் இந்த அரிசி ஆசிரியன் என்று அபிப்பிராயப்பட வேண்டியதிருக்கின்றது. 'உயர் பதவி யடைய உபத்திரவமே யாதாரம்' என்பதை இயேசு இவ்வுலகிலிருந்தபோது போதித்தும் சாதித்தும் வந்தனர். சிருஷ்டி கர்த்தாவின் சிந்தை இயற்கையில் விளங்குகின்றதே யன்றி இயற்கையிலிருந்து இயேசு இப்பாடங் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவை ஏற்றுக்கொள்ள மனமற்றோருக்கும் இயற்கை போதிக்க முன்வருகின்றது.


நெல் விதையை ஊற வைக்கும்போதே முதல் உபத்திரவம் ஆரம்பிக்கின்றது. சேறும் சகதியுமான கழனியில் அதை விதைக்கும்போது அரிசியானது அசுத்தத்தின் மத்தியில் ஜீவிக்க வேண்டிய திருக்கின்றது. ஆயினும் அசுத்தம் அதை அணுகாது. உமியினால் மூடப்பட்டிருக்கின்றது. துன்பத்தின் மத்தியிலும் மேலுயர்ந்து எழுந்து வளரும் சக்தி யதற்கு உண்டு. உன்னத ஜீவியம் செய்யக் கண்ணுங் கருத்துமாயிருக்கிறபடியினால் அது துன்பத்தைப் பெரிதாகக் கருதுகிறதில்லை. தாது வர்க்கங்களுக்குள் புதைக்கப்பட்டாலும் தான் தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது என்னும் எண்ணம் உயர்வுறச் செய்கின்றது. அதற்கு மேலான ஜீவ வர்க்கத்தையும் எட்டிப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டு. அதுவே அதின் இலக்கு. "என்ன வந்தாலும் வரட்டும், உயிர் போகட்டும், யான் இலக்கை யடையுமட்டும் சும்மாயிருக்கமாட்டேன். துன்பங்களை சகிப்பேன், மேற்கொள்ளுவேன்" என்று சொல்லும் தன்மை வாய்ந்தது. சேற்றையும் சகதியையும் விட்டுக்கிளம்பி நாற்றாய் வளருகிறது வாஸ்தவமென்றாலும் அந்த சேறு சகதியுள்ள அசுத்தத்தை நீக்கி ஆகாரப்பொருளை அபகரிக்கும் தன்மை மெச்சிக்கொள்ளத்தக்கதே! தீயவை நீக்கி நல்லவை ஏற்குந் தன்மையே சித்திக்கு இரகசியம்.


அழுக்கின்றி வெளிவந்தபோதிலும் அதின் அழகையும் பசுமையையும் பாருங்கள். அந்த நாற்றையும் பிடுங்கி வேறு இடத்தில் நடவேண்டிய காலம் வந்தவுடன் அதைப் பிடுங்கி அந்த வேரில் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்கு நீங்கக் கழுவி சுத்தமாக்கி வேறு இடத்திலே நடுகின்றோம். வேரை அடித்து அடித்துக் கழுவும்போது எவ்வளவு வேதனையுண்டு. அதையெல்லாம் சகித்து வளர்ந்து, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தருகின்றது.

தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய கதிர் பெருமையைக்களைந்து, தாழ்மையை அணிந்து, தரைமட்டும் குனிகிற காட்சியைப் பாருங்கள். எவ்வளவு தாழ்மையை அணிந்தபோதிலும் கத்திக்கு இரை யாகவேண்டியதுதான்—அடியோடே அறுத்துக் கொண்டுபோய் அடித்து மணிகளை உதிர்த்து, மாடுகளின் கால்களுக்குக் கீழே மிதிபடக் கொடுத்து கஷ்டப்படுத்தினபோதிலும் நெல் காட்டும் பொறுமையைப் பாருங்கள் தாவர வர்க்கத்தி லுதித்தும் திருப்தியில்லை. உயர் பதவி யடையும்படி இன்னும் உபத்திரவமடைய ஆயத்தமா யிருக்கின்றது.

உமி நீங்கும்படி இயந்திரத்தி லரைக்கப்படுகின்றது. குத்தப்படுகின்றது. இடிக்கப்படுகின்றது. மாவாக்கப்படுகின்றது. நெருப்பின் மே லேற்றப்படுகின்றது—வெந்தபின் மனுஷருக்கு ஏற்ற ஆகாரப்பொரு ளாகின்றது. மனுஷனுடைய இரத்தத்தோடு கலந்து ஜீவ




















வர்க்கத்தில் பிரவேசித்து இலக்கை யடைந்த சந்தோஷத்துக்குட் பிரவேசிக்கின்றது. பாடின்றிப் பலனில்லை. குருசின்றிக் கிரீடமில்லை, உபத்திரவமின்றி உயர்வில்லை. சுயதானமின்றி சமாதானமில்லை— பிறா நயமின்றி சுயநயமில்லை. ஆசிரியருள் ஆசிரியன் அரிசி ஆசிரியனே!

சென்னை,
செப்டெம்பர், '37.

பிரிய பிள்ளைகாள்!

நமது பிரயாணத்தைப் பாரா பட்டணத்திலிருந்து இன்று துவங்குவோம். நாம் கப்பல் ஏறி பாரா நதி வழியாய் நதி அரசனாகிய அமேசானை அடைவோம். நதியில் பிரயாணம் செய்வது போல் காணப்படவில்லை. ஏதோ கடலில் பிரயாணம் செய்வதுபோல் தோன்றுகின்றது. பாரா பட்டணத்தார் கடல் என்று சொல்வதும் சரியே. அடுத்த கரையைக் காணவில்லையே! அமேசான் நதியின் முகத்துவாரத்தில் ஸ்காட்லாந்து தேசத்தை வைத்துகொள்ளக் கூடுமென்பது நமது காப்டன் அபிப்பிராயம். உலகத்திலுள்ள எல்லா நதிகளைக் காட்டிலும், நமது அரச நதி தான் ஏராளமான தண்ணீரைக்கொண்டு வருகின்றது. எங்கேயிருந்து வருகின்றது? ஏறக்குறைய 2,000 மைலுக்கு அப்பால் ஆண்டீஸ் மலையில் புறப்படுகின்றது. இதற்கு அருகில் ஒரு வெள்ளிச் சுரங்கம் உண்டு. நதி அரசனுக்கு 14 உப நதிகள் உண்டு. ஆண்டீஸ் மலையில் மழை பெய்யும்பொழுது, நமது நதியில் தண்ணீர் வெள்ளம் புரண்டு ஓடும். தென் அமெரிக்காவின் வடபாகம் முழுவதும் தண்ணீரால் நிரப்பப்பட்டு சமுத்திரம் போல் தோன்றும். இதன் நீளம் 4,000 மைல்.

நாம் ஒருநாள் பிரயாணம் செய்து, இரவில் ஓரிடத்தில் தங்குவோம். மறுநாள் முழுவதும் அந்த இடத்தில் நாம் பார்க்கவேண்டிய சில காரியங்கள் உண்டு. இவ்விடத்தில் விசேஷமாய் கிடைப்பது ரப்பர் ஒவ்வொரு ரப்பர் பழத்திலும் 3 விதைகள் உண்டு. இவ்விதைகள் முற்றின பழத்திலிருந்து வெடித்து தூரம்போய் விழுந்து அங்கேயிருந்து முளைக்க ஆரம்பிக்கும் இவ்விதைகளுக்கு ஈரமும் உஷ்ணமும் வேண்டும். நமது இந்தியா தேசத்தில் மலையாளத்தில் ரப்பர் மரங்கள் வளர்க்கின்றார்கள். இவைகள் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டவை: சிறு செடிகள் முளைத்ததும் வெகு சீக்கிரமாய் வளரும். செழிப்பாய் வளர்ந்தால் ஏழு வருஷத்துக்குள் ரப்பர் பால் எடுக்கலாம். அமேசான் கரையில் ஆயிரக்கணக்கான இந்தியர் ரப்பர் எடுக்கும் வேலையில் இருந்து தம் வாழ் நாட்களைக் கழிக்கின்றார்கள். இவ்விடத்திலிருந்து ஆயிரம் மைலுக்கு ரப்பர் தோட்டங்கள் உண்டு. ஓர் இரவு நாம் ரப்பர் தோட்டத்தில்த் தான் தங்கப்போகிறோம். உங்களுக்கு தெரிந்தபடி தற்காலம் ரப்பர் அதிகமாய் உபயோகப்படுகின்றது. இயந்திரங்களுக்கும், ரப்பர் உடுப்புகளுக்கும், சப்பாத்துகளுக்கும் இன்னும் எண்ணிறந்த காரியங்களுக்கும் ரப்பர் உபயோகப்படுகின்றது.

ரப்பர் தோட்டங்கள் வந்துவிட்டதானால் நாம் இறங்கி, ஒரு தோட்டத்தில் தங்குவோம். இந்த தோட்டத் தலைவர் வீட்டுக்குச் செல்வோம். தலைவர்கள் சாதாரணமாய் ஐரோப்பியர்தான். அவர்களும் ஓலையினால்செய்த வீடுகளில்தான் குடியிருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவிசெய்ய இந்தியரை அமர்த்துகின்றார்கள். ஆனால் இந்தியரைப்பிடித்து கட்டாயம்செய்து ரப்பர் எடுக்கும் வேலையில் சேவனை வைக்கின்றார்கள். அவனுக்கு ரப்பர் பால் எடுக்கும்படி சில ஆயுதங்கள் கொடுப்பார்கள். ஒரு வகையான உடுப்பும், தங்க ஒரு சின்ன ஓலைக் குடிசையும் கிடைக்கும். ஆனால் இந்த ஆயுதமும், உடுப்பும் விலைக்கு கொடுக்கப்படும். இதின் விலை அதிக

மாயிருக்கும். ஒவ்வொரு இந்தியனும் வேலைசெய்து, சம்பளம்வாங்கி, தான்வாங்கின ஆயுதத்துக்கும், உடுப்புக்கும் விலை கொடுக்கவேண்டும். இந்த தேசத்தின் சட்டம் என்னவென்றால், ஒரு ஐரோப்பியனுக்கு, ஒரு இந்தியன் கடன் கொடுக்கவேண்டுமானால், கொடுத்துத் தீர்க்குமட்டும் வேலை செய்யவேண்டும். இல்லாவிட்டால் தேச அதிகாரிகள் அவனைச் சவுக்கால் அடித்து, கட்டாயப்படுத்தி, வேலையில் வைப்பார்கள் தலைவர்கள்செய்யும் தந்திரம் என்னவென்றால், சேவகர்கள் ஓடிவிடாதபடி, செய்யும் வேலைக்குக் கொஞ்சச் சம்பளமும், உடுப்புக்கும், ஆயுதங்களுக்கும் அதிக கிரயம்வைத்து, எப்பொழுதும், கடன்காரர் ஆகவே வைத்துக்கொள்ளுவது உண்டு.

நமது தலைவர் கூடிய மட்டும் நல்லவர். வேலைக்காரர் சந்தோஷமாய்க் காணப்படுகின்றார்கள். இவர் தமது சேவகர்கள் ஒவ்வொருவனுக்கும் 100 ரப்பர் மரங்கள் கொடுத்திருக்கின்றார். அவன் ஒவ்வொரு மரத்திலும் வெட்டி பால் எடுத்து தினந்தோறும் காய்ச்சவேண்டும். தலைவர் ஒவ்வொருநாளும் 7 பவுண்ட் நிறையுள்ள ரப்பர் சேர்க்கக்கூடும். பின்பு இவர்தன் சரக்குகளை பாரா பட்டணத்துக்கு கொண்டுபோய், வடஅமெரிக்கா ஐரோப்பிய தேசங்களுக்கு விற்பனை செய்கின்றார். இவ்விடத்தில் குடியிருப்பது அதிக கஷ்டம். பலவிதமான காய்ச்சலும், வாத ரோகமும் வரக்கூடிய இடம். இந்தியர்மட்டும் வேலை செய்யக்கூடிய இடம்.

மறு காலையில் ரப்பர் தோட்டத்தைவிட்டு, ஆயிரமைலுக்கு அப்பால் இருக்கும் மனௌஸ் பட்டணத்துக்குப் போகவேண்டும். ஆகா தூரத்தில் கவனித்துப் பார்ப்பீர்களானால் என்ன பயங்கரமான காடு. எவ்வளவுதூரம் போனாலும் ஒரு அடிகூட நிலம் தெரியாது. உயரமான மரங்களும், பலவிதமான படர்செடிகளும் நிறைந்திருக்கின்றன. என்ன அழகான புஷ்பங்கள் பூத்து மலர்ந்து கிடக்கின்றன! ஓர் பெரிய நீண்ட பந்தல்போல் தோன்றுகின்றது. மரங்களுக்கு உச்சியில் சில இலைகளும் பூக்களும் தெரிகின்றது. அடி மரங்கள் படர் செடிகளால் மறைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு இருட்டாகவும், பச்சையாகவும் தெரிகின்றது. காட்டில் நின்றால் சூரியனைப் பார்க்கவே முடியாது. இதென்ன அதிசயம், பூக்கள் பச்சை, ஊதா, மஞ்சள், வெள்ளை நிறங்களில் காணப்படுவதும், அதின் மத்தியில் பறவைகளும் பல வர்ணங்களுடன் பறப்பதும், இனிய தொனியுடன், பாடுவதும் கேட்கவும், பார்க்கவும் மனதுக்கு ரம்மியமா யிருக்கின்றது. ஆகா இன்னும் நதிக்கரையில் கவனித்து பார்ப்பீர்களானால் அழகான லீலிப் புஷ்பங்கள் பூத்து பலவகையான பச்சை பூண்டுகளின் மத்தியில் கண்ணைக்கவரத்தக்க வண்ணம் தொங்குகின்றன. இந்த காட்டில் நுழைந்துசெல்ல பிள்ளைகளுக்கு இஷ்டம். ஆனால் பயங்கரமான ஊர் வனங்கள் உண்டாம். நம்மைக் கடித்தால் நமக்குப் பிழைப்பு கிடையாது. குரங்குகள் வெகு உல்லாசமாய் மரத்துக்கு மரம் தாவி விளையாடுகின்றன. இக்குரங்குகள் தரையில் இறங்காமல், ஆயிரம் மைலுக்கு கொப்புகளில் தாவித் தாவிச் செல்ல முடியும். இதென்ன வித்தியாசம், இவ்வளவு அடர்ந்த காட்டின் மத்தியில் ஒரு பெரிய பட்டணம், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களுடன் காணப்படுவது வெகு விந்தை இப்பட்டணம் ஐரோப்பியர்களும், இந்தியரும் நிறைந்தது. இதில் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்ய ஆள்களைப் பிடிக்கத்தக்க கண்காணியார் அநேகர் உண்டு. துறைமுகத்தில் பெரிய கப்பல்களில் ரப்பர் ஏற்றுமதி செய்யப்படுகின்றது இப்பட்டணத்தார் எல்லா பட்டணத்தாரைப்போல, எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்கின்றார்கள். கம்பியில்லாத தந்திகள், மின்சார விளக்குகள், தண்ணீர் குழாய்கள், ரேடியோ முதலானவைகள் உண்டு. இப்பட்டணம் வியாபாரத்தில் பேர் போனது. சுற்றிலுமுள்ள நாடுகளுக்கு எல்லா சாமான்களும் இங்கேயிருந்துதான்



போகவேண்டும் இதின் பெயர் மனௌஸ். ஆதியில் குடியிருந்த மனௌஸ் என்னும் இந்திய ஜாதியாரின் பேரால் இப்பட்டணம் அழைக்கப்படுகின்றது.

இதற்குமேல் நாம் கப்பலில் பிரயாணம் செய்வது கூடாத காரியம். அமெசான் நதியில் ஆயிரம் மைல்பிரயாணம் செய்துவிட்டோம். முதலாவது ரப்பர் தோட்டங்களையும், காடுகளையும், இப்பட்டணத்தையும் பார்த்தோம். இன்னும் போகப் போக சில ரப்பர் தோட்டங்கள் உண்டு. காடுகளும் உண்டு. பின்பு அமெசான் நதியை மலைச் சரிவில் இறங்கி வரப் பார்க்கலாம். சமுத்திரம் போன்ற இவ்வளவு பெரிய நதி உலகின்கண் எவ்விடமும் பார்க்கமுடியாது. இப்போது நாம் காசிகாகரி என்னும் உபநதியின் முகத்துவாரத்தில் சென்று, இதின் வழியாய் ஓரின்கோ நதிக்குள் செல்வோம். அந்த ஓரின்கோ நதியில் செல்வோமானால், நம்மை அட்லான்டிக் சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதின்பிறகு நாம் அடுத்த பிரயாணம் எங்கே போகலாமென்று யோசித்துப் பின் புறப்படுவோம்.

இப்படிக்கு,<br>
உங்கள் அன்பை மறவாத,<br>
ஜேன்பென்.

சென்னை,<br>
1-9-37.

---

## சுகாதாரக் குறிப்புகள்

### பிளியூரிசி

DR. H. LINN.

இவ்வியாதி சுவாசாசயத்தைச் சுற்றிலுமுள்ள ஜவ்வு போன்ற பிளியூரா என்னும் உரையின் வீக்கத்தினால் உண்டாகின்றது. தோள் பட்டையின் பக்கத்தில் ஒருவிதமான வலியுண்டாகும். இருமலும் இருக்கும். அதனால் வேதனையதிகம். அதிகமாய் காய்ச்சல் ஏறுவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்துகொண்டே வரும். நன்றாய் சுவாசிக்கும்போது வேதனை அதிகமாயிருக்கிறபடியால் சீக்கிரம் சீக்கிரம் மூச்செடுக்க வேண்டியதிருக்கும்.

இவ்வியாதியைத் தடுக்க ஓர் ஆள் களைப்படைந்திருக்கும்போது பனி வாடையிலிருக்கக்கூடாது. காற்றோட்டமில்லாத அறைகளி லிருக்கவுங் கூடாது. காற்றோட்டமுள்ள அறைகளில் நன்றாய்ப் போர்த்துக்கொண்டு படுத்துறங்கலாம்.

இவ்வியாதிக்கு சிகிச்சை செய்யவேண்டுமானால் வியாதியுள்ள ஆளை காற்றோட்டமான அறையில் படுக்கவைக்க வேண்டும். வாடை யடிக்காத காலமாயிருந்தால் வெளியே படுக்க வைக்கலாம். சுவாசாசயம் வீங்கியிருப்பதால் அதிக ஆகாயம் உட்கொள்ள வழியில்லை. கொஞ்சம் உட்கொண்டாலும் அது சுத்த ஆகாயமா யிருக்கவேண்டும். மார்பின் கீழ் பாகத்தில் அசைவு அதிகமாய் இல்லாதபடி அதன்மூலமாய் அதிக வலி வாராதபடி கொஞ்சம் துணியைச் சுற்றிக் கட்டி வைக்கலாம். சுடு தண்ணீர் சீசாக்களைக் கொண்டு வலியுள்ள பாகத்தில் சூடுண்டாக்கி வேதனையைப் போக்கலாம். இரத்த ஓட்டத்திற்கும் இது உதவும். மார்பில் கடுகு பிளாஸ்திரி போடலாம்.

ஐயோடின், லைம் (Iodine and lime) ஒரு கிரேய்ன் மாத்திரையாக மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை சுடு தண்ணீரில் உட்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மலச் சிக்கலேற்பட்டால் மாக்னீஷியம் சல்பேட் (Magnesium Sulphate) ஒரு தடவை சாப்பிடலாம்.

ஜல பதார்த்தமே தவிர வேறு ஆகாரம் கிடையா. போதிய அளவு தண்ணீர் சாப்பிட வேண்டும். மாத்திரையோடு 1 பாத்திரத்தில் சுடு தண்ணீர் வாங்கி சாப்பிடலாம்.

ஐந்து அல்லது ஆறு நாளுக்குள் சுகங் கிடைக்கவில்லையென்றால் வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டும். கோத்து நிற்கும் நீரை வைத்தியசாலையில் கிழித்து வெளியேற்ற வேண்டும்.

## இடப்பிசகு.

கை விரலிலாவது கால் விரலிலாவது இடப்பிசகு நேரிட்டால் இடத்தில் விழும் சுடக்குச் சத்தம் கேட்கும்வரையில் இழுத்து விடவேண்டும். கீழ்த் தாடை எலும்பு இடம் விட்டு விலகினால் வாய் மூட முடியாமல் நின்றுவிடும். உதவிசெய்ய விரும்புகிறவர் தன் பெருவிரலில் துணியைச் சுற்றிக் கீழ்த் தாடையை கீழே அமிழ்த்திப் பின்னாகத் தள்ளிவிட வேண்டும். அப்படியானால் அது இடத்தில் போய்ச் சேர ஏதுவுண்டாகும். இரண்டொரு நாள் அதே இடத்தில் இருக்கத்தக்கதாகக் கட்டுப் போடவேண்டும். மற்ற எலும்புகளில் இடப்பிசகு உண்டானால் வைத்தியர் மூலமாய் சிகிட்சை செய்யவேண்டும். எலும்பு இடப்பிசகு நீடித்திருக்கும்படி விட்டு விட்டால் சுகப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

## வெட்டுக் காயம்.

பெரிய இரத்தக் குழாய்களில் சேதம் ஏற்படாவிட்டால் காயத்தை நன்றாய் கழுவி (1% Chloramine T. Solution) 1% குளோரமைன் டி சொலுஷனையாவது அல்லது அது போன்ற விஷ கொல்லிகளைத் தோலைச் சுற்றிலும் தடவி விட வேண்டும். நீர் ஊற்றுப்போல் இரத்தம் வடிந்துகொண்டிருந்தால் சிறு நாடி இரத்தக் குழாய்கள் காயப்பட்டிருக்கின்றன வென்பது தெரிகின்றது. காயப்பட்ட இடத்தில் விரலை வைத்து அழுத்திக் கொண்டிருந்தால் இரத்தம் வடிதல் நின்றுவிடும். கையிலே அல்லது காலிலே உள்ள பெரிய நாடி இரத்தக் குழாய் சேதமடைந்தால் காயத்துக்கு மேலே ஒரு கட்டுப்போட்டு ஒரு பெலமான குச்சியை ஊடே கோத்து முடிப்பு நாடிக் குழாயை அழுத்தத்தக்கதாய் இறுக்கி முறுக்கிச் சுற்றவேண்டும். அரை மணி நேரத்திற்கு அதிகமாகக் கட்டுப் போடக்கூடாது. இரத்த ஓட்டத்துக்கு அபாயம் உண்டாகும். சரீரத்திலும் தலையிலும் ஏற்படும் மற்றக் காயங்களுக்கு சுத்தமான பஞ்சு வைத்து இறுக்கிக் கட்டுப் போடவேண்டும்.

## சுளுக்கு.

திடீரென நரம்போ தசையோ திருகிக்கொள்வதனால் சுளுக்கு ஏற்படுகின்றது. பாதத்திற்கு மேலுள்ள பாகத்தில் அதாவது அங்குள்ள பூட்டில் சுளுக்கு ஏற்பட்டால் நடக்கக்கூடாது. சுடு தண்ணீர் மூலமாய் சூடுண்டாக்க வேண்டும். தாங்கக்கூடாத சூடு அவசியமில்லை. இது பிரயோஜனப்படவில்லையென்றால் குளிர்ந்த தண்ணீர் விட்டுப் பார்க்கலாம். பிறகுஅந்த பாகத்தைத் துணியினால் சுற்றிக் கட்டிவைக்க வேண்டும். நடக்கக்கூடாது. வீக்கம் வற்றினவுடன் எண்ணெய் தேய்த்து உருவிவிட வேண்டும்.



## பிள்ளைகளுக்கேற்ற படங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்






## முதன்மையை நாடினேன்

சில வருஷங்களுக்கு முன் பெரிய பட்டணமொன்றில் கைத் தொழிற் கண் காட்சிசாலையை சந்தித்தேன். இது ஒரு பெரிய சிங்காரவனத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு பலவிதமான காரியங்கள் காணப்பட்டன. ஒரு பெரிய தொழிற்சாலையும் அங்கிருந்தது. அதில் அநேக அதிசயமான காரியங்கள் செய்யும் முறையைக் காண்பிக்கத்தக்கதாய் வைக்கப்பட்டிருந்தன. இயந்திரங்களசைவினுலோடும் சக்கரங்களின் சத்தம் ஏராளம். அங்கு ஒருவரோடு ஒருவர் பேசுவது கஷ்டம். படக்காட்சிசாலை ஒரு பக்கம் விசித்திர வினோதங்களையுடைய கட்டிடம் ஒரு பக்கம். சித்திரப் பூக் கைத் தயல் செய்யும் ஐயர்லாந்து தேசத்தார் ஒரு பக்கம். பாடகர் கூட்டத்தால் நிறையும் அரங்கசாலைப் பீடம் ஒரு பக்கம். உலகிற் சிறந்த வாத்தியக் கூட்டத்தார் ஒரு பக்கம்.

முதல் நாள் என் சிநேகிதனோடே நான் வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தேன். திடீரென பக்கத்தில் பெரிய சத்தமிட்டுக்கொண்டு ஒரு சிறிய நீராவி இயந்திரம் ஓடிற்று. வண்டித் தொடரிருந்தன. அதில் சில பிள்ளைகள் ஏறிச் சென்றனர். அது சிரிப்புக் கிடமாயிருந்தது. ஏனெனில் அது "எல்லாரும் வாருங்கள் என் வேலையைப் பாருங்கள்" என்று தன்னையே முக்கியப்படுத்திப் பேசினதுபோல் சத்தமிட்டோடினது. அது பெரிய வேலை செய்யவில்லை சிறிய பிள்ளைகளை வைத்து கொஞ்ச தூரம்மாத்திரம் இழுத்துச் சென்றது பெரிய வேலைக்கு உதவாது. சாமான் வண்டிகளை இழுக்கமுடியாது. ஏற்றம் இறக்கங்களிற் செல்லமுடியாது. எனினும் மேன்மையை நாடினது.

இந்த இயந்திரத்தைப் போன்றவர்கள் ஏராளம். மிகுந்த சத்தம் செய்வார்கள். ஓடி யாடித் திரிவார்கள். ஆனால் அவர்களால் உலகத்துக்கு யாதொரு நன்மையுமில்லை. முதன்மையை நாடுவர். மற்றவர்கள் தங்களைப் பார்த்துப் புகழவேண்டும் என்று எண்ணுவர். தங்களை மதிக்கவேண்டும் என்றும் தங்கள் சொல் கேட்கவேண்டுமென்றும் விரும்புவர். எவரேனும் அவர்கள் காரியத்தில் தலையிட்டால் கோபப்படுவார்.

நம்மில் அநேகர் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். முதன்மையை நாடுகின்றோம். உலகுக்கு உதவி, உயர்வடைய உன்னல் உன்னதமானதே. ஆனால் மாய ஜீவியத்தோடு வீண் பெருமைக்காக சுய நயத்தைக் கருதி நாடினால் அது நன்றன்று. மற்றவர்களுக்குரிய உணர்ச்சியையும் உரிமைகளையும் மறக்கும்படி செய்தால் அது நன்றன்று. சுயமதிப்பை நாடி பெரிய எண்ணத்தோடு பாசமற்ற ஜீவியம் செய்தால் அது நன்றன்று.

மேன்மை யடையும்படி மேன்மையான முறை யாதெனில் முதன்மையை நாடுவ தல்ல. பேர் எடுப்பதல்ல அன்பும் பட்சமுமான கிரியைகளால் அநேகருக்குப் பணி புரிவதே!

கடவுளின் மெய்யான பணிவிடைக்காரர் அவருக் கென்று அற்பமான வேலையையும் செய்வதில் களிகூறுவார். இன்பத்துடனும் மகிழ்வுடனும் இரண்டாவது ஸ்தானம் வகிப்பதில் மேன்மையுண்டு. மகா மேன்மைக்குரிய ஸ்தானம் தாழ்மையுடனும் அன்புடனும் பணிபுரியும் கடைசி ஸ்தானமே!

(மௌன மணி நேரக் குறிப்புகள்).

---



## அறைகள் நூறு அமைந்த அரண்மனை

இளவரசன் சத்தியவந்தனுக்கு இருந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. இதற்கு முன் தன் தந்தையிட மிருந்து எக்கடிதமும் வந்தது கிடையாது ஆதலால் இக்கடிதத்திலுள்ள விஷயம் முக்கியமானது என் றறிந்திருந்தான். மேலும் ராஜ்ய சுற்றுப் பிரயாண காலத்தில் சிறு விஷயங்களைக் கவனிக்க நேர மிராது.

கடிதத்தைப் பிரித்துப் படித்தனன். அதில் பின்வருமாறு எழுதி யிருந்தது:—

"பிரிய பிள்ளாய்!

ஒரு காலத்தில் என் ராஜ்ய மெல்லாம் கட்டி ஆளும் அரச னுவாய். எவ்வாறு அரசு புரிவதெனக் கற்குங் காலம் வந்துளது. கடிதங் கொண்டுவந்த பிள்ளையாண்டான் உன்னை அறைகள் நூறு அமைந்த அரண் மனைக்குக் கூட்டிச் செல்வான்.

இதுவே உனது இல்லம். உனது இன்பம் உன்னாலேயே ஆக்கப்பெறும். உன் பெற்றோர் புகட்டின யாவும் மறந்தனை போலும். இப்போது நீயே உன் உபாத்தியாயர்.

அன்பார்ந்த தந்தை
அரசன்."

இளவரசனுக்கு அளவிறந்த சந்தோஷம் உண்டானது. கரகோஷம் செய்தனன்.

"வா. என் அரண்மனையை எனக்குத் தா" என்று கடிதங்கொண்டுவந்த பிள்ளையாண்டானைக் கூப்பிட்டு அவசரப்பட்டான்.

அவனும் அரச குமாரனை அவசரமாய் அழைத்துச் சென்று அரண்மனையண்டை கொண்டுவந்து விட்டனன்.

"தா, சீக்கிரம் என் திறவுகோலைத் தா" என்று இளவரசன் கேட்டனன்.

"ஐயோ, அதிக விசனம். உன் தந்தையார் அத்திறவுகோலைத் தரவில்லையே! அதற்காக நீ காத்திருக்கவேண்டும் என்றனரே" என்று பிள்ளையாண்டான் கூறினன்.

"காத்திருக்கவா? எதற்காகவும் இளவரசன் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?" என்று கோபமாய்க் கேட்டனன் இளவரசன்.

"எனக்கு அதைப்பற்றித் தெரியாது. அரச கட்டளைப்படி நான் இப்பொழுதே போகவேண்டும்" எனப் பிள்ளையாண்டான் பொறுமையுடன் மொழிந்து அகன்றனன்.

காத்திருப்பதன்றி வேறு வழியில்லையாகையால் இளவரசன் படி மீதமர்ந்தனன். ஓர் ஏழை வந்து பிச்சை கேட்டனன்.

அதற்கு இளவரசன் கோபத்துடன் "தூரப் போ" என்று துரத்தினன்.

சிறு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்ததை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தனன். அப்பொழுது ஒரு பெண் பிள்ளை அழுதுகொண்டு தரையைத் தடவித் தேடிப்

பார்த்துக் கொண்டிருக்கையில் "அது என்ன?" என்று இளவரசன் வினவ, "என் காலணுக் காணுமற் போய்விட்டது, தேடுகிறேன்" என்று மொழிந்தனள்.

"பரவாயில்லை" என்று இளவரசன் பட்சமாய்ப் பேசிப் பணங் கொடுத்தனன்.

"அதிக வந்தனம்" என்று கூறிப் பணத்தைப் பெற வரும்போது ஏதோ ஒன்றைக் குனிந்து எடுத்தனள். "இது யாருடையது?" என வினவினள். அது பொன்னினுற் செய்த திறவுகோலாயிருந்தது.

"ஏன்? ஒரு வேளை அரண்மனைத் திறவுகோலாயிருக்க வேண்டும்" என்று சொல்லி நன்றி கூறிப் பெற்றுக் கொண்டான்.

படியில் ஏறித் திறவுகோலைக் கதவில் வைப்பதற்குள்ளாகக் கதவு திறவுண்டது. ஆனுல் அறைகள் அனைத்தும் அடைபட்டிருந்தன. சுவர்களிலிருந்த அழகிய படங்களைப் பார்த்து மகிழ்ந்தனன்.

கடைசியில் பிள்ளையாண்டான் அநேகப் பணிவிடைக்காரருடன் வந்து சேர்ந்தனன்.

"சாவிகளெல்லாம் ஏன் கொண்டு வரவில்லை?" என்று கோபமாய் வினவினன் இளவரசன்.

"நீர் தாமே திறவுகோல்களைக் கண்டெடுக்கவேண்டும் என்று உம் தந்தையார் கூறுகின்றூர்" என்றனன்.

"நானே? நானெவ்வாறு கண்டெடுப்பேன்? சரி எப்படியாவது எடுக்கப் பார்ப்பேன்" எனக்கூறி வேலைக்காரியை நோக்கி பசியாற்ற ஆகாரம் ஆயத்தம் பண்ணச் சொன்னுன்.

"சரி, இதோ சமையலறைச் சாவி" என்று சாவியைத் தந்தனர்.

"நல்லது," எனக்கூறி எவ்வாறு இது கிடைத்தது என அரச குமாரன் ஆராய ஆரம்பித்தனன்.

பிள்ளையாண்டானைக் கூப்பிட்டு "பெரிய அறைச் சாவியைத் தயவுசெய்து தரமாட்டாயா?" என்று தாழ்மையாய்க் கேட்டனன்.

"ஆகட்டும்" என்று சொல்லி கதவண்டை சென்று அங்கு தொங்கிக்கொண்டிருந்த திறவுகோலைப் பிள்ளையாண்டான் எடுத்து இளவரசனுக்குக் கொடுத்தனன்.

"எனக்கு மறைந்திருந்தது அதிசயமே!" எனக் கூறி பெரிய அறைக்குட் பிரவேசித்து, விளையாட்டு சாமான்களை எடுத்து வைத்து விளையாடினன். திறவுகோலின் இரகசியத்தை அறிய ஆசித்தனன். அது கொஞ்சம் கொஞ்சமாய்த் தெளிவானது. பெண் பிள்ளைக்குப் பட்சம் காட்டினபடியால் அரண்மனையின் திறவுகோலை அவள் எடுத்துக் கொடுத்தனள். சமையற்காரியிடம் சாந்தமாய்ப் பேசினபோது அவள் சமையலறைத் திறவுகோலைக் கொடுத்தனள். பிள்ளையாண்டானேடு மரியாதையாய்ப் பேசினபோது மூன்றும் திறவுகோலக்கப்பட்டது.



"நான் பேசுவதைப் பற்றியும் செய்வதைப் பற்றியும் கவலையாயிருந்தால் அது நன்மை பயக்கும் என்றெண்ணுகின்றேன். இன்னும் அதைச் சோதித்து அறிவேன்" எனக் கூறி, இளவரசன் வெளியேறி வேலைக்காரரோடும், தெரு ஜனங்களோடும் பட்சமாய் பேசி அன்பின் கிரியைகளை நடப்பித்தனன். ஒவ்வொரு நற்காரியஞ் செய்யும் போதும் பேசும்போதும் அரண்மனையின் அறைகளின் கதவுகள் ஒவ்வொன்ருய்த் திறவுண்டன. பொக்கிஷங்கள் வெளியாயின.

பிறரை இன்புறச் செய்வதிலேயே சுய இன்பம் அடங்கியிருக்கிறதென்பதைப் படிப்படியாய் இளவரசன் கற்றுக்கொண்டனன். வருஷங்கள் சென்றன. நன்மை செய்யுந் தன்மையினுல் உலகம் சிநேகிக்கும் அரசருக்குட் சிறந்தவனுயினன். அது அறைகள் நூறு அமைந்த அரண்மனை சஞ்சார அனுபவத்தின் பலன் என்பதை அறிந்து கொண்டனன்.

(John Martin's Big Book.)

---

## குடும்பப் பயிற்சி



### மரங்களோடு வளர்தல்

Lydia Lion Roberts.

ஆப்பிரிக்கர் நிலைமையைப்பற்றி லிவிங்ஸ்டன் சொன்னது என்னவெனில்:—"மரங்களில் பிரீதி கொண்டு அவற்றை நடுகிற எந்தக் குலத்தாரும் அவைகள் நடப்பட்ட இடத்தோடு அதிக உரிமை காட்டுகின்றனர். அதுவே அவர்களடைந்திருக்கும் நாகரீகத்தின் ஓர் அடையாளம்."

தற்காலத்தில் தரு வைத்து வளர்ப்பதின் பலனை அறிந்திருக்கிற நாம் மர மடர்ந்த காடுகளிருப்பதின் அவசியத்தையும் லிவிங்ஸ்டன் கூறிய வார்த்தைகளின் உண்மையையும் உணர்ந்தவர்களாய் நமது பிள்ளைகளுக்கு மரங்களினுல் வரும் லாபத்தையும் அழகையும் பற்றிப் போதிப்போமாக! சிறு பிராயத்திலிருந்தே வானத்தை அளாவி வளரும் பசுமையான கிளைகளோடு கூடிய மரங்களின் அழகையும் அந்தஸ்தையுங் காணும்படி நமது பிள்ளைகளின் கண்களைப் பயிற்றுவிப்போமாக!

மரங்கள் மிகுந்த ஆசீர்வாதத்தைத் தரும் என்று எதிர்பார்க்கும்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் கற்பிக்கவேண்டும். நமது வீடுகளில் தரு நடும் வழக்கம் இருக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு மரம் நாட்டித் தண்ணீர் விட்டு வளர்க்கவேண்டும். அதில் பிரியம் உண்டாக்கவேண்டும். தருக்கள் வளருவதைப் பற்றிக் குறிப்பெழுதப் பழக்கவேண்டும்.

சர்க்கார் நடும் மரங்களைக் கவனிப்பதிலும் தங்களுக்கு உத்தரவாதம் உண்டென்று உணர இடந் தர வேண்டும். தங்கள் வீடுகளையும், வீதிகளையும், நகரத்தையும் அழகுபடுத்துகின்றனவென்ற எண்ணம் அம்மரங்களுக்காகக் கவலைப்படவும், தண்ணீர் விடவும், சேதமில்லாமல் வளரும்படி பார்த்துக் கொள்ளவும் தூண்ட வேண்டும். விசேஷமாய் சிங்கார வனங்களிலுள்ள மரங்களைப்பற்றி இவ்வித மன நிலைமை அவசியம். இது விஷயமான அறிவு புகட்டுவது அத்தியந்த அவசியம்.

பாடசாலைகளில் இவ்வித உணர்ச்சி மரங்களைப்பற்றி உண்டாகும்படி பல முறைகளைக் கையாடுகின்றனர். கதைகளும் பாட்டுகளும் மரங்களில் பிரீதி கொள்ளச் செய்கின்றன. தரு நடு விழாவொன்றும் வைத்திருக்கின்றனர். இதன்மூலமாய் மாணவர் எல்லா மரங்களையும் மதிக்கவும் நேசிக்கவும் ஏவப்படுகின்றனர். பெற்றோரும் உபாத்திமாரும் இதில் ஒத்துழைக்கின்றனர்.

பல காரணங்களோடு நாம் தருக்கள் நடுகின்றோம். கைகளின் பிரயாசத்தால் சம்பாதிக்கிறவனும் மனோ சக்தியால் உன்னத அனுபவமடைகிறவனும், சமுசாரியும், சிற்பாசாரியும், வீடே பிரதானம் என்போனும், வெளிப் பிரயாணம் செய்வோனும் மரங்களை எவ்வாறு விசேஷித்துக் கொள்ளுகின்றனர் என்று பிள்ளைகள் அறியும்படி செய்யவேண்டும். பிள்ளைகளின் அபிவிருத்தியில் கருத்துடையோரும், குணலட்சணப் பயிற்சிகொடுக்க விரும்புவோரும், பெற்றோரும், உபாத்திமாரும், சிநேகிதரும், பிள்ளைகளுக்கு மரங்களின் மேல் பிரீதியுண்டாகும்படி செய்வது ஒரு முக்கிய நோக்கமாகக் கொள்வதவசியம். லிவிங்ஸ்டன் சொன்னதைச் சொன்னேன் லூத்தர் பர்பாங்க் சொன்னது இன்னதெனக் கூறி முடிப்பேன்.

"பொருளுடையோர், சிக்கன முறையுடையோர், கனத்துக்குரியோர், விரும்பப்படத் தக்கவர் யாரும் மரம் நடுவார்கள். பாடசாலை மணிக்கூண்டு, ஆலயத்தின் கோபுரம், மதிப்புக்குரிய கொடி எவ்வாறு நாகரீகத்தின் நிச்சயமான அறிகுறியோ அவ்வாறு பாதுகாவலுடன் வளர்க்கப்படும் மரங்களும் நாகரீகத்தைக் காட்டும் அறிகுறியே!"

---

## பாலரும் பச்சைப் பட்டாணிகளும்

(தென்னை ஓலையால் பின்னப்பட்ட மூடிக்குள்ளே பச்சை ஆடையும் பச்சைத் தொப்பியுமணிந்த ஐந்து பிள்ளைகள் மறைந்திருக்கின்றனர். பின்வரும் பாட்டை வேறு ஐந்து பிள்ளைகள் பாடும்போது பட்டாணிகளாயிருக்கும் பிள்ளைகள் நடித்துக் காட்டுகின்றனர்.)

இராக மெட்டு :. "வில்லிப்பூவோடு நல் அல்லிப் பூவும் சேர்ந்து மெல்லியர் கை நிறைய"

**1**

பாடகர்— பச்சை நிறமான பச்சை மூடிக்குள்ளே
பச்சைப் பட்டாணிகள் பார்.
இச்சமயத்திலே இந்த நிறத்திலே
அச்சமின்றி அமரச் செய்தவர் யார்?



**2**

மூடி விரியுமுன் ஐந்து பட்டாணியும்
கூடி யிருந்தனவே;
பாடிடவும் ஓடி ஆடிடவு மின்னும்
வீடில்லாது வாடி யிருந்தனவே.

(பட்டாணிகளெல்லாம் தலையைத் தொங்க வைத்துக் கொள்ளுகின்றன.)

**3**

மஞ்சள் நிறமான மஞ்சள் மூடிக்குள்ளே
மஞ்சள் பட்டாணிகள் பார்.
கொஞ்ச நேரத்திலே மஞ்சள் நிறத்திலே
நெஞ்சம் அஞ்சா தாடிடச் செய்தவர் யார்?

(பட்டாணிகள் மஞ்சள் தொப்பியைப் போட்டுக்கொண்டு
தலைகளை யாட்டுகின்றனர்.)

(ஒரு பிள்ளை தென்னை மூடியை மஞ்சள் துணியால் மறைக்கின்றது)

**4**

இத்தனை காலமாய் இத்தனை பேரையும்
நித்தமும் காத்தவர் யார்?
எத்தனை வகையாய் அத்தனை பேரையும்
பத்திரமாய் அத்தன் வைத்தே யமைத்தார்!

(பட்டாணிகள் பேசுகின்றன)

**பட்டாணி 1.**
என்ன அழகான உலகம்! நாம் பச்சை மூடிக்குள்ளிருந்ததால் உலக மெங்கும் பச்சையாயிருக்கும் என்று எண்ணியிருந்தோம். இப்போது பார்த்தால் எல்லாம் மஞ்சளாயிருக்கிறது.

**பட்டாணி 2.**
நாம் எல்லோரும் சிறு பிள்ளைகளா யிருந்தோம். இப்போது எவ்வளவு பெரியவர்களா யிருக்கின்றோம்! ஒவ்வொரு நாளும் உஷ்ணம் அதிகமாகிக் கொண்டே வந்தாற்போற் தோன்றினது.

**பட்டாணி 3.**
அது மாத்திரமா? வெளியே கொஞ்சம் சத்தம் கேட்டது. தண்ணீருக்குமேல் மிதந்ததுபோலிருந்தது. எனக்கு அப்போது குளிரும் வந்தது.

**பட்டாணி 4.**
அப்போது என்ன பயமாயிருந்தது. இப்போது எனக்கு எல்லாம் விளங்குகின்றது. சூரிய உஷ்ணம் நமது வளர்ச்சிக்குத் தேவை. அந்த மழையும் நல்லதுதான். இக்கஷ்டங்க ளில்லாமல் நாம் வளர்ந்திருக்க முடியாது. எல்லாம் நமது நன்மைக்காகவே!

(மஞ்சள் தொப்பிகள் வெளியே தெரியவேண்டும்

பட்டாணி 5.

மூடிவிரிந்திருக்கின்றது. ஓடி விளையாட என்ன ஆசை! ஓ பிள்ளைகளே! எங்களை வெளியே எடுத்துவிட மாட்டீர்களா? எங்களுடன் விளையாட மாட்டீர்களா?

(பிள்ளைகள் வந்து எடுத்துவிட்டு விளையாட ஆரம்பிக்கின்றனர்)

பாட்டு.

மெட்டு: ("டம்றி டரிற்றி")

இடது கால் பின் வலது காலை எடுத்து வைத்திடுவோம்
இடதும் வலதும் மாற்றி வைத்தே வட்டம் சுற்றிடுவோம்
பல்லவி—டம்றி டரிற்றி டம்றி டரிற்றி டம்றி டரிற்றி டா—டரி
டம்டம் டரிற்றி டம்டம் டரிற்றி டம்டம் டரிற்றி டா

(பட்டாணிகளும் பாலரும் இரு வரிசையாய் பிரிந்து கொள்ளுகின்றனர்

பாலர்—

மூடியின்றி நாடியிங்கு ஓடி வந்ததால் நீர்—எம்மோ
டாடி விளையாடிப் பாடிக் கூடிச் சேர்ந்திடுவீர்—டம்றி

பாலர்—

மண்ணைத் தோண்டி மண்ணுள் வைத்து மண்ணால் மூடிடுவோம்—

பட்டாணி—

நாம்
மண்ணைக் கண்டு மண்ணை யுண்டு மண்ணாய் மாறிடுவோம்—டம்றி

பாலர்—

தண்ணீர் மொண்டு தண்ணீர் கொண்டு மண்ணில் ஊற்றிடுவோம்—

பட்டாணிகள்—

நாங்கள்
மண்ணீரெல்லாம் உண்ணீராக்கி யுண்டு மகிழுவோம்.

பாலர்—

குச்சி கொண்டு குத்தி உங்களைக் குத்தி வைத்திடுவோம்—

பட்டாணிகள்—

உங்கள்
குச்சியுடனே உச்சி வரையும் ஓங்கி வளருவோம்

பாலர்—

எந்தவித நிர்பந்தம் இனி உங்கட்குத் தந்திடலாம்?—


பட்டாணிகள்—

எவரும்
எந்த விதமும் அந்த நிர்பந்தம் சுற்றி வந்திடலாம்.

T. A. Fenn.



## நிழல் விளையாட்டு




## விடு கவிக் கதை

1. நான் குலக்கை ருத்தி வரும்
இரண்டு முரமும் புடைத்து வரும்
துடுப்பு ஒன்று துழாவி வரும்
துரை மக்களே ஏறி வர
துடப்பம் தெரு பெருக்கிவர

2. பேச்சில்லை பெரு மூச்சு விடுவான்
உணவில்லை ஊரைச் சுமப்பான்
உயிரில்லை ஓடித்திரிவான்
சாதமில்லை நீர் குடிப்பான்
கடும்பசி யில்லை கரிகளை யுண்பான்
கண்களில்லை காத தூரம் செல்வான்
குரலில்லை கூச்சலிடுவான்
மழையில் நனைவான் வெய்யிலில் காய்வான்

நோயு மடைவான் மருந்தும் புசிப்பான்
எப்படிச் சொன்னாலும் அப்படியே செய்வான்.

3. சின்ன வெங்காரம்
வீடெல்லாஞ் சிங்காரம்.

4. வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர்
குசவன் பண்ணாத பாண்டம்

5. ஆயிரம் தச்சன் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண்படவும்
உடைந்ததாம் பண்டபமும்.

6. பலபேருக்கு ஒரே குடுமி!

7. ஒரு ஜாடிக்குள் இரு தைலம்.




## கீர்த்தனை

இராகம்-கரஹரப்ரியா தாளம்-ஆதி.

### பல்லவி

பணி செய்வோம் வாரீர்—பக்தரே
துணிந்தெம் தேசத்துக்கே—கிறிஸ்தவப்—பணி

### அநுபல்லவி

பணிந்தே குனிந்தே யாம்—பாழுமெளிமை
அணிந்தே சிறுமை அடைந்தோர்க்கு தவிப்—பணி

1

அணியும் ஆடை அற்றோர் அநேகர்
பிணியுடன் பீடை யுற்றோர் அநேகர்
துணிவுடனெம் உடலை—சுடக் கொடுத்தேனும்
துணிப்போம் தீமை எம் கடனெனக் கணித்தே—பணி

2

துங்கன் ஏசுவின் தூய ஒளியால்
எங்கள் உள்ளத்திருள் ஓடினதால்
எங்கெங்கும் சென்று—பங்கமொன்றின்றி
அங்கெம் ஒளியால் அருளோங்கவே யாம்—பணி

3

பஞ்சம் பசியால் பாடுற்றோரை
தஞ்சமின்றித் தயங்கினோரை
கெஞ்சும் ஏழைகளை—வஞ்சகமின்றி
நெஞ்சம் குளிர நிதம் நேசித்து நற்—பணி

4

புத்தியற்றோர் பக்தியற்றோர்
சித்தியற்றோர் சக்தியற்றோர்
நித்தம் சந்தித்து யாம்—அத்தன் போல்
தத்தம் குறைகள் தவிர்க்க விரைந்து—பணி

5

இந்தியாவின் ஈடேற்றமுமே
வந்திடாதோ யாம் போற்றவுமே?
இந்து தேசத்தார்—மைந்தன் ஏசு
சிந்தை எய்தி சீர் பெறச் சேர்த்துமே—பணி

Printed by S. T. Rhenius at the N. M. S. Press, 48 B, Peters Road, Royapettah
and Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.

# வித்யாதனம்

## VIDYADHANAM

### TAMIL TREASURE CHEST

| தொகுதி 1. | அக்டோபர்மீ 1937ஞு | பகுதி 7. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்பு.

கடந்த மாதப் பத்திரிகை பிந்தினதற்காக விசனப்படுகின்றோம். இரு மாதப் பத்திரிகைகளையும் சேர்த்து இம்மாதம் அனுப்புகின்றோம், இனிமேல் பத்திரிகைகள் மாதந்தோறும் ஒழுங்காய் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டோம்.

படங்களும் பக்கங்களும் குறைவாய்க் காணப்பட்டாலும் உபயோகித்த சில எழுத்துக்கள் சிறியவையானதால் போதிய விஷயம் எழுதக்கூடியதா யிருந்தது. கடந்த மாதப் பத்திரிகை காலந்தவறி வருவதைத் தயவாய் மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இம்மாதம் வெளியாகும் பிரஜாதிபதியின் பிரயாணங்கள் பதினான்கும் பிரயோஜனமா யிருக்குமென்று நம்புகின்றோம். கற்கவேண்டியவை நான்குள. கண்டு பிடியுங்கள். இராட்சதன் ஒருவன் உங்களைச் சந்திக்க வருகின்றான். அண்ணாந்து பார்க்க ஆயத்தமாயிருங்கள். கற்பதெவ்வாறு என அறிய விரும்பினால் இதைப் படித்துப் பாருங்கள்.

இன்னும் அநேக நல்ல விஷயங்கள் இதில் வெளியாகும். நீங்களே தேடிப் பாருங்கள், என்ன விஷயம் தேவை என்பதைப்பற்றியும் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். உங்கள் வியாசங்களையோ ஊர் சமாசாரங்களையோ எமக்கெழுதி யனுப்பினால் இப்பத்திரிகையில் பிரசுரிப்போம். பத்திரிகைக்கு எழுதப் பழகுங்கள். முந்தின மாதம் விடப்பட்ட விஷயங்களை இம்மாதத்தில் பிரசுரிக்கின்றோம். முன் சொன்ன காஷ்மீரத்துக் கலப்பையையும் கடைசியிற் காணலாம்.

T. A. Fenn.

# உலக செய்தி

## எகிப்து

ஜூலைமீ 29உ தன் 18-வது பிறந்த தினத்தில், பாரூக் I அராபியர் ராஜ்யமாகிய தற்கால எகிப்து தேசத்திற்கு அரசனுனர். ஒரு காலத்தில் ட்யூட்டன் காமன் அரசன் அணிந்திருந்த பொன் மகுடத்தால் மகுடஞ் சூட்ட யோசித்திருந்தனர். மகமதிய அரசர் எவரும் மகுடஞ் சூட்டப் பெற்றதில்லையாகையால் இது தடைப்பட்டது. துருக்கி ராஜ்யக் குடிகளாய் எகிப்தியர் இருந்தபோது கையாடின வழக்கத்தை யனுசரித்து மகுடாபிஷேகத்துக்குப் பதில் பட்டய அபிஷேகம் செய்தனர். அமெரிக்க ஐக்ய மாகாணப் பிரஜாதிபதிக்குச் செய்வதுபோல உடன்படிக்கை ஆராதனையும் நடைபெற்றது.

பாரூக் I அரசன் கொரான் வேதத்தைக் கையிலேந்தி செய்த பிரதிக்ஞையாவது:—

'எகிப்தியருடைய சட்ட திட்டங்களைக் கைக்கொள்ளவும் ஜாதியாரின் சுயாதீனத்தையும் மாகாணத்தின் ஒருமைப் பாட்டையும் பாதுகாக்கவும் சர்வ வல்லமையுள்ள அல்லாவுக்கு முன் வாக்குக் கொடுக்கின்றேன்.''

பச்சை யிலைகளாலும் கொடிகளாலும் நகரங்கள் யாவும் நன்ருய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பச்சை நிறம் எகிப்தியரின் தேசிய வர்ணம். அவர்கள் கொடி பச்சை நிறம் அதில் வெண்ணிறப் பிறைச் சந்திரனும் மூன்று நட்சத்திரங்களும் தோன்றும். இவ்விதக் கொடிகள் எங்கும் பறந்தன.

ஒலி பரப்பும் கருவியின் மூலமாய் முதல் விசை அரசன் பேச நகரவாசிகள் அனைவரும் கேட்டனர். எகிப்தின் முக்கிய சாரணச் சங்க வீரன், தங்கள் புது அரசனுக, தேசச் சேவை புரிவதில் முதன்மை வகிப்பதாகக் கொடுத்த வாக்கு பின்வருமாறு:—

"என் தேசத்துக்கு யான் முதற் பணிவிடைக்காரனுயிருப்பேன் என்று வாக்குக் கொடுக்கின்றேன். எனக்கும் என் தாய்நாட்டிற்கும் அபிமானம் காட்டிய என் எகிப்திய ஜனத்திற்கு'ம அந்நியருக்கும் நன்றி பாராட்டுகின்றேன்."

பாரூக் I அரசன் எகிப்தியரால் நேசிக்கப் பெற்றவர். அவர்களால் ஆதரிக்கப்படுவர். பிரிட்டிஷ்காரரைச் சார்ந்தவர். நான்கு வயது முதல் பதினைந்து வயது வரை ஆங்கிலேய அம்மணியிடம் பயிற்சி பெற்றவர். இங்கிலாந்திற்குப் போய் கல்வி கற்றவர். பொதுஜன அபிப்பிராயத்தை மதித்தவரானபடியால் மதிப்புக்குரியவராயினர்.

அவர் ஆறடி உயரம் வாய்ந்தவர். சிறந்த மேனியுடையவர். அவருடைய தாயார் நாஸ்லி இராணியார் நெப்போலியன் காலத்தில் எகிப்துக்கு வந்த சேனுதிபதிகளுள் ஒருவருடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர் நல்ல நிறமுடையார்.

கணித சாஸ்திரத்தில் கெட்டிக்காரர். பண்டைய காலக் காரியங்களில் கருத்துடையவர். முத்திரைத் தலைகள், நாணயங்கள், பதக்கங்கள் சேர்ப்பதில் பிரீதியுடையார். படம் பிடிப்பதிலும் விளையாடுவதிலும் அவருக்கு அதிகப் பிரியமுண்டு. நீராவி இயந்திரம் ஓட்டுவதில் பயிற்சியுண்டு.

பாரூக் என்றால் "சரி எது தப்பிதம் எது என்று நிதானிக்கும் சக்தி வாய்ந்தவன்" என்றர்த்தங் கொள்ளும்.

400 வருஷ அந்நிய ஆளுகை எகிப்தில் ஓய்ந்து போயிற்று. 1882ஆம் வரை துருக்கியராண்டனர். அதன்பின் பிரிட்டிஷ்காரர் ஆண்டனர்.



பாரூக் I அரசருடைய தந்தையார் முதல்முதலாக நாட்டை நன்ருய் ஆண்டனர். 14 வருஷத்துக்குள்ளாக கடந்த 2000 வருஷங்களில் செய்யப்பட்ட அபிவிருத்தியை விட அதிகம் செய்யக்கூடியவராயிருந்தனர்.

தந்தையைப் போன்ற மைந்தனுயிருந்தால்
எந்த விதமும் நன்மை யுண்டாகும்.

---

## அமெரிக்கா ஐக்கிய மாகாணம்

சீனுவுக்கும் ஜப்பானுக்கும் யுத்த நிலை ஏற்பட்டது என்று இன்னும் ரூஸ்வெல்ற் பிரஜாதிபதி பிரசுரிக்கவில்லை. சீனுவிலிருந்து வரும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாயிருக்கின்றன. திட்டவட்டமான நோக்கம் காணப்படாதபடியால் விரோதங்கள் சீக்கிரம் முடிவுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கின்ருர்.

அமெரிக்காவுக்கும் சீனுவுக்கும் நீடித்த சிநேகமுண்டு. ஆகையால் ஜப்பானைப் பற்றி சந்தேகம். ஜப்பானுக்கு அநுகூலமாக ஒன்றும் செய்யமாட்டார். நடுநிலை வகித்தால் சீனுவுக்கு உதவிசெய்ய முடியாது. யுத்தத்துக்கு வேண்டியவற்றை நிறுத்தினுல் ஜப்பானுக்கு க்ஷேமம், சீனுவுக்கு மோசம். இவற்றைச் செய்யவும் வாங்கவும் ஜப்பானுக்குத் திறமையும் திரவியமுமுண்டு. எனினும் நீடித்த யுத்தஞ்செய்ய வேண்டுமானுல் கடன் வாங்காமற் தீராது அதற்காகவே ஜப்பான் யுத்தநிலை யேற்பட்டதாகப் பிரசுரிக்கவில்லை. இதன்பலனுக அமெரிக்கா நடுநிலை வகிக்கக் கூடாதிருக்கின்றது.

---

## சீனு ஜப்பான் சண்டை

ருஷியாவோடே சண்டை போட வழியில்லை என்று கண்டு சீனுவோடே சண்டை யிழுக்க ஜப்பான் முன் வந்தது. பைப்பிங் பட்டணத்துக் கருகிலுள்ள பாகத்தை அபகரிக்க எண்ணி ஜப்பான் வம்புக்கு வந்தது. சீன வீரர்களை ஜப்பானியர் வைத்திருந்தனர். சீன வீரர் ஜப்பானுக் குதவி செய்துவந்த சேனுவீரனுக்குக் கீழ்ப்படிய மறுத்து ஜப்பானியர் தங்களுக்குக் கொடுத்த யுத்தாயுதங்களைப் பிரயோகித்து எதிர்த்தனர். சீனர் துரோகம் வெளியானது. ஜப்பானியர் கோபப்பட்டபோது "சீனர் சீனரே" என்று பதிலுரைத்தனர். இவ்வாறு பல இடங்களிற் சீனர் துரோகம் செய்து ஜப்பானியரை முன்னேற விடவில்லை.

சியாங் காய் ஷெக் கூறுவது;—

"கடைசி மட்டும் கட்சிகட்ட சீனு காத்துக்கொண்டிருக்கின்றது. ஆதி முதல் அந்தம் வரை எம தாளுகையின் நோக்கம் ஒன்றே. எம் நாட்டில் எப்பாகத்தையும் ஈந்திடோம். எம் ஆளுகைக்குள் எதையும் அபகரிக்க இடங் கொடோம். கைகலந்து யுத்தம் புரியினும் புரிந்து சீனுவைக் காப்பதற்காக சர்வ தேசச் சைனியம் திரட்டுவோமாக!"

ஜப்பான் தேசத்திற்கு நம்பிக்கையற்றுப் போயினும் ஸைனியந் திரட்டுவதில் கொஞ்சமும் குன்ருதுழைக்கின்றது.

---

## சீனாவின்மேல் ஜப்பான் படையெழுச்சி

1894ஆம் முதல் ஜப்பான் சீனாவுக்குள் பிரவேசித்து நாடு சேர்க்க ஆரம்பித்தது. அதன் விபரம்:—

1894—சீனாவைத் தோற்கடித்து பார்மோசாத் தீவைப் பற்றிக்கொண்டது.
1905—ருஷியாவைத் தோற்கடித்து மஞ்சூரியாவைச் சேர்த்துக் கொண்டது.
1910—கொரியாவைச் சுய அரசுக்குள்ளாக்கிச் சேர்த்துக் கொண்டது.
1915—ஜப்பான் ஜெர்மனியிடமிருந்து ஷான்டங் துறைமுகப் பட்டணத்தை அபகரித்தது. அது சர்வதேச சட்டத்துக்குள்ளடங்கித் திருப்பிக் கொடுக்கப்பட்டது.
1932—மஞ்சூரியாவைப் பிடித்து தனக்குக் கீழடங்கின மஞ்சுககூவோ ராஜ்பத்தை ஸ்தாபித்தது.
1933—வட சீனாவிலுள்ள ஜெஹோலைப் பிடித்தது.

அது முதல் பைப்பிங், சக்கார், ஹோப்பை, சுயூபியான், ஷான்ஸி, ஷான்டங் என்னும் இடங்களைச் சுற்றிலும் தன் வசப்படுத்திக் கொண்டே வந்தது. ஜப்பானுக்குள்ளடங்கின சீன ராஜகையை ஏற்படுத்தி வந்தது. வட சீனாவிலுள்ள சீனரெல்லாரும் தங்கள் வீரருக்குள் அடங்காமல் விரோதம் பண்ணத் துணிந்து நிற்கிறதாக ஜப்பானிய காரிய ஆலயத்தில் வெளியாகின்றது. இந்த உள்நாட்டுக் கலகத்தில் ஜப்பானுக்குப் பங்குமில்லை பாகமுமில்லையென்று ஜப்பானிய அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

---

## தீண்டாமை வேண்டாமே!

மேல்ஜாதிப் பிள்ளைகளும் கீழ்ஜாதிப் பிள்ளைகளும் பேசி விளையாடிக் கொண்டிருந்தபோது மேல் ஜாதிப் பிள்ளைகளின் தாயார் கீழ்ஜாதிப் பிள்ளைகளைக் கோபித்துத் துரத்தியும் மறுபடியும் மறுபடியும் அப் பிள்ளைகள் கூடி விளையாடினர்.

"எங்கள் அப்பா பட்டணத்திற்குப் போயிருக்கிறார்கள். எனக்கு பொம்மை வாங்கிக்கொண்டு வருவார்கள்" என்று அக்காள் கூறத் தம்பி தனக்குப் பந்து வாங்கிக்கொண்டு வருவார்கள் என்று சொன்னான். கீழ்ஜாதிப் பிள்ளை ஒன்று தன் தகப்பனார் தனக்குக கடலை வாங்கிக்கொண்டு வருவார் என்று சொன்னாள்.

இதற்குள்ளாகத் தாயார் வந்து திட்டி அனுப்பிவிட்டனள். தன் பிள்ளைகளை வீட்டிற்குள்ளே போகும்படி சொன்னாள். இது நாள்தோறும் நடக்கும் காட்சி. பிள்ளைகள் பேதமறியாப் பிள்ளைகளே!

ஒரு மாதமாயிற்று. தாயார் மிகவும் வருத்தத்துடன் அழுதுகொண்டிருந்ததைப் பார்த்த மகன் "அம்மா ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்க, தாயார் "அப்பாவைக் காணோம். மூன்று வாரங்களுக்கு மேலாகிறது என்ன நேரிட்டதோ?" என்று ஏங்கினள்.

"அதோ அப்பா வருகின்றார்கள்" என்று பையன் கூவ, தாயார் மறுத்து "என்ன? உன்னப்பா நொண்டியா? நன்றாய்ப் பார்" என்றனள். பையனோ ஓடித் தன் அப்பாவைக் கண்டு காரியத்தையெல்லாம் அறிந்து வீடு கொண்டுவந்து சேர்த்தனன்.

தாயார் தாகசாந்தி செய்தனள். தகப்பனார் சாப்பிடும்போது அவர் தன்னிடம் சொன்னவற்றை ஒன்றும் விடாமல் எடுத்துரைத்தனன் தம்பி. அவரை எவ்வாறு கள்ளர் அடித்துப் போட்டனர் என்பதையும் தன் சொந்த பந்துக்களும் பெரிய மனுஷரும் எவ்வாறு கவனியாததுபோல விலகிப் போயினர் என்பதையும் கடைசியில் ஒருவன் உதவிசெய்தது எவ்வாறு என்பதையும் விஸ்தரித்துக் கூறினன்.





உதவிபுரிந்தவனுக்கு என்ன செய்யலாம் என்று தகப்பனார் கேட்டனர். பிள்ளைகளில் ஒரு மகள "அவருக்கு மாலை போடவேண்டும்" என்று சொன்னாள். வேறொரு பிள்ளை "அவருக்கு மோதிரம் போட வேண்டும்" எனப் பையன் "அவரையும் அவருடைய மனைவி மக்கள் யாவரையும் அழைத்து விருந்து கொடுக்க வேண்டும்" என்றான். "தாயார் சம்மதிப்பார்களா?" என்று தகப்பனார் வினவ, அம்மாளும் "அப்படியே ஆகட்டும்" என்று சம்மதித்தனர். ஒருவன் ஓடி மாலை வாங்கிக்கொண்டு வந்தான். அவர் யார், அப்பா? நான் போய் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று தம்பி கேட்டான். அதற்கு, அவர் "அம்மா உங்களோடு விளையாடக் கூடாது என்று சொல்லித் திட்டி சில பிள்ளைகளைத் துரத்திவிடுவார்களே அவர்களுடைய அப்பாதான் எனக்குதவி செய்த நல்ல மனுஷன்" என்று சொன்னான். தம்பி ஓடிப் போய் அவரையும் அவருடைய மனைவி மக்களையும் கலப்பு விருந் தருந்த அழைத்து வந்தான் அவனுக்கும் அவன் வீட்டாருக்கும் இவர்கள் வீட்டில் விருந்து நடந்தது பிள்ளைகள் அவருக்கு மாலையிட்டு மோதிரம் போட்டுத் தங்கள் நன்றியைக் காட்டினர் அன்று முதல் "தீண்டாமை வேண்டாமே" என்றாயிற்று.

T. A. Fenn

---

## சித்தியுள்ள ஜீவிய பிரமாணங்கள்

கீழ்வரும் கற்பனைகள் 150 ஆண்டுகளுக்கு முன் ஜியார்ஜ் உவாஷிங்டன் செய்தருளியதாகச் சொல்லப்படுகின்றன. அக்கற்பனைகள் யாவும் அக்காலத்திற்குரியன போல் இக்காலத்திற்கும் ஏற்றவை.

1. மற்றவர்கள் மத்தியில் மனதிற்குள்ளே பாடி இராகம் போடலாகாது. கையுங்காலும் தாளம் போடுவதும் தவறு.

2. மற்றவர்கள் பேசுங்கால் உறங்கலாகாது
மற்றவர்கள் நிற்குங்கால் உட்காரலாகாது
மௌனம் சாதிக்க வேண்டும்போது பேசலாகாது
மற்றவர்கள் தாமதிக்குங்கால் நடந்து செல்லாதே.

3. மற்றவர்கள் காரியங்களை யறிய ஆவல் கொள்ளாதே
இரகசியம் பேசுகிறவர்களுக்குச் சமீபமாய் நெருங்காதே.

4. ஆகாரம் அருந்துவதில் ஆனந்தங் கொள்வதுபோல்
பாவித்துக் கொள்ளாதே—பேராவலுடன் கூடிய பெருந்தீனி
வேண்டாம்—மேசையின் மேல் சாய்வது நன்றன்று
அருந்தும் ஆகாரத்தைப் பற்றிக் குற்றங்கூறேல்.

5. பேசும்போது புறங்காட்ட வேண்டாம்
மற்றவர்கள் வாசிக்கவோ எழுதவோ உபயோகிக்கும் மேசையை
ஆட்டவேண்டாம். எவர்மீதும் சார வேண்டாம்.

6. இன்ப காலத்தில் துற்காரியம் பேசேல்—அக்காரியம்
பந்தியிலும் பேசலாகாது. எவரேனும் பேசினும்
வேறெக் காரியத்தையுங் கொண்டு அப்பேச்சை மாற்றுக.

7. உன் வரவு நல்வரவாகுமோ என்ற நிச்சயமில்லா இடத்திற்கு ஏகவேண்டாம்.

8. இயலாத காரியத்தை எடுத்துச் செய்யாதே—
செய்த வாக்கை நிறைவேற்றக் கவனமா யிரு.

9. உன்னிடம் கேட்காதவருக்கு புத்தி கூறுதே
விரும்பினோர்க்குச் சுருக்கமாய் எடுத்துரை.

10. முன்னுக்கு நிற்காதே. மரியாதையும் சிநேகமும் விசேஷம்.
மரியாதை காட்டுவதிலும், பிறர் பேசக் கேட்பதிலும்
பதிலுரைப்பதிலும் முதன்மையா யிரு.

11. தன் அலங்காரத்தையே கண்டு களிக்கும் மயிலைப் பின்பற்றுதே
உடை விஷயமாய் சகலமும் சரியாய் இருக்கின்றனவா என்று
சதா பார்த்துக் கொண்டே காலங் கழிக்காதே.

12. ஊர்ப் பேச்சை நம்பாதே. உண்மையை அறியுமுன்
ஒரு செய்தியையும் உரையாதே.

13. ஒருவன் செய்வன யாவும் செய்த பின் சித்தி கிடைக்காவிட்டால்
செய்தவனை நொந்து கொள்ளாதே.

14. பிறரிடங்காணும் மாசு மருக்களை உற்று நோக்காதே
அவை எவ்வாறு ஏற்பட்டன வென்றும் வினவாதே.

---



## கற்கவேண்டியவை

1. சிரிக்கக் கற்க. நன் மருந்தைவிடப் புன்சிரிப்பு நல்லதாம்.
2. நல்ல கதைகள் சொல்லக் கற்க. வியாதியுள்ளோர் அறையில் பிரவேசிக்கும் சூரிய கதிர்போல் கதைகள் வரவேற்கப்படும்.
3. உன் கஷ்டங்களை உன்னிடமே வைத்துக்கொள்ளக் கற்க. உலகம் அவற்றைக் கவனிக்க நேரமில்லை.
4. முறுமுறுப்பதை விட்டுவிடக் கற்க. உலகில் அநுபவிக்கக்கூடிய நன்மைகளைக் காணக் கண்ணில்லாவிட்டால் தீமைகளை உன்னோடே வைத்துக்கொள்.

(கனடா தேசப் பையன்)

---

## இராட்சதர்

கோலியாத் ஒன்பது அடி ஒன்பது அங்குலம் உயரம் என்றும் பாஷானின் ராஜாவாகிய ஒகு ஒன்பது அடி உயரம் என்றும் வேதம் கூறுகின்றது. இவர்களை விட அதிக உயரமாய் வளரும் சக்திவாய்ந்த ஒரு பையன் அமெரிக்காவில் இருக்கின்றான். அவனுக்கு வயது பத்தொன்பது. அவன் உயரம் எட்டரை அடி. அவன் எடை 435 பவுண்ட். இன்னும் வளர்ந்துகொண்டே போகின்றான்.

அவனுடைய முன்னோர்களெல்லாரும் சரியான சாதாரண வளர்ச்சியுடையோர். அந்தப் பையன் பிறந்தபோது எடை எட்டரைப் பவுண்ட். ஆறு மாதத்திற்குள் அவன் எடை முப்பது பவுண்ட் மட்டும் ஏறினது. அவன் ஒன்பது வயதானபோது ஆறடி உயரமும் நாற்றெழுபத்தெட்டுப் பவுண்ட் எடையுமுள்ளவனானான். வளர்ச்சி தவிர மற்றக் காரியங்களில் சாதாரண மனுஷனாய்த் தானிருக்கின்றான்.

வளர்ச்சிக் கோளத்தின் மிதமிஞ்சின கிரியையினால் இந்நிலைமை ஏற்படுகின்றது. இச்சிறு கோளம் மூளைக் கடியிலிருக்கின்றது. வயதுக்கு வரும்போது இக்கோளம் கெட்டுப் போகும். அக்காலத்தில் அக்கோளம் கிரியை நடப்பிக்குமானால் மிதமிஞ்சின வளர்ச்சியும் பூட்டுகளின் தளர்ச்சியும் ஏற்படும். அதற்குப் பின்னால் கிரியை நடப்பித்தால் கரம், கால், தலை, நாடி முதலிய பாகங்கள் மட்டுக்கு மிச்சமாய் பெரிதாகி விபரீதமாய்த் தோன்றும்.

பிறப்பிலிருந்தே இப்பையனுக்கு இக்கோளம் கிரியை நடப்பித்து வருகின்றபடியால் இவன் வளர்ச்சியில் சமநிலை காணப்படுகின்றது. இவனுடைய சரீர உறுப்புகள் யாவும் அளவுப் பொருத்தமாய் அமைந்திருக்கின்றன.

---

# கற்கும் முறை

Mary Jean Daily

இந்தியாவில் எங்கு சென்றாலும் உபாத்திமார் ஒரு குறை கூறுகின்றனர். அதாவது
"மாணவருக்குக் கற்கும் முறை தெரியவில்லை" என்பதே. இவ் விஷயத்தில் கஷ்டப்படுவோருக்
குதவியாக சில குறிப்புகளைச் சுருக்கமாக இங்கு எடுத்துரைப்போம்:—

1. சுற்றுப்புரம்—நன்றாய் படிப்பதற்கு படிக்கும் அறை சுத்தமாயும், அழகாயும்
கண்ணைக் கவரத்தக்கதாயும் அமைக்கப்பட வேண்டும். கலிபோர்னியா சர்வகலாசாலையில்
வேலை செய்யும் பிரௌன் பண்டிதர் கூறுவது யாதெனில் "நெருக்கமான வசதியற்ற அறையில்
படிக்கும் மாணவர் நல்ல அழகான அறையில் இருக்கிற மாணவர் படிக்கிற அளவு படிக்கக்கூடா
மல் இருக்கின்றனர்" லெயிட் பண்டிதர் தன் வேலை சித்திக்காக தன் அறையை பூச்செடித்
தொட்டிகள், ஜன்னல் திரைகள் முதலியவற்றால் அலங்கரிப்பதாகவும் கண்ணைக் கவரும் வர்
ணம் பூசி அழகுபடுத்துவதாகவும் கூறுகின்றனர்.

அறைக்குப் போதிய வெளிச்சம் தேவை என்பது யாவரு மறிந்த விஷயம். கண் மட்
டத்திற்கு மேலேயிருந்து இடது பக்கமாய் வரும் வெளிச்சமே நல்லது. அதிக பிரகாசம் உத
வாது. சம ஒளி எங்கும் பரவவேண்டும். ஆனதுபற்றி மேசை தீபங்கள் அவ்வளவு திருப்தி
கரமானதல்ல.

சுத்த ஆகாயம் அவசியம். அதிக உஷ்ண நிலை கல்விக்கு உதவாது. குளிரும் உத
வாது. ஆனால் வேலை நன்றாய் செய்யக் குளிர்ந்த ஆகாயம் தேவை. காற்று வீசும் பக்கம் ஈரத்
துணியைக் கட்டினால் குளிர்ந்த ஆகாயம் கிடைக்கும்.

கவனத்தைச் சிதறடிக்கும் காரியங்கள் கற்கும் அறைப் பக்கம் இருக்கக்கூடாது.
சிலர் எத்தனை காரியங்கள் தங்கள் கவனத்தை சிதற வைக்கக் கவர்ந்திழுந்தாலும், 'கருமமே
கண்ணாயினார்' என்றவாறு சித்தியடைகின்றனர். ஆயினும் அது அவர்கள் சத்தைக் குறைக்
கின்றது. கவனத் தாழ்ச்சியுண்டாக்கும் காரியங்களைக் குறைப்பது நல்லது.

2. சரீர நிலைமை—நல்ல வேலை செய்ய வேண்டுமானால் நமது சரீரம் சரியாயிருக்க
வேண்டும். நல்ல போதுமான ஏற்ற உணவு உட்கொள்ள வேண்டும். வியாதி யிருக்கக்
கூடாது. நன்றாய்த் தூங்க வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள சர்க்கார் பள்ளிக்கூடங்களில் ஆகார விஷயமாய் அதிக சிரத்தை
எடுத்துழைக்கின்றனர். காலை ஆகாரமும் மதிய ஆகாரமும் பாடசாலைகளிற் கொடுக்கப்பட்ட
தின் பலனாக ஏழைப் பிள்ளைகள் முன்னிலும் அதிகமாய் நன்றாய்ப் படிக்கின்றார்கள் என்று
அறிக்கைகள் கூறுகின்றன. வீட்டில் அருந்தும் ஆகாரத்தைப் பற்றிக் கவனிக்க இடமில்லை.
ஆகையால் அனாதை சாலைகளிலும் போர்டிங் பாடசாலையிலும் சாஸ்திர முறைப்படி ஆகாரம்
அளிக்கும்போது பிள்ளைகள் நல்ல வேலை செய்யக்கூடியவர்களா யிருககின்றனர்.

மதுபானம், புகையிலை, காப்பி, தேயிலை முதலியன கல்வி கற்கும் சக்திக்கு எவ்வ
ளவு தூரம் பிரதிகூலம் என்பதை யறியப் பிரயாசப்பட்டதில், லெபிட் பண்டிதர் கண்டுபிடித்த
தாவது.



பீர் என்னும் பானத்தில் 100க்கு 27·5 வீதம் மாத்திரம் லாகிரி வஸ்து இருந்தாலும்
அது மாணவருக்குக் கை நடுக்கத்தை யுண்டாக்குகின்றது. தசைநார் வேகமாயும் திட்டவட்ட
மாயும் வேலை செய்யமுடியாது. கூட்டல் வேலை மெதுவாய்த்தான் செய்யமுடியும். சீக்கிரம்
கல்வி கற்றுக் கொள்ளவும் முடியாது. புகையிலையும் கல்வி கற்கும் சக்தியைக் குறைக்கின்றது
தேயிலையும் காப்பியும் அளவாகச் சாப்பிட்டால் மனோ சக்தியை விருத்தி பண்ணுகின்றனவென்
றும் அதனால் பின்னாற் கெடுதி யொன்றுமில்லையென்றும் கண்டு பிடித்திருக்கின்றனர்.

எவ்வளவு நேரம் தூங்குகிறோம் என்பது அல்ல என்னவிதமான தூக்கம் நம்முடை
யது என்பதே கேள்வி. பொதுவாக சொன்னால், பெரியவர்கள் ஒவ்வொரு நாளும் இரவில்
எட்டு மணி நேரம் தூங்கவேண்டும். பிள்ளைகள் ஒன்பது அல்லது பத்து மணி நேரம் தூங்க
லாம். முதல் இரண்டு மணி நேரம் நல்ல தூக்கமுண்டு. தசை நார்கள் யாவும் தளர்ந்திருக்
கும். இரத்த ஓட்டமும் சர்ம உணர்ச்சியும் மட்டாயிருக்கும். மதியம் ஒரு மணி நேரம் தூங்
கக் கூடுமானால் இரவில் தூக்கம் குறைந்தாலும் பரவாயில்லை. மதியம் அரை மணி நேரம் தூங்
குவது இரவில் பின்னேரம் மூன்று அல்லது நான்கு மணி நேரம் தூங்குவதற்குச் சமானம்
நாள்தோறும் மதியம் கால் மணி நேரம் தூங்கினாலும் மனோ சக்தி விருத்தியாவதற்கு ஏது
வுண்டு. ஒழுங்காய் அரை மணி நேரம் மாத்திரம் மதியம் தூங்கப் பயிற்சி கொடுப்பது மிக
வும் நல்லது. எழுந்தவுடன் நல்ல தேகாப்பியாசம் செய்ய வேண்டும்.

வழக்கமில்லாத வேலை செய்யும்போது களைப்பு உண்டாகும். நமது களைப்பு அடிக்
கடி பிரீதியின்மையினா லுண்டாகின்றது. பின்னேரம் கணக்குச் செய்வதைவிட முன்னேரம்
செய்வது நூற்றுக்கு ஐந்து வீதம் அதிக சித்தி தரும் என்று வின்ச் பண்டிதர் கண்டு பிடித்தி
ருக்கின்றார். முன்னேரம் பத்தரை மணி முதல் பதினொன்றரை மணி வரை மனோ சக்தி யுப
யோகிக்கும் வேலைக்கும் பின்னேரம் மூன்று மணி முதல் நான்கு மணி வரை சரீர சக்தி உப
யோகிக்கும் வேலைக்கும் ஏற்ற வேளை என பைல் பண்டிதர் கண்டு பிடித்திருக்கின்றார். மாண
வருக்குள் களைப்புக் காண்பதரிது. பிரீதியுண்டாக்குங் காரியங்களை உபயோகித்து மாணவர்
தளர்ச்சியை மாற்றி வேலைக்குப் போதிய சக்தியைப் பெற்றுக்கொள்ள இடங் கொடுப்
போமாக!

---

## குள்ளனும் இராட்சதனும்

வழுவழுப்பான ஒரு சுவரில் பலமான ஒரு கதவிருந்தது. அதனண்டை ஒரு குள்
ளன் உட்கார்ந்திருக்கிறதை ஓர் இராட்சதன் கண்டனன்.

அது யார்? ஏன் இவ்வளவு விசனமாயிருக்கின்றாய்?" என்று இராட்சதன் குள்ள
னைப் பார்த்து வினவினன்.

"கதவும் அடைபட்டுப் போயிற்று. சுவரும் ஏற முடியாதபடி வழுவழுப்பாயிருக்
கின்றது. மலைக்கப்பாலுள்ள பட்டணத்தில் கூடும் சந்தைக்குப் போகவேண்டும். அப்படியா
னால் என் செலவுக்குக் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம். இப்பொழுது அதற்கு வழியில்லையே
என்று கலங்குகின்றேன்" என்றனன் குள்ளன்.

"இதற்குத்தானா?" என்று கூறி இராட்சதன் அவனை ஒரு பிடியாய்ப் பிடித்துத்தூக்கி சுவருக்கு அப்பாலுள்ள ஒரு மேடையில் விட்டுவிட்டான். தானும் சுவரை எளிதில் தாண்டிச் சென்றனன்.

"நீ ஒன்றுக்கும் உதவாத பொடியன். சந்தையிலோ வேறு எந்த இடத்திலோ உன்னால் என்ன பிரயோஜனம்? நான் சந்தைக்குப் போனால் என் பருமனையும், சக்தியையும் பார்க்கிற எவரும் அதிசயித்து என்னைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பர். நீயும் அங்கு வந்தால் எவரும் என்னைப் பார்ப்பரே ஒழிய உன்னைக் காணார். ஆனால் நீ இன்றைக்கு அங்கு வந்து சேர்ந்துகொள்ள முடியாது ஆகையால் வந்தனம். நான் போய் வருகின்றேன்" என்று இராட்சதன் குள்ளனிடம் கூறினன்.

இராட்சதன் பெரிய பெரிய எட்டு வைத்து நடந்தனன் குள்ளனோ மெதுவாக எட்டு எடுத்து வைத்துத் தொடர்ந்தனன். இராட்சதனோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்தனன். எனினும் அன்று பின்னேரம் ஓர் உயர்ந்த சுவரிலுள்ள இரும்புக் கம்பிக் கதவண்டை இராட்சதன் விசனத்தோடு உட்கார்ந்திருக்கிறதைக் குள்ளன் கண்டனன்.

"அது யார்? ஏன் இவ்வளவு துக்கம்? எனக் குள்ளன் கேட்டனன்.

"நான் ஏறிப் போகக்கூடாதபடி இச்சுவர் அவ்வளவு உயரமாயும் வழுவழுப்பாயும் இருக்கின்றது" என்று இராட்சதன் சொன்னான்.

"பூட்டின் வாயிலே சாவி யிருக்கின்றதே. அப்பூட்டைத் திறந்து போகலாமே?" என்று குள்ளன் கேட்க,

"அந்தப் பூட்டு அதிக உயரத்திலிருக்கின்றமையால் எனக்குக் கூட எட்டவில்லை. திறப்பதெவ்வாறு? என வினவினன் இராட்சதன்.

"இரும்புக் கம்பிக் கதவுதானே. கம்பிகளை வளைத்து உட்பிரவேசிக்கலாமே!" என்று குள்ளன் கேட்க,

"என் சக்திக்கும் மிச்சமான கம்பிகளாயிருக்கின்றன. வளைப்பதெவ்வாறு?" என இராட்சதன் வினவினன்.

"சரி,பருமனிலும் பிரயோஜனமில்லை உயரத்திலும் பிரயோஜனமில்லை. பார்" என்று சொல்லிக் குள்ளன் கம்பிகளுக் கூடே நுழைந்தனன். "இதோ பார். இங்கு வந்துவிட்டேன். உனது சரீரம் உட்பிரவேசிக்க உதவாது. நானே சந்தைக்குப் போகக் கூடியவனானேன். வந்தனம் போய் வருகின்றேன்" என்று கூறிக் குள்ளனகன்றனன்.

"சற்றுப் பொறு. அந்தச் சுவரைத் தாண்ட நான் உனக்குதவினேன். இந்தச் சுவரைக் கடக்க நீ உதவிசெய்ய வா" என இராட்சதனவனை அழைத்தனன்.

"ஒன்றுக்குமுதவாத பொடியன் உனக்குதவுவதெவ்வாறு?" நண்பா! அப்படித்தானே பேசினாய். நீ என்னைத் தூக்கி விட்டவண்ணம் நான் உன்னைத் தூக்கிவிட முடியுமா?"



"தயவுசெய்து திரும்பி வா. நான் உன்னைத் தூக்கி சுமப்பேன். அப்படியானால் சாவி உனக்கு எட்டும். நீ திறக்கலாம். நானும் உட்பிரவேசிக்கக் கூடும்" என்று இராட்சதன் அழைத்தனன்.

அவ்வாறே குள்ளன் திரும்பிப் போனான். இராட்சதன் அவனைத் தூக்கி சுமக்க, குள்ளன் சாவியைப் பிடித்துத் திருப்பிக் கதவைத் திறந்தனன். இருவரும் உட்பிரவேசித்து வழி நடந்தனர்.

"சுய முயற்சியால் ஒருவன் சகலத்தையும் செய்யமுடியாது என்று அறிந்துகொண்டாயா? ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஒருவரோடொருவர் ஒத்துழைத்தால் எவ்வளவோ காரியங்கள் சித்தியாகச் செய்யலாம். பருமனும் பெலனுமிருந்தால் போதாது" என்று குள்ளன் கூறினன்,

இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டு சந்தைக்கேகினர்.

---

## சரியான ஞாபக சக்தி

சரியான ஞாபக சக்தி இன்னது என இன்று பேச விரும்புகின்றேன். கண், காது, கரம், நாவு முதலியவற்றைக் காண்கின்றதுபோல ஞாபக சக்தியைக் காணமுடியாது. ஆயினும் நமது ஜீவியத்தில் அது முக்கியமான ஒரு காரியம்.

நல்ல ஞாபக சக்தியிருப்பது நல்லது. இச்சக்தி யிருக்கும் பையன்களும் பெண்களும் அதிஷ்டசாலிகள். ஜீவிய காலமெல்லாம் இது உதவி செய்யும். காரியங்களை எளிதிற் செய்ய ஏதுவுண்டாக்கும். நல்ல ஞாபக சக்தியிருப்பது நல்லதுதான். ஆயினும் சரியான ஞாபக சக்தியிருப்பது அதைவிட மேலானது.

சரியான ஞாபக சக்தி யென்றாலென்ன? மறக்கவேண்டியவற்றை சிலர் நினைத்துக் கொண்டே யிருக்கின்றனர். ஞாபகத்தில் வைக்கவேண்டியவற்றை மறந்து விடுகின்றனர். பிறரிடத்திலிருந்தடைந்த துன்ப துயரங்களை சதா ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கின்றனர். பிறரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நற்காரியங்களை மறந்துவிடுகின்றனர். அவர்கள் நன்றிசெலுத்தவும் மறந்துவிடுவர்.

இப்படிப்பட்ட ஞாபக சக்தி உங்களுக்கு வேண்டாம். சரியான ஞாபக சக்தி மறக்க வேண்டியவற்றை ஞாபகப்படுத்தும். அற்ப சொற்ப கஷ்டங்களை மறக்கும். சரியான ஞாபக சக்தி ஞாபகப்படுத்த வேண்டியவற்றை ஞாபகத்தில் வைக்கும். தன்னையே மறக்கவேண்டும் என்று எண்ணும். பிறரை மறவாது நினைக்க வேண்டும் என்றும் எண்ணும்.

அந்நியரை உபசரிக்க நாடி அவர்களுக்குப் பட்சம் காட்ட நினைக்கவேண்டும் என்றும் ஒரு ஞானி கூறுகின்றார். அந்நியரை சில வேளைகளில் நாம் பட்சமாய் நடத்துகிறதில்லை. அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சிலாக்கியங்கள் கொடுக்கிறதில்லை. அவர்களிடமிருந்து அடைவது அதிகம். அவர்களுக்குக் கொடுப்பது கொஞ்சம்.

அந்நிய நாட்டில் எப்போதாயினும் நீங்கள் அந்நியராயிருந்ததுண்டா? புதுப் பிள்ளைகளாய்ப் புதுப் பள்ளிக்கூடத்துக்குப் போனபோது உங்கள் அநுபவம் என்ன. மற்றப்பையன்களும் பெண் பிள்ளைகளும் ஒருவரோடொருவர் சிநேகமாயிருந்து, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிநேகிதரைத் தெரிந்துகொண்டபோது உங்களுக்கு இடமில்லையென்று எண்ணவேண்டியதிருந்ததல்லவா? உங்கள் அநுபவத்திலிருந்து புதுப்பிள்ளைகளுக்கு உதவி செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். அந்நியனுய் விடப்பட்டால் இதயம் எவ்வாறிருக்கும் என்றறிந்திருக்கிறபடியால் புதுப் பிள்ளைகளோடு பேசுங்கள். உறவாடுங்கள். சொந்த வீடுபோல் எண்ணும்படி ஏதுக்களை சவதரியுங்கள்.

கஷ்டப்பட்டோருக்கே கஷ்டத்தினின்று விடுவிக்கும் முறை தெரியும் இரு கதைகள் இதை நன்கு விளக்குகின்றன:—

ஒரு நொண்டி இரு தடி கொண்டு நடந்து செல்கையிற் தன் தடியால் வாழைப் பழத் தொலியொன்றை வீதியிலிருந்து தள்ளிவிட்டான். அங்கு மூன்று பூரண சுகதேகிகள் நின்றுகொண்டிருந்தனர். எனினும் ஒருவருக்காவது அத்தொலியை அகற்றவேண்டுமெனத் தோன்றவில்லை. அந்த நொண்டியோ முன்னொரு நாள் ஒரு வாழைப்பழத் தொலியை மிதித்து வழுக்கி விழுந்து முடவனுனவன். மற்றவர்களுக்கு ஆபத்து வராவண்ணம் அவன் அவ்வாறு அத்தொலியை அகற்றினுன்.

ஒரு நாள் ஓர் ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கு ஒரு பதினுறு வயது வாலிபன் படுக்கையிலிருந்தனன். நான் அவனேடு பேச நெருங்கியபோது அவன் தன் படுக்கையின் துணியை நீக்கி இரு வயதுப் பையனை எனக்குக் காண்பித்தனன். தனக்கு சில நாட்களுக்குமுன் காலில் செய்யப்பட்ட ஓர் இரண சிகிட்சையே அந்தப் பையனுக்கும் செய்யப்பட்டது என்றும் தான் அவனுக்கு அநுதாபங்காட்டி அவன் கஷ்டத்தில் பங்கு பெறும்படி தன் சமீபமாய் வைத்து பெற்ற தாயினும் உற்ற தாய்போல் உதவி செய்கிறதாகவும் அவ்வாலிபன் சொன்னுன்

கஷ்டத்திற்குள்ளானோர் அநுதாபங்காட்ட வல்லோர் ஆனதுபற்றி அநுதாபங்காட்டுமுன் கஷ்டத்துக்குள்ளாக வேண்டுமென்று காத்திருக்க வேண்டாம்: இன்றே அநுதாபங் காட்ட ஆரம்பிக்கலாம். மற்றவர்களைப்பற்றி எண்ணுகிற எண்ணமே அவசியம். ஒரு புன்னகை ஒரு பட்சமான வார்த்தை செலவில்லாத காரியங்கள். எனினும் உலகில் அவற்றிற்காக ஆசை கொள்வோர் அநேகர்.

மௌனமணி நேரம்.

---

## குடும்பப் பயிற்சி

### பெற்ருேருக்கு ஒரு கேள்வி

"உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பேசுகிறீர்களா?"

Marion Brown field.

இது ஒரு கேள்வியா? என்ன நூதனமான கேள்வி? "உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பேசுகிறீர்களா? வீட்டில் வந்திருந்த விருந்தாளிகட்கும், உபாத்திமாருக்கும், குருமாருக்கும் எத்தனை பெற்ருேர் தங்கள் பிள்ளைகளிடத்தில் சீறி விழுகின்ருர்களென்றும், எத்தனை



பேர் பிள்ளைகளுக்குமேல் கூப்பாடுபோடுகின்ருர்கள் என்றும், எத்தனைபேர் அவர்கள் பிள்ளைகளை தண்டிப்பதைப்பற்றி தங்கள் முன்னிலையில் பேசுகின்ருர்கள் என்றும் நன்ருய்த் தெரியும். அது நல்ல முறையல்ல. பிள்ளைகளிடத்தில் பேசும் சமயமெல்லாம் தண்டனையைப் பற்றியதாயிருக்கும் என்று எண்ண இடமுண்டு. ஒரு நல்ல தாய் தனி சம்பாஷணையின் மூலமாய் ஒழுங்காய் சாப்பிடும் முறையைக் கற்றுக் கொடுத்தால், ராஜாவுக்கு இன்னும் ஒழுங்காய் சாப்பிடத் தெரியாது" என்று மற்றவர்கள் முன்பாக சொல்ல நேரிடாது. பெற்ருேர் தங்கள் பயிற்சியில் ஏற்பட்ட குறைவை மறைக்கிதற்கோ அல்லது பிள்ளையை அவமானப்படுத்திச் சீர்ப்படுத்தவோ இம்முறையைக் கையாடுகின்றனர்.

ஒழுங்காய் சாப்பிடும் வழக்கத்தை அன்பான சம்பாஷணையின் மூலமாய் அநேகம் பிள்ளைகள் கற்றுக் கொள்ளக்கூடும். நன்முன் மாதிரியால் நல்லொழுக்கம் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் கவலையீனமாய் சரியாய் நடந்துகொள்ளத் தெரியாதவர்களைப் பற்றிப் பேசி அநுதாபங் காட்டவேண்டும். சிறு பிள்ளைகளாயிருக்கும்போதே இப்பயிற்சி கிடைத்தால் பிள்ளைகள் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுவார்கள்.

பிள்ளைகளோடே பேசுவதே சிறந்த முறை. தப்பிதமாய்ச் செய்யும்போது எவ்விதம் செய்யப்பட்டால் உசிதமாயிருக்கும் என்று பிள்ளைகளையே கேட்பது நல்லது. பிள்ளைகளை மரியாதையோடு நடத்தப் பிரயாசப்பட்டால் அவர்கள் எவ்வாறு பெருமையுடன் சீர்திருத்திக் கொள்ளுகிருர்கள் என்பது ஆச்சரியமான காரியம்.

பிள்ளைகளோடு பேசுவதற்குக் காலமும் பொறுமையும் வேண்டும். கடைசியில், கிடைக்கும் லாபம் அதிகம். அநேக மோசங்கள் வரா. "சாப்பிடு முன் பல் துலக்கவேண்டும் ராஜா!" என்று பலமுறை ஞாபகப்படுத்துவதற்குப் பதிலாக, சுத்தத்திற்கும், சுகத்துக்கும் சுந்தரத்தோற்றத்திற்கும் சுத்தமான வெண்மை நிறமுடைய பல் எவ்வளவு அவசியமென்பதைக் குறித்து ராஜாவிடம் பேசினுல் அது அதிக நன்மை பயக்கும். "ராஜா பல் துலக்கி சாப்பிடப் பண்ணுமுன் என்ன கஷ்டமாயிருக்கின்றது! எனக்கும் வெட்கம் !! உனக்கும் வெட்கம் தாராபாய் !!!" என்று ராஜாவின் உபாத்தினியிடம் முறையிடுவது ஞானமன்று. உன் உபாத்தினியிடம் சொல்லுவேன் என்று பயமுறுத்தி இவ்விதமாகப் பேசுவது ராஜாவின் சுயமரியாதையைக் கெடுப்பதற்குச் சமானம். அன்று முதல் அந்த உபாத்தினியைக் காண வெட்கப்படுவான். பாடம் கேட்கும்போது விடை பகருவது அவனுக்கு கஷ்டம்.

வெட்கப்படுத்தும்படி பிள்ளையைப்பற்றிப் பேசாமல் பிள்ளையோடு பேசப் பிரயாசப்படுவோம். சந்திரா தன் கிழிந்த துணி தைக்கும்படி செய்வது கஷ்டம். வெகு நேரம் பேச வேண்டியதிருக்கலாம். சந்தோஷத்தோடு பேசி, அவள் அதை தைக்காமல் விட்டது மறதியினுலோ, சோம்பலினுலோ, பிரீதியின்மையினுலோ என்று கண்டறியவேண்டும். மறதியாயிருந்தால் மணி யடிக்கும் கடிகாரத்தை தைக்கும் நேரங் காட்ட அந்நேர மடிக்கும்படி திருப்பி வைக்கவேண்டும். சிநேகிதரோடே பேசிக்கொண்டிருந்தாலும் அது ஞாபகப்படுத்தும். சோம்ப,

வினுலிருந்தால் தாயார் தன் மகளோடு வேலை மாற்றிக்கொள்ளலாம். சமையல் வேலைக்கு மகளை அனுப்பி விட்டு தாயார் தையல் வேலை செய்யலாம். ஆனுல் இந்தக் காரிங்களை இரகசியமாகவே வைத்துக்கொள்ளவேண்டும். இது குடும்ப காரியம். சந்திராவுக்கு இஷ்டமானுல் வெளியே சொல்லலாம்.

பிள்ளைகளோடு பேசுவது குறை கூறுவதாய் மாத்திரம் இருக்கக்கூடாது. சீர்ப் படுத்துங் காரியமாய் மாத்திரம் இருக்கலாகாது. புகழ்ந்து பேசுவதும் நல்லதே! புன்னகை யோடு நன்னடக்கையைப்பற்றிப் பேசுவதே சிறந்த முறை. தனியாயிருக்கும்போது தாயார் பிள்ளையைப் பார்த்து, "விருந்தினரை நீ மரியாதையோடு வரவேற்பதைக் கண்டு பெருமை கொண்டேன்" எனக் கூறின், பிள்ளை எப்போதும் மரியாதைகாட்ட உற்சாகமடைகின்றது. பிள்ளை யடையும் சித்தியைக் குறித்தும் தனியாயிருக்கும்போது வியந்து கூறவேண்டும். பிறர் முன் பேசலாகாது.

பிள்ளைகளோடு பேசுவது என்றுல் சிநேக பாந்துவமாயிருப்பது. அவர்களுக்கும் பெரியோருக்குமிடையில் பெரும் பிளவு ஏற்படாதபடி தடுக்கின்றது. சமநிலையும் சுயமதிப்பு முண்டாகும். பேசி தர்க்கிப்பது பிள்ளையின் அபிப்பிராயத்தை வெளியிட இடந்தருகின்றது. இதில் பிள்ளைக்கு நியாய தோரணையாய் யோசிக்கவும் சரியானவற்றை அதிகமாய் மதிக்க வும் பயிற்சி கிடைக்கின்றது. இப்பயிற்சி ஜீவியகாலமெல்லாம் நிதானமாயும் யோசனையாயும் நடந்துகொள்ள ஏதுவுண்டாக்குகின்றது.



# கடிதம்

விலங்கூர்,

5—10—1937.

பிரிய பிள்ளைகாள்!

உங்களுக்கு இக்கடிதம் யான் எழுதப்பெற்ற சிலாக்கியம் மிகப்பெரியது. பெரிய எஜமானிடம் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருக்கின்றேன். அரிய பெரிய காரியங்களை செய்து வருகின்றேன். நீங்கள் செய்யும் வேலையைப்பற்றி அரிய ஆசை, எனக்கு எழுத மாட்டீர்களா?

என் எஜமானனுக்குக் கழுத்தில்லை. யானே கழுத்து. அவருக்கு மூக்கில்லை. யானே மூக்கு. அவருக்குக் கையில்லை. யானே கை. எனக்கு ஒரு விரலுண்டு. அது மிகவும் சிறியது. உங்களைவிட உயரமாய் வளர்ந்திருக்கின்றேன். என் எஜமானுக்குத் தேவையான ஆகாரப் பொருள் எவ்வளவு உயரத்திலிருந்தாலும் நான் அதை ஒடித்துக் கொடுப்பேன். மரக் கிளைகளை யான் வளைத்து ஒடிக்கும்போது நீங்கள் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். வேண்டு மானுல் வேரோடேகூட மரங்களைப் பிடுங்கி எறிந்து விடும் சக்தி எனக்கு உண்டு. பண்டிகை களில் பக்தியாய் தெய்வத்திற்குமுன் நிற்பேன். எனக்கு வெட்கமே யில்லை. ஏனென்னில் எம் மதத்தினரும் என்னைப்போல் பக்தியின் வேஷ மணிந்து தெய்வத்திற்கு முன் நடப்பதைக் கண்டிருக்கின்றேன். உத்தியோகம் பெரிய உத்தியோகம். புத்தியோ கெட்ட புத்தி.

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், பதிலுக்குப் பதில்" என்பதே என் பிரமாணம் எவ்ரையும் எளிதில் எடுத்து எறியக்கூடிய சக்தி எனக்குண்டு. ஏனென்றுல் எனக்குள் 30000 தசை நார்களுள. சக்தியில் பெரியோன் யானே!

ஒரு நாள் ஒரு தையற்காரன் கடைக்குப் போய் ஜன்னல் வழியாய் நுழைந்து பசி யாற்ற ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று காத்து நின்றேன். அவனே ஓர் ஊசியினுல் குத்தினுன். இரத்தம் வடிந்தது. வேதனை எடுத்தது. கோபம் வந்தது. எனக்கு இரு குழாய்க ளுள. அவைகளில் கலங்கின அசுத்தத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்து தையற்காரன் தலை வழியாய் வழுந்தோடும்படி ஊற்றிவிட்டேன். என் மனம் ஆறிற்று. அவன் அழுதான். அதோ என் மனமும் மாறிற்று. என் சக்தியை நற்காரியங்களுக்கென்று உபயோகிப்பேன் என்று தீர் மானித்தேன். தையற்காரனை அசுத்தமாக்க உபயோகித்த சக்தியை என் எஜமானை சுத்தப்படும் படி உபயோகிக்கின்றேன். சுத்தமான தண்ணீரை வாரி என் எஜமான்மேல் ஊற்றிக் கழுவு வேன். அந்த இரு குழாய்களில் தண்ணீர் எடுத்து என் எஜமான் தாகத்தைத் தீர்ப்பேன். நன் மை செய்ய நாடுகின்றேன். எனினும் என்னை ஏமாற்றுகின்றவர்கள் ஏராளமாய் இருக்கின்றனர்.

ஒரு நாள் ஒரு வீட்டிற்குப் போனேன். எனக்குப் பணங் கொடுக்க இஷ்டமில்லை எனினும் வேடிக்கை பார்க்க மனமுடையவர்களாய் அங்குள்ளவர்கள் சிறு நாணயம் ஒன்றைத் தேடி எடுத்துத் தரையிலே போட்டு அதை என் விரலால் எடுத்துக்கொண்டால் அது என்னுடையது என்று இயம்பினர். பெரிய காரியங்களை செய்யவல்ல எனக்கு இச்சிறு காரியத்தைச் செய்ய இயலாது என்று எண்ணினர். என் விரல் அதை எடுத்துத் தந்தது. என்னை ஏமாற்ற எண்ணினவர்கள் ஏமாந்து போயினரேயொழிய யான் ஏமாந்து போகவில்லை. என்கூட ஒரு நாளைக்கு வாருங்கள். என்னை ஏமாற்றுகின்றவர்களின் தொகையையும் அவர்கள் கதியையும் பாருங்கள்.

என்கூட சிநேகமாயிருக்க மாட்டீர்களா? எனக்கு ஒரு வரியாயினும் எழுதமாட்டீர்களா? உங்களைக் காணவும் உங்கள் கடிதம் வாசிக்கவும் எவ்வளவாய் வாஞ்சிக்கின்றேன். என்னை உங்களுக்கு நன்றாய்த் தெரியுமென்று எண்ணுகின்றேன்.

உங்களுக்கு என் அன்பு.

இப்படிக்கு,
அன்பை ஆசிக்கும்,
அதிசய கரம்.



காஷ்மீரத்துக் கலப்பை.

nted by S. T. Rhenius at the N. M. S. Press, 48 B, Peters Road, Royapettah
and Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.

# வித்யாதனம்

(TAMIL TREASURE CHEST)

Vol. 1. | நவம்பர்மீ 1937ஆம் | No. 8.

சென்னை-600 008



## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 |
| 2. | ஜீவிய டயரிகை | 2 |
| 3. | கற்கும் முறை | 4 |
| 4. | 'அவிசுவாசத்திற்கு இடமில்லை' | 7 |
| 5. | "கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்" | 8 |
| 6. | வேத வாசிப்பு | 9 |
| 7. | "கொடூரமான வார்த்தைகள் கோபத்தைக் கிளப்பும் | 10 |
| 8. | பிள்ளைகளுக்குரிய படங்கள் | 14 |
| 9. | துறைமுக அரசி | 15 |
| 10. | வஸ்திரங்களைச் சுத்தம் செய்தல் | 17 |
| 11. | கணித விளையாட்டுகள் சிறு பிள்ளைகளுக் குரியது | 18 |
| 12. | கிறிஸ்து ஜயந்திக் கதை | 19 |


### பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |


Rev. T. A Fenn,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George Town,
Madras


# வித்யாதனம்

# VIDYADHANAM

## (TAMIL TREASURE CHEST)


தொகுதி 1. | நவம்பர்மீ 1937ஹு | பகுதி 8.


## பத்திராதிபர் குறிப்பு

கடந்த மாதம் வெளிவந்த விலங்கூர் நிருபத்திற்குப் பதிலுண்டா? ஆக்கியோன் யானையின் அதிசயமான கரம் துதிக்கை எனக் கண்டுபிடித்தீர்களா? இன்னும் அநேக சிநேகிதர் உங்களுக்குக் கடிதம் எழுதக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

கற்கும் முறையைப்பற்றி இம்மாதமும் படித்து பாருங்கள். இன்னும் வரும். மாதத்தின் ஒவ்வொரு நாளும் வாசிக்கத்தக்கதாக வேதபாகம் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதின்படி ஒழுங்காய் வாசித்துவந்தால் மிகுந்த பிரயோஜனம் உண்டு. "தான் வெட்டின குழியில் தானே விழுந்தவனை"ப் பார்க்கலாம். கொடூரமான வார்த்தை கோபத்தைப் பிறப்பித்த வரலாறு எவ்வாறு என்பதை விளக்கும் கதையையுங் காணலாம்.

குடும்பப் பயிற்சியின் பக்கம் மகா விசேஷித்தது. கவனித்து வாசியுங்கள். சுகாதாரக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது. கணக்குக் கற்பிக்கும் விளையாட்டு முறையைப்பற்றியும் இனி மாதந்தோறும் இதில் எழுதப்படும். வீட்டு சாமான்களைப் பாதுகாக்கும் வழிவகைகளைப்பற்றி வாசித்துப் பிள்ளைகள் பெற்றோருக்குப் பேருதவி புரியலாம். பூமிசாஸ்திரப் பாட சம்பந்தமான கடிதமும் இம்மாதம் வெளிவரும்.

வித்யாதனத்தில் வெளிவரும் விஷயங்களில் ஏதேனும் குறைகளுண்டென்று நீங்களறிந்திருந்தால் அதைப் பத்திராதிபருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். உங்கள் அபிப்பிராயத்தை அறிய ஆசிக்கின்றோம். இதில் எவ்விஷயம் பிரயோஜனமானது என்பதைப்பற்றியும் எழுதும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கடைசி பக்கத்தில் ஏதேனும் ஒரு நல்ல படம் அச்சிடப்படும். படம் சேர்க்கின்ற பிள்ளைகள் ஒரு நல்ல படப் புஸ்தகம் செய்ய ஏதுவுண்டாகும்.

T. A. Fenn.

# ஜீவிய மாளிகை

சீமான் ஒருவன் தன் வேலைக்காரியை விவாகம் செய்யத் தீர்மானித்திருக்கும் மனிதனிடத்தில் பணங்கொடுத்து ஒரு மாளிகை கட்டும்படி வேலை கொடுத்தனன். மாளிகையின் அளவு, கட்டும் செலவின் கணக்கு முதலியவற்றைக் கொடுத்துத் தான் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா போய்த் திரும்புவதற்குள்ளாக அம்மாளிகை கட்டித் தீர்ந்திருக்கவேண்டும் என்று சொல்லி வேலையை ஒப்படைத்தனன். அந்த மனிதனுக்கு அதிக சந்தோஷம். தன் வேலையை மேல் பார்க்க ஆளில்லாதபடியால் தான் இஷ்டம்போல் செய்துகொள்ளலாம் என்று எண்ணி வெளிப்பார்வைக்கு அழகாய்த் தோன்றும் ஒரு மாளிகையைக் கட்டினன். பூமிக்குக் கீழ் புதைக்கப்பட்ட குழாய்களெல்லாம் ஒன்றுக்கும் உதவாத கேவலமானவை. சொற்ப விலைக்குக் கிடைத்தவை. குழாய்களும் ஒன்றோடொன்று சரியாய்ப் பொருந்தும்படி இணைக்கப்படவில்லை. ஜன்னல் கதவுகளும் சரியான மரத்தில் செய்யப்படவில்லை. காணக்கூடாத இடங்களில் மச்சுப்பாவும்போது கேவலமான ஜாமான்களை உபயோகித்துப் பிரயோஜனமில்லாத வேலை செய்து முடித்தனன். இணைப்புக் கற்கள் கொடுத்துக் கட்டாததால் பிளவு காணப்பட்டபோது சாந்து வைத்தடைத்துப் பிளவை மறைத்தனன். வெளிப்பார்வைக்கு நன்றாய் இருக்கும்படி சாயம் பூசி வார்னிஷ் அடித்தனன். அதின் பலனாக ஏராளமான பணத்தைக் கொள்ளையடித்தனன்.

ஐரோப்பா சென்றவர் மீண்டு வந்தபோது வேலை முடித்தவன் அவரைக் கூட்டிக் கொண்டுபோய் நேர்த்தியாய்த் தோன்றுகின்ற பாகங்களையெல்லாம் காட்டி அவ்வித அழகான மாளிகை அவ்வூரில் வேறெங்கு மகப்படாது என மொழிந்தனன்.

“உனக்கு அம்மாளிகையின்மீது அவ்வளவு மதிப்பு இருக்கிறதற்காக நான் சந்தோஷப்படுகின்றேன். நீயும் உன் மனைவியும் வசிப்பதற்கென்றே நான் அதைக் கட்டி உங்களுக்கு அந்த மாளிகையை என் கலியாண நன்கொடையாகத் தருகின்றேன்” என்று எஜமான்கூறினன்

அந்த மனிதனின் முகநாடி வேறுபட்டது. ஒழுகுங் குழாய்களும், கேவலமான ஜன்னல்களும், கதவுகளும், தளம் போட்டு மூடாத மூலைகளும், மழை பெய்தால் ஒழுகக்கூடிய மேல் மச்சும் தன் கண்முன் நின்றன. மற்றவர்கள் வசிப்பதற்கு நல்ல மாளிகை என்று சொன்னவன் தான் வசிப்பதற்கு ஏற்றது என்று எண்ண மனமற்றவனாய் நின்றனன்.

அவன் ஒரு மடையன், கெட்டவன் என எண்ணுகின்றாயோ? “நீயே அந்த மனுஷன்!” நீ வசிக்கும்படி ஒரு மாளிகை கட்டுவதற்கு உன் வசம் அந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நாம் ஒவ்வொருவரும் பல மாளிகைகள் கட்டுகின்றோம்:—

1. சரீர மாளிகை. ஆகாரம் அருந்தும்போதெல்லாம் சரீர மாளிகையைக் கட்டுகின்றாய். உன் வழக்க பழக்கங்கள் அம்மாளிகையைக் கட்டும் ஜாமான்கள். உன் தேகாப்பியாசம், பருகும் சுத்தமான பானம், உட்கொள்ளும் சுத்த ஆகாயம், கால ஒழுங்குகள் யாவும் உன் மாளிகை கட்ட உபயோகிக்கும் கல், மண், மரம், சுண்ணாம்பு முதலியவை. ஏற்ற ஆகாரப் பொருள் அல்லாதவற்றை அருந்த இடங்கொடாவிடில் பெருந்தீனிக்காரர் கோபங்கொள்ளுகின்றனர். சிலர் சோம்பேறிகள். சிலர் கழுவப் பெருக்கமாட்டார்கள். நேரத்தில் தூங்கப் போகமாட்டார்கள். நீங்கள் இப்படி இருந்தால் பெரியவர்களாகும்போது நீங்கள் வசிக்கும்படி நல்ல



சரீர மாளிகை உங்களுக்கிருக்கமாட்டாது. உங்கள் ஆகாரப் பையோ கல்லீரலோ உங்களுக்கு கஷ்டம் கொடுத்தால், நீங்கள் பெலவீனராயும் கூட்டு நெஞ்சுடையோராயும் இருந்தால் சுகமுள்ளவர்கள் செய்யக் கூடியவற்றை செய்ய முடியாமலிருந்தால் இதை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களே உங்கள் சரீர மாளிகையைக் கட்டுகின்றவர்கள். நீங்களே அதில் வசிக்கவேண்டியவர்கள்.

2. மன மாளிகை. இதிலே உங்கள் யோசனை யாவும் நடக்கும். உண்மையுள்ளவற்றையோ உண்மையற்றவற்றையோ, எதைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் படிக்கின்றவை, பாடம் ஆயத்தம் பண்ணும் வகை, கவனம், புத்திக்கூர்மை, ஒழுங்கு, முதலிய வழக்க பழக்கங்களைக்கொண்டு இம்மாளிகையைக் கட்டுகின்றீர்கள். மாணவராயிருக்கும்போது நல்ல ஜாமான்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பாடசாலையில் உபாத்திமாரோடு விளையாடலாம் என்று எண்ணுகிற மாணவரை நான் அறிவேன். உங்களை வேலை செய்து முடிக்கும்படி ஏவும் உபாத்திமாருக்கு ஒரு மார்க்கும், உபாத்திமாரை ஏமாற்றி ஜெயங்கொண்டால் உங்களுக்கு ஒரு மார்க்கும் என்று வைத்து விளையாடுகிறவர்கள் மாணவருள் எத்தனை? உங்கள் மன மாளிகையில் துவாரங்கள் ஏற்படுமாயின் உங்கள் உபாத்தியாயருக்கல்ல உங்களுக்கே கெடுதல் உண்டாகும். நீங்களே அதில் வசிக்கவேண்டியவர்கள்.

3. இதய மாளிகை. நீங்கள் கட்டும் மாளிகைகளுள் சிறந்தது இதய மாளிகையே! அதைச் சரியாய்க் கட்டுகின்றீர்களா? சில அறிவிலிகள் அதைத் தங்களுக்கென்றே கட்டுகின்றனர். பிறகு அவர்கள் விருத்தாப்பிய காலத்தில் தனியாயிருக்கவேண்டிய திருக்கும். விசாலமற்ற, இருண்ட, இடமில்லாத மாளிகைதான் அவர்களுடையதாகும். அதில் நல்ல ஜாமான்கள் சேர்க்கப்படவில்லை. இழிவான புத்தியும், பொறாமையும், பேராசையும் கெடுதல் புத்தியும் வெகுகாலம் நிலைக்காது. ஆனால் அநுதாபம், தாராள சிந்தை, மரியாதை முதலியன நிலைவரமான ஜாமான்கள். அழகான மாளிகை கட்டலாம். அநேக சிநேகிதர் நாடி வருவார்கள். ஜீவனின் கர்த்தாவும் உட்பிரவேசிப்பார். உனக்கு மாத்திரம் இடமிருக்கத்தக்கதாய் மாளிகை கட்டப்பட்டால் அவருக்கு இடமிராது. எந்த மாளிகை கட்டப்போகின்றாய், அழகிய மாளிகையோ, அல்லது இருண்ட இடமற்ற சிறைச்சாலையோ?

இந்த மாளிகை கட்டுவது எவ்வளவு முக்கியம். நீ மாத்திரம் கட்டுவது கூடாத காரியம். கடவுளே பெரிய சித்திரக்காரன். இயேசு கிறிஸ்துவில் நமக்கு மாதிரிப் படங் கொடுத்திருக்கின்றார். இயேசுவே அஸ்திபாரம். அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டுவோமானால் தப்பிதமேற்படாது. நமது சொந்த முறையில் கட்டுவோமானால், சுவர்கள் நிற்காது. பிளவு ஏற்படும். கட்டிடம் விழுந்துவிடும்.

மௌன மணி நேரம்.

“தருக்களை நடுபவன் கடவுளின் தொண்டன்.
பின்னடி யாருக்குப் பேருபகாரம் செய்கின்றான்;
முன்னறியாதார் அவனை ஆசீர்வதிப்பர்”

HENRY VAN DYKE.

# கற்கும் முறை II


(Mary Jean Daily)

(தொடர்ச்சி)

3. மன நிலை தனக்கு சக்தியுண்டென்ற நம்பிக்கை ஏற்படும்போது ஒருவன் செய்ய விரும்பும் காரியத்துக்குப் போதுமான சக்தி வெளியாகின்றது. இந்நம்பிக்கை முன் அநுபவத்தினால் ஏற்படலாம். அல்லது தன் கூட்டாளிகளிடமிருந்து கிடைத்திருக்கலாம். மாணவர் சக்திக்குத்தக்கதான பாடம் கொடுப்பது உபாத்தியாயரிடமிருக்கின்றது. இவ்வித நம்பிக்கை கொள்வது கலாசாலை மாணவருக்குக் கஷ்டம். எனினும் சித்தியடைவதற்குச் சித்தங்கொள்ளும் தீர்மானம் ஏற்படும்போது செய்யக்கூடாத காரியமும் கைகூடும்.

கோபமாயிருக்கும்போது கல்வி கற்க முடியாது. கோபம் தீருமட்டும் உலாவி வர வேண்டும். அல்லது கஷ்டமான கைத்தொழில் செய்யவேண்டும். பிறகு படித்தால் மனதிற் தங்கும்.

மனநிலை மகா முக்கியமானது. அநேக மாணவருக்குப் படிக்க ஆரம்பிப்பதுதான் கஷ்டம். சரியான மனநிலை ஏற்படும்வரைக்கும் படிக்காமல் நேரத்தை நஷ்டப்படுத்தும் மாணவர் எத்தனை? ஒரே தீர்மானமாய் உட்கார்ந்தால் அதிவிரைவில் மனநிலை ஏற்படும். சித்தியுள்ள வேலை செய்யலாம். கால அட்டவணை வைத்து வேலைசெய்தால் சித்தி யடையலாம். ஒவ்வொரு பாடத்தையும் படிக்க ஒவ்வொரு நேரம் தெரிந்துகொண்டு அதற்குள்ளாகப் படித்து முடிக்கப் பிரயாசப்பட்டால் எளிதில் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொள்ள இடமுண்டு.






4. நேரம். எந்நேரமும் நல்நேரமே! ஆயினும் பகலில் முன்னேரம் படித்தால் அதிக சீக்கிரம் திட்டவட்டமாகப் படிக்க முடியும். காலையில் அநேகர் சிறந்த வேலை செய்கின்றனர். இரவு எட்டு மணி வரை, படிக்கும் சக்தி குறைந்துகொண்டே போகின்றது. அதற்கு மேல் கொஞ்சம் படிக்கக்கூடிய சக்தியுண்டாகும். யோசிக்கும் பாடங்களை காலையிலும் வழக்கமான வேலைகளை மாலையிலும் செய்வது நல்லது.

5. இளைப்பாறுதலும் வேலை மாறுதலும். வேலை மாறுதலிருப்பது அவசியம். அதிக வேலை செய்யமுடியும். ஒரே வேலையில் அதிக நேரம் செலவழித்தால் களைப்பு உண்டாகும். எந்த வேலையிலும் இடையில் இளைப்பாற இடங்கிடைத்தால் நல்ல வேலை செய்யலாம். இரும்பு வேலையில் பன்னிரண்டு நிமிஷத்துக்கு ஒரு தடவை ஒரு நிமிஷம் இளைப்பாறினால் நல்ல வேலை செய்யலாம். கைத்துண்டு மடிக்கிற வேலையில் ஐந்து நிமிஷத்துக்கு ஒரு நிமிஷம் இளைப்பாறுதல் தேவை. மனோபிரகாரமான வேலையில் சித்தி கிடைக்க வேண்டுமானால் முப்பது நிமிஷத்துக்குப் பின்பு கொஞ்சம் இளைப்பாறுதல் தேவை. அறையிலே சில நிமிஷம் உலாவினாலும் போதும். இடைக்கிடையே கண்ணை மூடித் திறப்பது நல்லது. தூரத்திலுள்ள பொருட்களை அல்லது காட்சிகளைக் காண்பதும் நல்லது. இளைப்பாற அதிக நேரம் அவசியமில்லை.

பரிபூரண வளர்ச்சிக்கு பழக்கம் பிரதானம் என்பாருளர். இது பரிபூரண உண்மையன்று. பழக்கம் திறமை யளிக்கின்றது. எனினும் அது காலத்தைப் பொருத்தது. தினசரி பழகுகின்றவர்கள் எந்தப் கைப்பழக்கத்திற்கும் அதிக நேரம் செலவிடக்கூடாது. அந்தந்தத் தொழிலுக்குத் தக்கதாக ஐந்து முதல் பதினைந்து நிமிஷம் வரை நேரம் செலவிடலாம். இரண்டொரு நாள் துவக்கத்தில் அதிக நேரம் செலவழித்துவிட்டாலும் பரவாயில்லை. விரைவில் அதை சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.



6. கால ஆதாயம். புஸ்தகங்கள் எடுப்பதிலும் பக்கங்கள் திருப்புவதிலும் காலங் கடத்துகின்றவர்க ளுளர். கால ஆதாயம் முக்கியமானது. ஒரு மாணவன் மூன்றுமணி நேரம் சமஸ்கிருதம் படிப்பதற்குள்ளாக முப்பது நிமிஷம் ஆதாயம் பண்ணக்கூடியவனானன். இலக்கணப் புஸ்தகத்தில் அடிக்கடி திருப்பவேண்டிய பக்கங்களுக்கு அடையாளம் வைத்திருந்தனன். படிக்கவேண்டிய பாடங்களையும் எளிதில் எடுத்துப் படிக்கத்தக்கதாகப் புஸ்தகங்களில் அடையாளம் வைத்திருந்தனன். தேவையான புஸ்தகங்களையும் மேசையில் வரிசைக் கிரமமாய் அடுக்கிவைத்திருந்தனன். ஆறு மணி நேரத்தில் படிக்கக்கூடியதை ஐந்து மணி நேரத்தில் முடிக்கக்கூடியவனானன். கால ஆதாயஞ் செய்யப் படிக்கவேண்டும். எவ்வளவு சீக்கிரம் மாணவர் படிக்க ஆயத்தப்படுகிறார்களென்று கவனிக்கவேண்டும், கடிதிற்செய்யும் பயிற்சியுடையோர் எதையும் எளிதிற் செய்வர்.

7. தூண்டுகோல். இது மிகவும் அவசியம். காலிபோர்னியா சர்வகலாசாலையிலுள்ள சார்ல்ஸ் அம்மையார் சாதிப்பது யாதெனில் "தாம் கற்கும் வேலை சந்தோஷகரமாயிருக்கும் என்று எண்ணிக் கற்கின்றவர்கள் இறுதியிற் சித்தியடைகின்றனர்" புத்தியுள்ள உபாத்தியாயர் இம்முறையைக் கையாடி பாடத்தில் பிரீதியுண்டாக்குகின்றனர். பாடம் படிக்கும் நோக்கம் சிறுவர்களுக்கு விளையாட்டின் மூலமாய்க் கிடைக்கும்படி பண்ணும் பிரைமரி உபாத்திமார் எத்தனை? எளிதிற் கற்றுக்கொள்ள இடந்தரும் இத்தகைய விளையாட்டுகளே வெகுமதிகளைக் காட்டிலும் மிகவும் பிரயோஜனமான தூண்டுகோல். பேருக்கு நேரே நட்சத்திரம் ஒட்டி வைப்பதைக் காட்டிலும் பாட முடிவில் மிட்டாய் கொடுப்பதைக்காட்டிலும் பிள்ளைகளுக்கு விளையாட்டுகளே ஏற்ற தூண்டுகோல்.

போட்டி போடுதல் ஒரு நல்ல தூண்டுகோல். வகுப்பு மதிப்புப் பஞ்சிகை (Roll of Honour) மூலமாய்ப் பிள்ளைகளுக்குத் தூண்டுகோல் கிடைக்கின்றது. இது சிலருக்கு மாத்திரம் பிரயோஜனம். சம பிரிவாகப் பிரிக்கப்பட்ட கட்சிகள் ஏற்படுத்துவது நல்லது. இந்தக் கட்சிமுறையில் கெட்டிக்காரப் பிள்ளைகள் தங்கள் கட்சியில் அறிவிற் குறைவா யிருக்கிற பிள்ளைகளுக்கு உதவிசெய்ய ஏதுவுண்டு. குறைவான பிள்ளைகளும் தங்கள் கட்சி ஜெயிப்பதற்காக விசேஷ முயற்சி எடுத்துப் படிப்பார்கள்.

இன்னொரு தூண்டுகோல் தன் முன்னிலைமையோடு பின்னிலைமையை ஒத்துப்பார்த்துத் தேர்ச்சியடைவது.

8. குறைவின் அறிவு. மாணவர் தம் குறை இன்னதென அறிவது அவசியம். குறைவு இன்னது என்னும் அறிவு இல்லாதவன் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் முன்னேறுவது அசாத்தியம் என தார்ன்டைக் கூறுகின்றார். தங்கள் மார்க் இன்னதென அறியாத மாணவரைவிட அறிந்தவர் செய்த வேலை நூற்றுக்கு பதினெட்டு மடங்கு நல்ல வேலை என்று ஆர்ப்ஸ் கூறுகின்றார். தங்கள் மார்க் இன்னதென அறிந்த மாணவர் சொற்ப முயற்சியால் அதிக சித்தியடையக்கூடியவர்களாயிருக்கின்றனர் என்று ரைட் கூறுகின்றார். ஓர் உபாத்தியாயர் அடிக்கடி கேள்வி கொடுத்து மாணவர் எழுதும் விடைகளைத் திருத்திக் கொடுப்பது அவசியம். தாங்களே விடை எழுதித் திருத்தும்படி இடங்கொடுக்கவேண்டும். சரியான காலத்தில் விடை எழுதி பிழை திருத்தி மார்க் கொடுக்கப் பழகுவார்களானால் உண்மை யுள்ளவர்களாக யிருக்கவும் முன்னேறவும் சுய பயிற்சி பெறுகின்றனர்.



9. நோக்கம். எதைக் கற்பினும் ஒரு நோக்கத்தோடே கற்றால் பிரயோஜனமுண்டு. வாசிப்பதினால் மாத்திரம் பலனொன்றுமில்லை. புத்தியுள்ள உபாத்தியாயர் சில கேள்விகளை எழுதிப்போட்டு மாணவர் விடை கண்டுபிடிக்கும் நோக்கமாகப் படிக்கப் பக்கங்கள்குறித்து விடுவார். மாணவர் வாசிக்கும் பாகத்தை விளங்கிக்கொண்டால் மாத்திரம் கேட்ட கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க முடியும்.

பரீட்சையைப்பற்றிப் பேசாமல் பாடம் படித்துக்கொடுத்தால் மாணவர் இருபது நாளில் படித்தவற்றை மறந்துவிடுகின்றனர் என்று ஜெர்மேன் கூறுகின்றார். பரீட்சைக்காக படிக்கின்றவர்கள் மறப்பது அரிது. வாசித்தவுடனே கேள்விகேட்டால் அதற்காகக் கவலையாய் வாசிக்கும்படி மாணவர் தூண்டப்படுவர். அடிக்கடி பரீட்சை வைத்தால் ஞாபக சக்தி விருத்தியாகும்.

ஞாபகம் பண்ணவேண்டும் என்ற விருப்பமே நூற்றுக்கு 10 முதல் 60 வீதம் ஞாபக சக்தியை விருத்தி செய்கின்றது. உபாத்திமார் பாடங் கேட்பார்கள் என்ற நிச்சயமுண்டானால் மாணவர் நூற்றுக்கு 50 வீதம் அதிக நன்றாய்ப் படிப்பார்கள் என்று பீற்றர்சன் கூறுகின்றனர். இதுவும் மனநிலையைச் சார்ந்ததே. கற்குமாவ லில்லையாயின் கற்பவரெவர்? பன்னிரண்டு தடவை ஒரு கவியைத் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் பயனென்ன? ஞாபகம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் இல்லையானால் முடிவில் அது மனதில் தங்காது.

(இன்னும் வரும்)

## 'அவிசுவாசத்திற்கு இடமில்லை'

"அவிசுவாசத்திற் கிடமில்லையே;
    விதைத்த விதை முளைத்து வருமெனவே
எதிர்பார்த்துக்கொண்டு காத்திருப்போன்
    கடவுளை நம்பியிருக்கின்றான்.

அவிசுவாசத்திற் கிடமில்லையே
    கார்நிற மேகம் கவியும்பொழுதே
ஓய்ந்திரு, இதயம்! ஒளிவருமென்போன்
    கடவுளை நம்பியிருக்கின்றான்"

EDWARD BULWER LYTTON.

## மார்க்கஸ் ஆரிலியஸ் எழுதியது

எங்கு இருப்பினும் அங்கு ஒத்து உழை
எவரோடிருப்பினும் அவரிலன்பு வை.

பொறுமையின்றி எக்காரியத்தில் கோபமடைகின்றோமோ அக்காரியத்திலடையும் கேட்டினும் அதிகக் கேட்டைப் பொறுமையின்மையும் கோபமும் விளைவிக்கின்றன.

## “கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்”

சங்கை J. H. டிக்சன் ஐயரவர்கள் (Rev. J. H. Dickson) பங்களூரில் கடந்த செப்டம்பர்மீ 26வ கர்த்தருக்குள் நித்திரை யடைந்த செய்தியை மிகவும் அநுதாபத்துடன் அறிவிக்கின்றோம்.

இவர்கள் வித்தியாதன நேயர்களுள் ஒருவர். பசுமலையில் இவர்கள் பன்னிரண்டு ஆண்டுகளாய் கைத்தொழிற்சாலையை மேற்பார்த்து நடத்திவந்தவர்கள். தென் இந்திய ஐக்ய சபைத்துரைத்தனத்தின் தலைவராக இருந்து காலாகாலங்களில் அதற்கு புத்துயிர் கொடுத் துதவினவர்கள். இந்தியரை அதிகமாய் நேசித்தவர்கள். பசுமலை கைத்தொழிற்சாலை ஆடி விழுதற் கேதுவாயிருந்த காலத்தில் அதை ஆண்டவர் கிருபையால் ஊன்றி நிறுத்தி உயி ரீந்தவர்கள் இவர்களே!

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? மிஷனெரிமா ரெல்லாம் மிஷனெரிகளாவார்களா? சங்கை J. H. டிக்சன் ஐயரவர்கள் சரியான மிஷனெரி என்றே சொல்லத்தகும். அவர்களிடம் மூன்று விசேஷித்த குணலட்சணங்கள் காணப்பட்டன:—

1. பொறுமை. தன் வேலையில் காட்டின பொறுமை. தொழிலாளர் மூலமாய்க் கஷ்டம். மாணவர் மூலமாய்க் கஷ்டம். தொழிற்சாலையை மூடவேண்டுமா என்ற கேள்வியினால் வந்த கஷ்டம். கடைசியில் வியாதியினால் பிடிக்கப்பட்டபோது நேர்ந்த கஷ்டம் கொடிது. இவை யாவற்றிலும் அவர்கள் காட்டின பொறுமை பெரிது.

2. தாழ்மை. தான் பெரியவனென்ற எண்ணம் அவர்களிடம் கிடையாது. மற்றவர்களை மதித்து அவர்களிடம் தாழ்மையாய் நடந்துகொள்வார்கள். எவரும் அச்சமின்றி அவர்களிடம் போகலாம். அவர்களிடம் பெரியவர்களென்றுமில்லை சிறியவர்களென்றுமில்லை. உத்தியோகஸ்தரென்றுமில்லை ஏழைகளென்றுமில்லை. மற்றவர்களை கனத்துக்குரியவர்கள் என்று மதித்து உழைத்தவர்கள் ஐயரவர்களே?

3. அன்பு. இந்தியரை உடன்பிறந்தாரைப்போல் நேசித்து அன்பு பாராட்டிவந்தார்கள். இந்திய ஊழியருக்குச் சம்பளம் குறைப்பதற்கு எந்த விதமும் சம்மதங் கொடுக்கமாட்டார்கள். விசேஷமாய் சொற்ப சம்பளம் வாங்குகிறவர்கள் படும் கஷ்டத்தில் உண்மையான அநுதாபங்காட்டி அவர்கள் சம்பளத்தை அதிகப்படுத்தும் வழிதேடி சித்தியடைந்த மிஷனெரிமார் சிலரே? அவர்களுள் இவர்கள் மகா சிரேஷ்டமானவர்கள்.

தொழிற்சாலையை மூடவேண்டும் என்று பேசினகாலத்தில், சம்பளமில்லாமல் உழைக்கும் சுயேச்சை ஊழியரைத் தேடினகாலத்தில், சாக்கார் உபகார சம்பளத்திற்கு மாத்திரம் உழைத்து பன்றியின் ஆகாரத்திற்குக்கூட வழியில்லாத நிலைமையில் ஊழியர் இருக்கும்படி விரும்பினகாலத்தில், வேலையை நிறுத்தி, ஊழியரை அனுப்பின அக்காலத்தில், இவர்கள் கையின் கீழ் உழைத்த ஊழியரின் உயர்ந்த சம்பளம் இவர்களின் உன்னத அன்புக்கோர் அடையாளமன்றோ?

இவர்களை விட்டு இங்கு பிரிந்திருக்கும் மனைவிக்கும் மகளுக்குங் கடவுள் தாமே ஆறுதல் அளிக்கும்படி நேயர்கள் பிரார்த்திக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

T. A. FENN.



## வேத வாசிப்பு.

கிறிஸ்துவில் புதிய ஜீவன் கொலோ. 3: 1—11
கிறிஸ்துவின் சமாதானம் கொலோ. 3: 12—17
சமுதாயத்தின் கிறிஸ்தவ சன்மார்க்க நெறி எபே. 4: 25—32
சமாதானமாகிய ஈவு யோவா. 14: 25—31
சகோதரருக்குள் சமாதானம் மத். 5: 21—26
சமாதானம் ஆளும்பொழுது மீகா. 4: 1—5
கிறிஸ்துவின் நல்ல ஊழியன் I தீமோ. 4: 6—16
கிறிஸ்துவின் நல்ல போர் வீரன் II தீமோ. 2: 1—13
உண்மையுள்ள சாட்சி அப். 20: 18—30
நல்ல போதகர் I பேது. 5: 1—7
கடவுளின் உக்கிராணக்காரன் தீத்து. 1: 5—9
உண்மையுள்ள ஊழியன் அப். 20: 31—35
நல்ல மேய்ப்பன் யோவா. 10: 7—18
கிறிஸ்தவன் கட்டடம் கட்டுகின்றவன் I கொரி. 3: 10—13
விதைப்பும் அறுப்பும் கலா. 6: 6—10
உண்மையான ஆஸ்தி I தீமோ. 6: 11—21
ஊழியரின் பலன் யோவா. 4: 32—35
கடவுளின் கிரியைகள் யோவா. 6: 26—35
பெரிய கிரியைகள் யோவா. 14: 11—14
ஆவிக்குரிய ஊழியம் ரோம. 12: 1—8
கிறிஸ்தவக் கனி கொடுத்தல் யோவா. 15: 1—16
கனி கொடுக்கும் கிறிஸ்தவர்கள் லூக். 8: 9—15
கடவுள் எதிர்பார்க்கும் கனிகள் மத். 7: 15—23
எதிர்பாராத பலன் ஏசா. 5: 1—7
நீதியின் கனி யாக். 3: 13—18
கனி கொடுப்பதின் இரகசியம் யோவா. 12: 20—26
ஆவியின் கனி கலா. 5: 15—25
கிறிஸ்தவ அன்னியோந்நியம் I யோவா. 1: 1—7
கிறிஸ்துவின் ஈவாகிய இளைப்பாறுதல் மத். 11: 25—30
வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதல் எபி. 4: 1—11.

# "கொடூரமான வார்த்தைகள் கோபத்தைக் கிளப்பும்"

S. T. Raju

வயது சென்ற தாசன் தன் வீட்டு வாசலண்டை உட்கார்ந்திருந்தனர். அவர் மடியின் மேல் முதற் பேரன் உட்கார்ந்திருந்தனன். அயல் வீட்டு சுமித்திரனும் அங்கு வந்து அமர்ந்தனர். இவர்கள் இருவரும் சிறுபிராயம் முதல் நாற்பது வருஷ காலமாக இணைபிரியாத சிநேகிதர். சுமித்திரனுக்கோ பிள்ளையில்லை. ஆயினும் தன்னை சிற்றப்பன் என்றழைக்கும் ஆனந்தனைத் தன் மகனாகப் பாவித்தும் நேசித்தும் வந்தனர். ஆனந்தன் தாசனுடைய மகன்.

"இதோ, என் பேரனைப் பார்!" என்று தாசன் காண்பித்தனர். இதற்குள்ளாக சமையலறையிலிருந்து ஒரு சந்தோஷ சத்தம் உண்டாயிற்று. ஆனந்தன் அங்கு தோன்றினன். இருவரும் சந்தித்தனர். ஆனந்தன் அன்று காலையிலே வந்தவன்.

"வீட்டிற்குள் வாருங்கள் சின்னையா. அப்பாவும் நானும் ஒரு விஷயம் பேச வேண்டும். உங்கள் ஆலோசனையுந் தேவை." என்று கூறி ஆனந்தன் அழைத்தனன்.

மூவரும் உட்பிரவேசித்தனர். ஆனந்தன் தன் பெட்டியைத் திறந்து அதிலுள்ள பொன், வெள்ளி ஆபரணங்களை எடுத்துக் காண்பித்தனன். அவை தன் தந்தை மறுமகளுக்கு அளித்த ஈவு என்றும் கூறினன்.

"அதை விற்பதற்குத் தங்கள் அனுமதி பெறும்படியாக இங்கு கொண்டு வந்திருக்கின்றோம். கிராம முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த ஓர் உபாத்தியாயர் யான். பணத்தை மீத்து ஆபரணத்தில் சேர்த்து வைப்பது உசிதமன்று; தபாலாபீஸ் பாங்கியில் போடுவது உசிதம் என்று போதிக்கின்றோம். அப்படியிருக்க, என் மனைவி மாத்திரம் ஆபரணம் அணிந்திருந்தால் அது எப்படி யிருக்கும்? வீட்டில் வைத்திருந்தாலும் களவு போகும்." என்று ஆனந்தன் கூறினன்.

"மகனே! உனக்குப் பணந்தேவையோ?" என தாசன் வினவினர்.

"அப்படி யன்று. பவுன் கிரயம் அதிகமாயிருக்கும்போது நகையை விற்றால், பையன் படிப்புக்காக ஒரு சிறு நிதி சேர்க்க உதவியாயிருக்கும்" என்றனன்.

"எவ்வளவுக்கு விற்கலாம்?" என

"நாகனூரில் ரூ. 150 கிடைக்கும்" என்று விடை பகர்ந்தனன் ஆனந்தன்.

அதற்கு தாசன் "அதன் விலை ரூ. 250 அல்லவா?" என்று அதிசயிக்க

"நகைகளில் சேர்த்து வைத்தால் இந்த கதிதான். நாளேற நாளேற நகை தேய்ந்து அதன் விலை குறையும். செய்த கூலியும் நஷ்டம்." என்று ஆனந்தன் எடுத்துரைத்தனன்.

பின்பு ஆபரணங்களை விற்பதென்று அனைவரும் தீர்மானித்தனர்.

"அப்பா! நாங்கள் விடுமுறைப் பயணம் போய்த் திரும்பும் வரை இந்த நகைகளை வைத்திருப்பீர்களா?" என்று மகன் கேட்டனன்.



"ஒருவருக்கும் தெரியாத மறைவிடத்தில் ஒளித்து வை" என,

ஆனந்தன் சுவரியோரத்திலுள்ள பெட்டியை விலக்கி கல்லைப் புரட்டி பூமிக்குள் மறைத்து வைத்து, கல்லைப்போட்டு மூடி அதன்மேல் பெட்டியைத் தூக்கி வைத்து விட்டனன்.

"இதுதான எங்கள் பொக்கிஷசாலை. உங்களுக்குத் தெரியுமா? சின்னையா!" என வினவினன் ஆனந்தன்.

"எனக்குத் தெரியாது. அது நல்ல மறைவிடமே. நான் திருட வந்தால் பெட்டியைத்தான் திறந்து பார்ப்பானே ஒழிய அதற்குக் கீழே பார்க்க எண்ணம் வராது." என்று சுமித்திரன் கூறினன்.

சுமித்திரன் போனபின், "சின்னையா முகத்தில் அவ்வளவு சந்தோஷத்தைக் காணோமே! ஏன்? சுகமில்லையா, அல்லது கவலையா?" என ஆனந்தன் வினவ,

அவன் தந்தை சொன்னதாவது,

"கவலை அதிகம். பணக் கஷ்டம் ஏராளம். வீடு வாசல் வயல் நிலம் யாவும் போய் விடும்போலிருக்கின்றது."

காலம் கடிதிற் சென்றது. ஒரு நாள் தாசன் மாடுகளுக்கு வைக்கோல் கொண்டுவர வெளி யேறினர். மகன் ஊருக்குப் போவதற்குள்ளாக வந்து விடலாமென்று எண்ணிப் போயினர். தாயாரோ தண்ணீரெடுக்கப் போயிருந்தனள். அவள் வருமுன் மகன் சாமான்களை மோட்டார் வண்டியில் ஏற்றி மனைவி மைந்தனுடன் தானும் ஏறி அவள் வரும் வழியில் தாயாரிடம் ஏதோ கூறிப் போய் விட்டனன். தாயார் மகன் வழிவிட்டனுப்ப வந்தனம் கூறிகின்றனன் என்று எண்ணினள்.

கொஞ்சக் காலஞ் சென்ற பின் தாசன் அந்த நகைகளை எடுத்து விலை விசாரிக்க நினைத்துக் கல்லைப் புரட்டிப் பார்த்தபோது உள்ளே வெறுமையா யிருக்கக் கண்டுத் திகைத்தனர். வீடெங்கும் தானும் தன் மனைவியுஞ் சேர்ந்து தேடினர். பிரயோஜனமில்லை.

"இதை எவ்வாறு மகனிடம் கூறுவது? விடுமுறை சந்தோஷத்தைக் கெடுக்கலாமா?" என்று இருவரும் பேசிக் கொண்டனர்.

"யார்தான் இதை எடுத்திருக்க முடியும்? மறைவிடம் ஒருவருக்குமே தெரியாதே!" என்று மனைவி கூறினள்.

"சுமித்திரனுக்குத் தெரியும்" என்று சொல்லி தாசன் மௌனமாயிருந்தனர். அவருக்குப் பணம் தேவை என்பதும் முந்தின நாள் நாகனூரிலிருந்து அவர் வந்தபோது கையில் ரூ. 100 வைத்திருந்தார் என்பதும், தான் அதைக் கடனாக வாங்கி வந்திருப்பதாகச் சொன்னதும், தன் ஞாபகத்துக்கு வந்தது. யாருக்குத் தெரியும்? யோசிக்க யோசிக்க சுமித்திரனே நகையைத் திருடி நாகனூரில் விற்றிருக்கவேண்டும் என்பதற்கு ஒத்துவரும் அத்தாட்சிகள் ஏற்பட்டன. தாசன் எழுந்து நேரே அவர் வீட்டிற்குச் சென்றனர்.

"திருடின நகையைத் திரும்பக் கொடுத்து விடு" எனக் கேட்டனர்.

"திருடின நகையா? கேலி பண்ணுகின்றாயா?" என்று சுமித்திரன் வினவினர்.

மிகவும் கோபத்துடன் தாசன் பேசக் கேட்டபோது உண்மையாகவே தன்னை சந்தேகித்து விட்டார் என அறிந்து அவர் மனைவியைக் கூப்பிட்டு பாதிரியாரை அழைத்து வரச் சொன்னார்.

பாதிரியார் வருமுன் இருவரும் கூப்பாடு போட்டதில் வீதியில் வேடிக்கை பார்ப்போர் கூடினர். யோனத்தானையும் தாவீதையும்போல் இணைபிரியா சிநேகிதர் பேசிக்கொண்டதைக் கேட்டனர்.

பாதிரியார் வந்து அவர்களை அமர்த்தி சபைப் பஞ்சாயத்து விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும்படி இடந்தர வேண்டினர். இருவருக்கும் இணங்க இஷ்டமில்லை.

"யாரும் விசாரிக்கட்டும். எவருக்கும் என் நியாயத்தை எடுத்துச் சொல்லுவேன்" என்றனர் தாசன்.

"இப்படிச் சொல்லுவதில் பயன் ஒன்றுமில்லை. நீங்கள் இருவரும் இணங்கினால் சபைப் பஞ்சாயத்து விசாரித்துத் தீர்ப்புக் கூறும். தேவாலயத்துக்கு வாருங்கள்.

தனித்தனியே உங்கள் காரியங்களை எடுத்துச் சொல்லுங்கள். கோபத்தோடு ஒரு முடிவுக்கும் வரமுடியாது. கவலையோடு விசாரிப்போம்" என்று பாதிரியார் அழைத்தனர்.

எனக்குத் தெரியாத நியாயமில்லை. எப்படியாவது நகையை வரப்பற்றுவேன். நாகனூருக்குப் போய் ஒரு வக்கீல் இடத்தில் பேசி ஒழுங்கு செய்வேன். உனக்குள்ளதெல்லாம் பறி கொடுக்கும் வரை உன்னை விடமாட்டேன்" என்று தாசன் சுமித்திரனிடம் சபதங் கூறினர்.

"எனக்கு ஒன்றும் செலவழியாது. என் மனம் சுத்தமாயிருக்கின்றது. மான நஷ்டி வியாச்சியம் எடுக்க உடனே நானுமங்கு வருவேன். உள்ளதெல்லாம் தோற்பது யார் என்று பார்ப்போம்." என்று சுமித்திரனும் பதில் கூறினர்.

அவ்வாறே அவர்கள் வியாச்சியம் தொடுத்தனர். பொறாமைக்காரர் அவர்கள் சண்டையை மூட்டி விட்டனர். சபையின் பெரியோருக்கு இது வருத்தத்தைக் கொடுத்தது. கோபமான வார்த்தைகளாலேற்பட்ட கஷ்டத்தைப் பார்த்த பாலியர் மன வருத்தங்களைச் சரிப்படுத்த வேறு முறை தேடினர். கச்சேரிக்குப் போகாமல் சபைப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்படுவோமென்று அநேகர் கையொப்பமிட்டனர்.

சண்டைக்கு பின் ஒரு நாள் ஆனந்தன் தன் மனைவி பிள்ளையோடு தன் ஊருக்கு வந்தனன். பெரியவர்கள் இதைப்பற்றிப் பேசாமலிருந்தாலும், பிள்ளைகள் "சுமித்திரன் உங்கள் நகையைத் திருடிக் கொண்டார்" என்று கூவினர்.

"உங்கள் தந்தை சுமித்திரன்மேல் வியாச்சியம் தொடுத்திருக்கின்றார்" என்றனர்.

ஆனந்தன் மனம் உடைந்தது. எனினும் ஒன்றும் சொல்லவில்லை.



தன் தந்தையிடம் வந்து "தந்தையே! சின்னையாவுக்கும் உங்களுக்கும் என்ன மன வருத்தம்?" என வினவினன்.

"உன் நகையை அவர் திருடிக்கொண்டார்" என்று துவக்கும் முன்னே,

"என்ன? அதை எப்படி நம்பலாம்? என் நகையை நானே எடுத்து நாகனூரில் விற்று பணத்தைத் தபாலாபீஸில் போட்டு வைத்திருக்கின்றேன்." என்று மகன் கூறினன்.

"மகனே! ஏன் அதை எங்களுக்கு அறிவிக்கவில்லை?" என்று வினவ,

"நான் தாயாரிடம் சொல்லி விட்டு போனேனே!" என்றனன்.

"நீ பிரியா விடை கூறுவதாக எண்ணினள் போலும்—நான் அறிவு கெட்டவன். என் உற்ற சிநேகிதனை இழந்தேன். என் சொத்தையும் வியாச்சியத்தில் இழந்தேன். நான் பாதிரியாரிடத்தில் சொல்லி இனி எக்காரியத்திலும் சபைப் பஞ்சாயத்துக்கே கட்டுப்படுவதாகக் கையொப்பமிடுவேன்." எனக் கூறி வெளி யேறினர்.

மகனும் அவர் பின்னேகி, சுமித்திரனைக் கண்டு சமாதானம் பண்ணப் பிரயாசப்பட்டனன். சிறு பையனாயிருக்கும்போது கற்றுக் கொண்ட வசனம் ஒன்று அவன் வாயில் வந்தது. அதாவது,

"மெதுவான பிரதி யுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடும் சொற்களோ கோபத்தை எழுப்பும்."

---

தந்தி: பின்மென்


போன்: 2281

உங்கள் விலை உயர்ந்த உடைகளை தண்ணீரில் நனைக்காமல்
அழுக்கை நீக்கவும் சாயம் போடவும் சலவை
செய்யவும் வேண்டுமானால்

ஆங்கிலோ பர்மா பின்மென்,
147, பிராட்வேக்கு அனுப்பவும்.

பிள்ளைகளுக்குரிய படங்கள்.














# துறைமுக அரசி.

இன்றைக்கு நாம் மறுபடியும் ஒரு நீண்ட பிரயாணம் செய்யத் துவக்குவோம். உங்கள் எல்லாருக்கும் என்னுடன் வ்ர பிரியமாயிருக்குமென்று நினைக்கிறேன். போன தடவை உலகத்திலுள்ள ஒரு அழகான நதி அரசனைப் பார்த்தோம். இந்த தடவை ஒரு விசேஷமான அரசியைப் பார்க்கப் போவோம். இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஆஸ்திரேலியாவுக்குப் போய் சுற்றி வரலாம்.

இதென்ன ஆச்சரியம் எவ்வளவு அழகான துறைமுகம்! கோபுரங்கள் அளாவிய மலைகள் சுற்றிலும் இருந்து, இயற்கையான கோட்டை வாசலில் நுழைந்தாற்போல ஏறக் குறைய ஒரு மைல் அகலமான துறைமுகம் காணப்படுகின்றனவே. ஆகா சமுத்திரம் எவ்வளவு கொந்தளிக்கிறது! துறைமுகத்தில் என்ன அமைதி. இதுவே கடவுள் உண்டாக்கிய இயற்கை யான துறைமுகம். சிட்னி துறைமுகத்தை ஆஸ்திரேலியாக்காரர் உலகத்தின் சிறந்த துறைமுக மென்று பெருமை பாராட்டுகின்றதின் காரணத்தை இன்று அறியலானோம். ஆகவே நாம் இதற்கு துறைமுக அரசி எனவும் பெயர் இடலாம். இன்னும் கடல் எவ்வளவு ஆழம், பெரிய பெரிய கப்பல் நிற்கின்றது பாருங்கள். உலகத்தின் எல்லா பக்கங்களிலுமுள்ள கப்பல்கள் நின்று சரக்குகள் ஏற்றுகின்றது. விசேஷமாய் கம்பளிப் பொதிகள் அதிகமாய் கப்பல்களில் ஏற்றுமதியாகின்றன.

நமது பொருட்களை ஒரு ஹோட்டலுக்கு அனுப்பி விட்டு, நாம் ஒரு மோட்டார் வண்டியைப் பிடித்துக்கொண்டு ஊர் சுற்றுவோம். சிட்னி நகரத்தின் கட்டடங்கள் அநேகமாய் ஆறு அடுக்குகள் உள்ளவை. பாதைகள் வளைந்து, வளைந்து இங்கும் அங்கும் செல்லுகிறது. ஆஸ்திரேலியர் ரோட்டு பாதைகளை ஒரு கட்டை வண்டிக்காரன் உண்டாக்கினான் என்று பேசி சிரித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் பாதைகளின் தரையைக் கவனித்தால், அவை மரக் கட்டைகளால் போடப்பட்டவை. அழகான மர நிற சமுக்காளம் விரித்தாற்போல் காணப்படு கிறது. உள்ள இவ்விடத்தில் ஈயுகாலிப்பட்ஸ் மரங்கள் ஓங்கி வளர்ந்தவை. மிகவும் உறுதி யானவை. அவைகளால் பாதைகள் போடப்பட்டிருக்கிறது. உறுதியாயும் மெதுவாயும் இருக்கிற படியால் வேலை செய்யும் குதிரை மிகுந்த பாரத்தை இழுக்கக்கூடியதாயிருக்கிறது.

இதோ பாருங்கள் இந்த தெரு கண்ணாடியினால் கூரை போடப்பட்டு, இருபக்கமும் சுவர்கள் வைக்கப்பட்டு, அந்த சுவர்களில் கடைகள் இருக்கின்றன. மழை அடித்தாலும், வெயில் அடித்தாலும் பயமில்லை. நாம் வாங்க வேண்டியவை வாங்கிக் கொண்டு தாராளமாய் வீட்டுக்குச் செல்லலாம். ஜனங்கள் வெள்ளைக்காரரைப் போலவே இருக்கிறார்கள். இவர் களும் வெள்ளைக்காரர்தான். ஆனால் அதிக உயரம் வளர்ந்து அழகாய் தோன்றுகிறார்கள். வெகு கம்பீரமாக உடை உடுத்தி யிருக்கின்றனர். கூலிக்காரன் உடைகூட வெகு நேர்த்தி இதின் காரணம் என்ன? உங்களுக்கு தெரிந்தபடி ஆஸ்திரேலியா ஒரு குடியேற்ற நாடு. ஆகவே யாவருக்கும் சம்பளம் ஜாஸ்தி. அவாகள் வெகு உல்லாசமாய் எந்தப் பொருளையும் தக்க விலை கொடுத்து வாங்கி, நல்ல ஜீவியம் செய்கின்றனர்.

இனிமேல் இந்த ஊரின் விசேஷங்கள் சற்று கவனிப்போம். நமது பட்டணங்களில் டவுண் ஹால் இருக்கிறது. ஆனால் சிட்னி டவுண் ஹாலில் ஜனங்கள் போய் ஒவ்வொரு

நாளிலும் பாட்டுகள் கேட்கலாம். அவர்களுக்கு ஒரு கின்னரம், Pipe Organ, இருக்கிறது. அதற்கு 9000 குழாய்கள் உண்டாம். இன்று சாயந்திரம் போய் பார்ப்போம். மூன்று அடுக்கு மெத்தைப் போல் காணப்படுமாம். பையன்களும், பெண்களும் கும்பல் கும்பலாய் விளையாடப் போகிறார்கள். இவர்களுக்கு விளையாட்டு அதிக இஷ்டம்.


நீ படிக்கும்போது இந்த ஊரில் ஆடுகள் ஏராளம் என்று படித்ததுண்டா? நாளைக்கு எப்படியாகிலும் ஒரு ஆட்டு மந்தைக்குப் போகவேண்டும். ஒரு மந்தைக்கு ஒரு லட்சம் ஆடுகளுக்கு குறையாமல் இருக்குமாம். நமது ஊரில் நூறு ஆடுகள் இருப்பது பெரிய ஒரு மந்தையாகும். நாளைக்கு ஆடுகளின் கண் காட்சி சாலை ஒன்று திறக்கும் விழா. நமது பாடு யோகம் தான். போய் பார்ப்போம். சிட்னியில் வருஷம் ஒரு முறை கண் காட்சி திருவிழா நடக்கிறது.

ஆஸ்திரேலியாவில் பூர்வ காலத்தில் ஆடுகளே கிடையாது. இந்த கண்டத்தை கண்டு பிடித்தவர்களில் காப்டன் கூக் என்பவர் வந்தபோது ஆடுகள் இருந்ததில்லை ஸ்பானியர் தான் தங்கள் தேசத்திலிருந்து ஆடுகளை இவ்விடத்திற்கு முதல் முதல் கொண்டு வந்தார்கள். இங்கே அவைகள் வெகு சீக்கிரம் வளர்ந்து, பெருகுகிறது. இந்த சீதோஷ்ணம் அவைகளுக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. ஈக்குவேடருக்கு தெற்கே தென் அமெரிக்காவிலுள்ள ஆர்ஜென்டையின் தேசத்திலும், இங்கேயும் ஆடுகளின் மந்தை அதிகம். உலகத்தில் இவ்விரண்டு பிரதேசத்தில்தான் ஆடுகள் விசேஷமாய் பெருகி வருகிறது. இவ்விடத்தில் இருக்கும் ஆடுகளை நாலு நாலாக ஈக்குவேடரை சுற்றி ஓடவிட்டால், உலகத்தை சுற்றி வரக்கூடிய அவ்வளவு அதிக ஆடுகள் உண்டு.

இப்போது நாம் ஆட்டு மந்தை பார்க்கப் போகிறோம். வெகு தூரத்திலே, ஆடுகளின் சத்தம் கேட்கிறது. பவுஞ்சு பவுஞ்சாய் பிரிந்து ஆடுகள் மேய்கிறது. ஒரு கூட்டத்தில் 700 ஆடுகள் இந்த எஜமானுக்கு இருக்கிறது. ஆகா இதென்ன இந்த ஆட்டுக்கு கழுத்தில் சிவப்பு பட்டு நாடா கட்டியிருக்கிறதே! அதோ அந்த ஆட்டுக்கு ஊதா நாடா கட்டியிருக்கிறது. காரணம் என்னவென்று விசாரிப்போம். நேற்று நடந்த கண் காட்சியில் பரிசு பெற்ற ஆடுகளாம். பார்வைக்கு என்ன அழகு. ஒய்யாரமான நடை, கம்பீரமான தோற்றம். ஆடுகள் விசேஷித்த வம்சங்களினின்று தோன்றினவை என்பதை தாங்களே வெளிப்படுத்துகின்றன. எவ்வளவு வெண்மையான ரோமம். அந்த ரோமம் அதை மறைத்துக் கொள்ளுகிறது. நாம் தொட்டு பார்த்தால் அதின் சதை பாகத்தை பார்க்கவே முடியாது. அவ்வளவு ரோமம் பெருத்திருக்கிறது. இந்த ஆட்டில் 40 பவுண் நிறையுள்ள ரோமம் உண்டு. இன்னும் மயிர் கத்தரிக்கும் இடம் பார்ப்போமானால், அங்கே யந்திரங்கள் வைத்து வேலை செய்கிறார்கள். கம்பளி ரோமத்தை பொதி மூட்டைகளாக கட்டி, அந்நிய நாட்டு வியாபாரிகள் வந்து வாங்கி, கப்பலில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இந்த எஜமானிடம் ஒரு மந்தையில் ஐம்பதினாயிரம் ஆடுகள் உண்டு. அதில் வேலை செய்ய வேலைக்காரர்களும், மேல் பார்க்கிறவர்களுண்டு மேல் பார்க்கிறவர்கள் குதிரைகளில் சென்று ஆட்டு மந்தையை பார்வையிடவேண்டும். இவர்கள் எல்லாரும் புல் வெளிகளில் இரும்பினால் கூரை போடப்பட்ட வீடுகளில் குடியிருக்கிறார்கள். அநேக அறைகளுண்டு. மற்ற வேலைக்காரர்களுக்கும் சின்ன வீடுகளுண்டு. பக்கத்தில் விளையாட்டு ஸ்தலங்களுமிருக்கின்றன. மயிர் கத்திரிக்குமிடம், கம்பளி ரோமம், ஏற்றுமதியாகும் இடங்களில் அநேகருக்கு வேலையுண்டு. மழை பெய்யாவிட்டால், புல் கிடையாது, அப்போது ஆடு



கள் தீனி இல்லாமல் செத்துபோவதும் உண்டு. சில சமயங்களில் தண்ணீர் கஷ்டம் ஏற்படும்.



தற்சமயம் சர்க்கார் நீர் ஊற்றுகள் தோண்டியிருக்கிறார்கள். எத்தனையோ அடி ஆழத்திலிருந்து தண்ணீர் வருகிறது. சற்று உப்பாயிருக்கும். ஆடுகள் சாப்பிட்டு நன்றாய் வளருகிறது. இன்னொரு துன்பம் என்னவென்றால் முயல்கள் மந்தை மந்தையாக வந்து, புல்லை தின்றுவிடும். ஆடுகளுக்கு புல் கிடையாமற் போகிறது. சிலர் முயல் வேட்டை ஆடுவதிலே தங்கள் நாட்களைக் கழிக்கின்றனர். பிரயாசப்பட்டால் ஒரு மனிதன் ஒரே நாளில் 400 முயல்கள் வேட்டையாட முடியும்.

பிரியமான பிள்ளைகளே! நாம் சிட்னி பட்டணத்தில் மனிதர் எப்படி வசிக்கிறார்களென்றும், அடுத்த நாட்டு புறங்களில் எப்படி ஜீவிக்கிறார்களென்றும் பார்த்தோம். அடுத்த மாதம் வேறு இடங்கள் பார்க்க பிரியப்படுவீர்களென்று நினைக்கிறேன்.

இப்படிக்கு,
ஜேன் பென்.

---

## வஸ்திரங்களைச் சுத்தம் செய்தல்

Jane Fenn

1. வஸ்திரங்களில் புழுதி படிந்திருக்குமானால், அவைகளை சுத்தப்படுத்துவது மிகவும் சிரமமே. ஆனால், கொஞ்சம் தண்ணீரில் சுத்தம் பண்ணின உருளைக் கிழங்குகளை தேங்காய்ப்பூ மாதிரி துருவிப் போட்டு, சிறிது நேரம் கழித்து அந்த ஜலத்தை வடித்தெடுத்து, அதைக் கொண்டு துணிகளை சுத்தம் செய்தால் புழுதி போய் விடும்.




2. சுத்தமான உருளைக்கிழங்குகள் வேக விட்ட தண்ணீரால் பட்டு புடவைகள் மற்றும் பட்டு வஸ்திரங்களை சுத்தம் பண்ணலாம்.

3. கால் சட்டைகள் (ட்ரௌஸர்ஸ்) சுத்தம் பண்ணுவதில் கொஞ்சம் கஷ்டம் உண்டு. இதின் அடி மடிப்பில் பூட்ஸ்களில் போட்டிருக்கும் பாலிஷ்", பட்டு துணியின் கலர் மாறுவதுண்டு. அத்துடன் அழுக்கும் படிந்திருக்கும். காடியில் சுத்தம் செய்வது நல்லது.

## 4. அடியில் பிரம்பு பின்னிய நாற்காலிகளை சுத்தம் செய்தல்

அடியில் பிரம்பு பின்னிய நாற்காலிகளை சுத்தம் செய்ய பிரம்பின் பாகத்தை வெந்நீரும் சோப்பும் கலந்து நன்றாக தேய்த்து சுத்தப்படுத்தவேண்டும். கொதிக்கும் தண்ணீரை பிரம்பு போட்டிருக்கும் பாகத்தில் ஊற்றி, பிரம்பு நனைய செய்யவேண்டும் பின்பு நாற்காலியை வெளியான இடத்தில் வைத்து காயவிட வேண்டும். இப்படிச் செய்வதால், நாற்காலி சுத்தமாகும். பிரம்புப் பாகம் விறைப்பாகும். இப்படி வருஷத்துக்கு மூன்று முறை செய்வது உண்டானால் புது நாற்காலி மாதிரியே இருக்கும். கலர் பூச அவசியமில்லை. சிம்பு அறுந்திருந்தால், அதிக விறைப்பாக இருக்காது. அவைகளை உடனே பின்னி விடுவது நல்லது. பிரம்பு நாற்காலிகளில் காலுக்கு அடி பாகத்தில் தோல் போட்டு விட்டால், சிம்புகள் அறுந்து போக காரணமில்லை.

# கணித விளையாட்டுகள் சிறு பிள்ளைகளுக் குரியது

Jane Fenn

### கூனக் கிழவி

உபாத்தியாயர் தமது பிள்ளைகளுக்கு, 11, 10, 9, 12, 13, 14, 15, 16, 9, 8, 17, 18, 7, 5, 4 முதலிய எண்களை ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று கொடுக்கவேண்டும். பிள்ளைகள் தம், தம் எண்களை நன்றாக ஞாபகத்தில் வைக்கவேண்டும். உபாத்தியார், தாயாரைப் போலவும், பிள்ளைகள் குழந்தைகளைப் போலவும், பாவித்து வட்டத்தில் உட்காரவேண்டும்.

பின்பு ஒரு பிள்ளை கூனி வேஷம் போட்டு, அல்லது குனிந்து நடந்து கொண்டு வந்து, தாயாரிடம் நிற்கவேண்டும். கூனி—"அம்மா. எனக்கு ஒரு பிள்ளை வேண்டும்." தாயார்—உனக்கு, 7உம் 8உம் வேண்டுமா? கூனி—அம்மா எனக்கு 15 வேண்டாம். ஆனால் 7உம், 7உம் வேண்டும். என்று சொல்லவேண்டும். (இந்த இடத்தில் தாயாரும், கூனியும்



அவர்களுக்கு இஷ்டமான எண்களின் சேர்க்கைச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் எல்லாம் 18 எண்களுக்குள் இருக்கவேண்டும்.)

கூனி இப்படி 7உம் 7உம் வேண்டும் என்ற சொன்ன மாத்திரத்தில், வட்டத்தில் உட்கார்ந்திருக்கும் 14 எண்ணையுடைய பிள்ளை உடனே எழுந்து ஓடிவிடப் பிரயாசப்பட வேண்டும். கூனி பிடித்துக் கொண்டால் பிள்ளை வகுப்பின் மறுபக்கத்துக்குப் போகவேண்டும் இல்லாவிட்டால் பிள்ளை மறுபடியும் தாயாரிடம் வரலாம். கூனி மறுபடியும் வரலாம். அல்லது இன்னொரு பிள்ளை கூனியாகும்படி செய்யலாம். சில வேளைகளில் பிளளை ஓடாமல் அஜாக்கிரதையாய் இருக்கும். அந்த பிள்ளை கூனியுடன் மறுபக்கம் போகவேண்டும். அல்லது எண்களின் சேர்க்கை தெரியாவிட்டாலும், மறுபக்கம் போகலாம். இந்த விளையாட்டில் எல்லாருக்கும் விளையாட்டின் மூலமாக எண்களின் சேர்க்கை சுலபமாக வரும்படி செய்யலாம். நமது பிள்ளைகளுக்கு எண்களின் சேர்க்கை திட்டமாகத் தெரியாது. விரல் விட்டு எண்ணுவார்கள். பெரிய வகுப்பிலும் எண்களின் சேர்க்கையில் தப்பிதம் விட்டு விடுவார்கள். இந்த விளையாட்டில் கூட்டல், கழித்தல், பெருக்கல் முதலியவைகளிற் பயிற்சி கொடுக்கலாம்.

---

# கிறிஸ்து ஜயந்திக் கதை

### மற்ற மரியாள்

### காட்சி I.

ஏலியாஸ் :—(மேஜை பக்கத்தில் எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி ரூத் வீட்டு வேலை செய்து கொண்டிருக்கிறாள். பக்கத்தில் ஒரு சிறு குழந்தை தொட்டிலில் தூங்குகிறது. மேரி எனும் சிறு பெண் தகப்பனார் பக்கத்தில் நிற்கிறாள்.)

மேரி :—இன்றைக்கு முழுவதும் உங்களுக்கு அதிக வேலை அல்லவா?

ஏலியாஸ் :—ஆமாம். என்ன செய்கிறது. ரோமை அரசனின் உத்திரவின்படி நாம் நடக்க வேண்டியதுதான். அவர் குடிகளின் மதிப்பு தெரியவேண்டுமென்று நினைக்கிறார். நான் இந்த ஊருக்கு குடி மதிப்பு எழுதும்படி உத்திரவு பெற்றிருக்கிறேன்.

மேரி :—அரசனுக்கு ஏன் நமது பெயர்கள் வேண்டும்? காரணம் தெரியுமா?

ஏலியாஸ் :—வேறு கேள்விகள் கேள் அம்மா. அரசனின் நோக்கத்தை அறியேன். ஒருவேளை தீர்வையை அதிகப்படுத்த இந்த வேலை செய்யலாம்.

ரூத் :—சரி. உங்கள் வேலையை நிறுத்தி விட்டு சாப்பிட வாருங்கள். நேரம் ஆகிவிட்டது. இந்த இராத்திரிக்குமேல் யார் வந்து குடி மதிப்பு எழுதப் போகிறார்கள். இனிமேல் ஒருவரும் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஏலியாஸ் :—இருட்டி விட்டது. பிரயாணிகள் எல்லாரும் இருட்டு முன் வந்துசேர பிரயாசப் படுவார்கள். இன்றைக்கு வேலையை முடித்து விடுகிறேன். பெரிய சுருளில்

பெயர்த்து எழுத வேண்டியதிருக்கிறது. நான் அதை மெதுவாய் செய்து கொள்ளுவேன்.

மேரி :—என்ன அப்பா! எழுத்து சரியாக இல்லையே!

எலியாஸ் :—நமது தெய்வ பாஷையில், வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்துக்கு எழுதுவோம். இந்த குடி மதிப்பு அட்டவணையை கிரேக்க பாஷையில் எழுத வேண்டியது. அந்த பாஷை இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்கு எழுதவேண்டும். ஆகவே என் எழுத்து கேவலமாயிருக்கிறது.

மேரி :—எனக்கு எழுதத் தெரிந்தால் உதவி செய்வேன். ஏன் பெண் பிள்ளைகள் கிரேக்க பாஷை, அரமேயிக் பாஷை முதலியவைகள் படிக்கக்கூடாது? போன வாரம் பிறந்த தம்பி தாவிதுக்கு மாத்திரம் படித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்களே! அதென்ன?

ரூத் :— பெண் பிள்ளைகள் தையல், சமையல், வீடு சுத்தம் செய்தல் முதலியவைகள் செய்ய வேண்டும். அடுப்பு ஊதும் பெண்ணுக்கு புஸ்தகம் எதுக்கு?

எலியாஸ் :—மேரி உனக்கு எபிரேயு பாஷை தெரியும். அநேக பெண்களைவிட உனக்கு வேதம் நன்றாக வாசிக்கத் தெரியும். மற்ற பாஷைகள் படித்து ரபி வேலை செய்யப் போகிறாயா?

மேரி :—நான் படித்தால் உதவி செய்வேன். (தம்பியைப் போய் பார்த்து) தம்பி வளர்ந்து படிக்க இன்னும் அநேக வருஷங்கள் ஆகும்.

ரூத் :—எல்லாம் சரிதான். உங்கள் எழுத்து வேலையை விட்டு சாப்பிட வாருங்கள். (எல்லாரும் சாப்பிடுகிறார்கள். அடுத்த அறையில் சாப்பாடு நடக்கிறது. அச்சமயத்தில் பிலிப்பு என்னும் அடுத்த வீட்டுப் பையன் மேரியை கூப்பிடுகிறான்.)

மேரி முன் பக்கத்து வாசல் திரையை நன்றாய் மூடு. பனி பெய்கிறது. தம்பிக்கு குளிரும்.

பிலிப்பு :—மேரி! மேரி! அதோ, ஒரு பெரிய நட்சத்திரம் தெரிகிறது பார். எவ்வளவு பிரகாசமாயிருக்கிறது!

மேரி :—எங்கே? ஓ, எவ்வளவு பிரகாசம்! பெரிய நட்சத்திரம் போல் தோன்றுகிறது. பிலிப்பு உனக்கு கிரேக்க பாஷை தெரியுமா?

பிலிப்பு :—எனக்கு தெரியாது. கிரேக்க பாஷை படிக்கவும் ஆசையில்லை. நமது பாஷையை நன்றாய்க் கற்றாலே போதும். போய் வருகிறேன்.

மேரி :—(வாசலில் இன்னும் நின்று கொண்டு) அப்பா! பாருங்கள் பையன்களுக்குங்கூடப் படிக்க இஷ்டமில்லை. ஐயோ, ஏழை ஜனங்கள் இன்னும் வந்துகொண்டே இருக்கிறார்கள். அதோ ஒரு மனிதன் ஒரு அம்மாளைக் கழுதையின்மேல்ஏற்றிக்கொண்டு வருகிறான். என்ன வேடிக்கை! நமது ஊரில் மனிதர் கழுதையின்மேல் ஏறுவார்கள். பெண்



கள் நடப்பார்கள். ஆகா அவர்கள் நமது வீட்டை நோக்கியே வருகிறார்கள். (கழுதையை தூரத்தில் நிறுத்தி விட்டு, அந்த மனிதன் மாத்திரம் வருகிறான்.)

யோசேப்பு :—அம்மணீ! இதுதானா கணக்கப்பிள்ளை வீடு?

மேரி :—ஆம். உள்ளே வாருங்கள். (மேரி போய் விடுகிறாள்.) யோசேப்பு வருகிறான்.

யோசேப்பு :—நீங்கள்தானா குடி மதிப்பு எழுதும் கணக்கப்பிள்ளை.

எலியாஸ் :—ஆம். இன்றைக்கு நேரம் ஆகிவிட்டது. வேலையை முடித்து விட்டேன். காலையில் வாருங்கள். எழுதி விடலாம்.

யோசேப்பு :—சரி. நான் சீக்கிரமாய்ப் போய்ச் சத்திரத்தில் இடம் பார்க்கிறேன். காலையில் இவ்விடம் வருகிறேன். (போகிறான்.)

ரூத் :—(மேரி வருகிறாள்) நீ எங்கே போயிருந்தாய்?

மேரி :—நான் கழுதையின்மேல் வந்த அம்மாளைப் பார்க்கப் போனேன். அவர்கள் பெயரும் மேரிதான். மிகவும் களைப்பு அடைந்திருக்கிறார்கள். மிகவும் நல்ல குணமுடையவர்கள் போல் தோன்றுகிறது.

ரூத் :—படுக்கைக்குப் போ. நேரம் ஆகிறது.

(எல்லாரும் படுக்கைக்குப் போகிறார்கள்.)

எலியாஸ் :—(படுகைக்கு போகுமுன் ஜெபிக்கிறான்.) (கைகளை உயர்த்தி) இரக்கத்தின் தெய்வமே! நீர் அளித்த சகல கிருபைகளுக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நான் சமாதானத்துடன் படுத்து, இளைப்பாறுதல் அடைந்து எழும்ப கிருபை செய்யும். நீரே எனது கோட்டையும் அடைக்கலமுமாயிருக்கிறீர். (எல்லாரும் படுத்துக் கொள்ளுகிறார்கள். அப்போது தூதர்கள் தூரத்தில் பாடுகிறார்கள்.)

பாட்டு :— (Tune. "When Christ was born of Mary free")

விண் வேந்தனின்று மாந்தனாய்
மண்ணி லுதித்தார் சாந்தமாய்
இன்னிசை ஏற்றும் ஏகமாய்
உன்னதத்தில் மகிமை!

பல்லவி.

"விண்ணிலென்றும் மகிமை
மண்ணிற் சமாதானமும்
மாந்தருக்குட் பொறுமை
சாந்தமும் உண்டாகவும்."

(மேரி, எலியாஸ் எல்லாரும் விழித்து, பாட்டுச் சத்தத்தைக் கவனித்துக் கொண்டு, கம்பளி போர்த்துக் கொண்டு, தலையையும் மூடிக்கொண்டு திரையைத் திறந்து வெளியே வருகிறார்கள்.)

ஏலியாஸ் :—பாட்டு சத்தம் கேட்கிறது.

மேரி :—ஆம் அப்பா! என்ன நல்ல பாட்டு! (மறுபடியும் போகிறார்கள்.)

காட்சி II

மேரி :—(வீட்டைப் பெருக்கிக் கொண்டு கிறிஸ்மஷ் பாட்டை பாடுகிறாள்.)

பல்லவி.

“ விண்ணி லென்றும் மகிமை
மண்ணிற் சமாதானமும்
மாந்தருக்குட் பொறுமை
சாந்தமும் உண்டாகவும்.”

மேய்ப்பன் :—கணக்குப் பிள்ளையைப் பார்க்கலாமா ?

மேரி :—பார்க்கலாம்.
அப்பா ! ஓர் ஆள் வந்திருக்கிறார்.

ஏலியாஸ் :—ஓ, நமது சாமுவேலா ?
சொல்லு எழுதுவேன்.

மேய்ப்பன் :—யாரிடம் என் மந்தையை விட்டு வருவேன் ?

ஏலியாஸ் :—இப்போது எப்படி வந்தாய் ?

மேய்ப்பன் :—இரவில் நடந்த விசேஷம் தெரியுமா ?
இரவே இவ்விடம் வந்து விட்டோம்.

ஏலியாஸ் :—என்ன விசேஷம். பாட்டுச் சத்தம் கேட்டது.
யார் பாடினது ?

மேய்ப்பன் :—அவர்கள் யார் என்று தெரியாது. வானத்தில் நின்று பாடினதுபோல் தோன்றிற்று. நாங்கள் ஆட்டு மந்தையினருகில் குளிர் காய்ந்துகொண்டிருக்கையில் ஒரு வெளிச்சம் பிரகாசித்தது. அவர்கள் சொன்ன செய்தி தெரியுமா ?

ஏலியாஸ் :—என்ன செய்தி சொன்னார்கள் ?

மேய்ப்பன் :—ஓர் இரட்சகர் பிறந்திருக்கிறார். அவரை முன்னணையில் பார்க்கலாம் என்று சொன்னார்கள். பாட்டுப் பாடினார்கள். எங்களில் சிலர் உடனே புறப்பட்டு வந்தோம். சத்திரத்துக்குப் போய்ப் பிறந்த பாலகனைப் பார்த்தோம். யோசேப்பு என்னும் தச்சனுடைய குழந்தை. நாசரேத் ஊராராம். ஏழைகள்—இவர்கள் குழந்தைக்கு இத்தனை அற்புத காட்சிகள் ஏன் தோன்றவேண்டும் ?

ஏலியாஸ் :—எல்லாவற்றையும் நான் போய்ப் பார்த்துக் கொள்ளுவேன். உன் பெயர் சொல்லு.

மேய்ப்பன் :—சாமுவேல் பென் அசரியா. போவாசின் வம்சத்தான். நான் போய் வருகிறேன்.

மேரி :—எப்படியாகிலும் நாம் போய் அந்தப் பாலகனைப் பார்த்து வரவேண்டும்.



யோசேப்பு :—ஐயா, வந்தனம். நேற்று இங்கு இருவராய் வந்தோம். இன்று மூவராகி விட்டோம்.

ஏலியாஸ் :—ஓகோ, நேற்று இரவு பிறந்தது உம்முடைய குழந்தைதானோ ? ஐயோ, பாவம் ! சத்திரத்தில் இடமில்லையாமே ! ஒரு மேய்ப்பன் இந்த சங்கதிகளை என்னிடம் சொன்னான். இச்சமயத்தில் நல்ல இடம் கிடைக்காததற்காக அதிக வருத்தம். மனைவியும் குழந்தையும் சுகந்தானே ?

யோசேப்பு :—மாட்டுத் தொழுவத்திலிருந்தாலும் மேரி தைரியமாய் இருக்கிறாள்.

ரூத் :—இச்சமயத்தில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் நல்ல இடம் பார்க்க வேண்டும்.

யோசேப்பு :—நான் ஒரு தச்சன். உள்ளூர் தச்சன் ஒருவன் அருகிலிருந்தான். அவன் தன் வீட்டில் நல்ல இடம் கொடுத்திருக்கிறான்.

(பாடகர் கூட்டம் ஞானப்பாட்டு 52 பாடுகிறார்கள்.)

ரூத் :—பிள்ளைக்கு உடுப்புகள் இருக்கிறதா ? அம்மாள் இச்சமயத்தில் கஷ்டப்படுவது மிகுந்த வருத்தமான செய்தி.

யோசேப்பு :—நாங்கள் சில துணிமணிகள் கொண்டு வந்தோம். நாசரேத்தைவிட பெத்லெகேம் அதிகக் குளிராயிருக்குமென்று யோசித்தோம். அப்படியேதான் இருக்கிறது.

ஏலியாஸ் :—உம்முடைய நாமம் என்ன ?

யோசேப்பு :—தாவீன் வம்சத்தானாகிய யோசேப்பு பென்ஹெலி.
நாசரேத் ஊரான்.

ஏலியாஸ் :—உமது மனைவி.

யோசேப்பு :—மேரி தாவீதின் வம்சத்தாள்.

ஏலியாஸ் :—பிள்ளை ஆணா, பெண்ணா ?

யோசேப்பு :—ஆண் பிள்ளை.

ஏலியாஸ் :—ஆண் பிள்ளை. பெயரில்லை அல்லவா ?

யோசேப்பு :—இயேசு என்று பெயரிட யோசிக்கிறோம்.

மேரி :—இயேசு என்றால் இரட்சர் என்று அர்த்தம். பெத்லேகேமில் இயேசு என்று ஒருவருக்கும் நாமம் இல்லையே. (யோசேப்பினிடம்) நான் வந்து அந்த பிள்ளையைப் பார்க்கலாமா ?

யோசேப்பு :—நல்லது வரலாம். அந்த மேரி அதிக சந்தோஷப்படுவாள்.
இது உன் தம்பியா ?

மேரி :—இவனுக்கு தாவீது என்று பெயர். பிறந்து 2 வாரம் ஆகிறது.

ரூத் :—நீங்கள் இங்கே எத்தனை நாள் தங்குவீர்கள் ? நானும் வந்து பார்க்க ஆசிக்கிறேன்.

யோசேப்பு :—ஏழு வாரங்கள் செல்லும். சுத்திகரிப்பின் நாட்கள் கழிந்த பின்பு எருசலேமில் கோவிலுக்குப் போய்ப் பிரதிஷ்டை செய்யப் போகிறோம். அம்மா மேரி வருகிறாயா ?

(இருவரும் கையைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்.)

பிலிப்பு :—(உள்ளே ஓடி வந்து) மேரியைக் கூப்பிடுங்கள். வீதியில் ஏரோது ராஜா வருகிறதாகச் சொல்லுகிறார்கள்.

ஏலியாஸ் :—ஓடிவா மேரி, ஓடிவா. யோசேப்பு நீரும் வாரும்.

(இருவரும் வந்த பின்பு திரையை மூடி உற்றுப் பார்க்கிறான்.)

மேரி :—ஏன் அப்பா. ராஜா வருகிறாரா?

பிலிப்பு :—குதிரை வீரர் வீதி வழியே போகிறார்கள். பின்னால் ஏரோதும் அவன் சேனை வீரரும் வருவார்கள். எருசலேமுக்குப் போகிறார்கள்.

ஏலியாஸ் :—(யோசேப்பைப் பார்த்து) சில நிமிஷங்கள் தாமதித்துப் போவது நல்லது. விளங்குகிறதா?

யோசேப்பு :—சரிதான். எனக்கு விளங்குகிறது. அவர் வீதியில் வரும்போது அழகான பெண்பிள்ளையும், பலசாலியான மனிதனும் வீட்டுக்குள் இருந்தால்தான் நல்லது என்று வட நாட்டில் ஜனங்கள் பேசிக் கொள்ளுவார்கள்.

ரூத் :—(மேரி வெளியே பார்க்கிறாள்) மேரி வெளியே பார்க்காதே.

பிலிப்பு :—(யோசேப்பினிடம்) கொஞ்ச நாளைக்கு முன் இவர்கள் வரும்போது என் அக்காள் லீதியாள் வீதியில் போனாள். சேனை வீரரில் ஒருவன் அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு குதிரையில் ஏற்றிக் கொண்டு போய் விட்டான். நாங்கள் அக்காளை அதற்குப் பின் இன்னும் பார்க்கவே இல்லை.

ஏலியாஸ் :—(உட்கார்ந்திருக்கிறார்) உமது மகனுக்கு இயேசு என்று பெயர் அல்லவா? நமக்கு ஒரு இரட்சகர் தேவை. இரவில் நாம் கேட்ட பாட்டுகள் உமது மகனின் பிறப்பின் சம்பந்தமானது என்று மேய்ப்பர் நினைக்கிறார்கள். தற்காலத்தில் ஒவ்வொரு தாயும், தனக்கு பிறக்கும் ஆண் பிள்ளை வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக இருக்காதா என்று யோசிக்கிறாள். எனது பிள்ளை மேசியாவாக இல்லாவிட்டால் உமது பிள்ளை மேசியாவாக இருக்கட்டும். சரி. இப்போது வீதியில் பயமில்லை. நீங்கள் இருவரும் போகலாம்.

(யோசேப்பும் மேரியும் போகிறார்கள்.)

(திரை விழுகிறது)

(பாடகர் கூட்டம்—ஞானப்பாட்டு 55 பாடுகிறார்கள்.)

### காட்சி III

(ஓர் அறையில் கன்னி மரியாள் பிள்ளையை மடியில் வைத்துக்கொண்டு இருப்பதாக வைக்கவேண்டும். யோசேப்பும், மேரியும் வருகிறார்கள்.)

யோசேப்பு :—இந்த பெண்தான் கணக்குப் பிள்ளை மகள். உங்களிருவரையும் பார்க்க ஆசைப் படுகிறது. (மேரி கொஞ்சம் கம்பளி உடுப்புகள் கொண்டு வருகிறாள்).



கன்னி மரியாள் :—இப்படி வந்து பார் அம்மா.

மேரி :—(பிள்ளையை முழங்காற்படியிட்டுப் பார்க்கிறாள். கம்பளி உடுப்புகளை கொடுக்கிறாள். கன்னிமரியாள் வாங்கிக் கொண்டு மேரியை முத்தம் இடுகிறாள். மேரி ஒரு பாட்டு படிக்கிறாள்.)

பாட்டு—(ஞானப்பாட்டு 302.)

(மேரி பாட்டு முடித்தவுடன் வெளியே பாட்டு சத்தம் கேட்கிறது. ஞானப்பாட்டு 98.) எல்லாரும் எட்டிப் பார்க்கிறார்கள். யோசேப்பு வெளியே போகிறார். மூன்று சாஸ்திரிகள் வந்து நமஸ்கரித்துத் தங்கள் காணிக்கைகளைப் படைக்கிறார்கள். மேரி ஞானப்பாட்டு 67 பாடுகிறாள்.)

மேரி :—(வீட்டுக்கு வந்து) அம்மா! அம்மா! நான் போய் இயேசு பாலகனைப் பார்த்தேன். அங்கே ராஜாக்கள் மாதிரி மூன்று பேர் வந்து பிள்ளைக்கும் காணிக்கை படைத்தார்கள்.

ரூத் :—அப்படியானால் இயேசு என்ற பாலகன் அற்புத பிறவிதான். என்ன காணிக்கை கொண்டு வந்தார்கள்?

மேரி :—ஒருவர் ஒரு பெட்டியில் தங்கமும், இன்னொருவர் வாசனைத் திரவியமும், இன்னொருவர் தங்க நிறமான புட்டியில் வெள்ளைப் போளமும் படைத்தார்.

(அச்சமயத்தில் யோபு என்ற சத்திரக்காரன் மகன் ஓடி வந்து கதவைத் திறந்து உட்பிரவேசிக்கிறான்.)

யோபு :—அம்மா ஐயா எங்கே? சத்திரத்தில் ராஜாக்கள் மாதிரி மூன்று பேர் வந்திருக்கிறார்கள். நல்ல இடம் இல்லை. அமைதலான இடம் தேவை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஒட்டகங்களை நாங்களும அவர்கள் வேலைக்காரரும் பார்த்துக் கொள்ளுகிறோம். அவர்களுக்கு மாத்திரம் கொஞ்சம் இடம் கொடுக்க முடியுமா?

ஏலியாஸ் :—ரூத் என்ன சொல்லுகிறாய்? இடம் கொடுப்பது அவசியம் என்று நினைக்கிறேன்.

ரூத் :—எனக்கு தடையில்லை. அதிக வேலைக்கு இடம் கொடுக்க வேண்டாம்.

ஏலியாஸ் :—யோபு! போய்க் கூட்டிக் கொண்டு வா.

(ரூத்தும் மேரியும் வீட்டை ஒழுங்குபடுத்தி, தம்பியும் தாங்களும் அடுத்த அறைக்குப் போகிறார்கள். ஏலியாஸ் வரவேற்க காத்திருக்கிறார்.)

(மூன்று சாஸ்திரிகளும் உள்பிரவேசிக்கிறார்கள். ஏலியாஸ் குனிந்து வணங்குகிறார். அவர்களும் குனிந்து ஆசீர்வாதம் கூறுகிறார்கள்.)

எனது நாமம் ஏலியாஸ். இது என் மனைவி. எனக்கு ஒரு பெண் பிள்ளையும் ஒரு மகனும் உண்டு.

ரூத் :—வாருங்கள் பிரபுக்களே! ஆசனத்தில் அமருங்கள்.

(மேரி பாத்திரங்களில் திராட்சரசமும், அப்பங்களும் கொண்டு வந்து வைக்கிறாள்.)

ஏலியாஸ் :—நீங்கள் வெகு தூரத்திலிருந்து வந்தவர்கள்போல் காணப்படுகிறது.

முதல் சாஸ்திரி :—ஆம், எங்களுக்கு பாரசீக தேசம். நாங்கள் மூன்று மாத காலமாய்ப் பிரயாணம் செய்கிறோம்.

ஏலியாஸ் :—ஏன் அவ்வளவு கஷ்டமான பிரயாணம் செய்கிறீர்கள்? அடியேன் காரணத்தை அறிய ஆசிக்கிறேன்.

2-ம் சாஸ்திரி :—நாங்கள் வான சாஸ்திரம் படிக்கிறவர்கள். ஒரு பெரிய நட்சத்திரத்தைக் கண்டோம். புஸ்தகங்களை வாசித்தோம். எபிரேயு புஸ்தகங்கள்கூட படித்தோம். புஸ்தகச்சுருளில் ஒரு பாலகன் பிறப்பார். அவர் நாமம் அதிசயமானவர்—ஆலோசனை கர்த்தா—வல்லமையுள்ள தேவன்—நித்திய பிதா. சமாதான பிரபு என்னப்படும் என்று எழுதி யிருக்கிறது. இந்த தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப்பட்டவரை நாங்களே கண் குளிர கண்டு களிக்க வந்தோம்.

எலியாஸ் :—பார்த்து விட்டீர்களா ?

3-ம் சாஸ்திரி:—எங்களுக்குத் திட்டமாய் முதலில் தெரியாதபடியால், ராஜாவைப் பார்க்க, ஏரோது ராஜாவினிடம் போனோம். அங்கே புஸ்தகச் சுருளில் வாசிக்கப்பட்டபடி, பெத்லெகேமில் பிறப்பார் என்று கண்டு பிடித்தோம். ஏரோது ராஜா தானும் பாலகனைப் பார்க்க விரும்புகிறார்.

எலியாஸ் :—அடியேன் இச்செய்திகளைக் கேட்கவும், தங்கள் எல்லாரையும் பார்க்கவும் கிடைத்த சிலாக்கியத்திற்காக என் கடவுளை ஸ்தோத்திரிக்கிறேன்.

முதல் சாஸ்திரி :—நீ நல்ல மனுஷன்போல் காணப்படுகிறாய். உங்கள் ராஜா பொல்லாதவராகத் தோன்றுகிறார். நாங்கள் திரும்ப அவரிடம் போகப் போகிறதில்லை. எகிப்து தேசத்தின் வழியாய்ப் போய் எங்கள் நாடு சேருவோம். இன்றைக்கே ஒருவருக்கும் தெரியாமல் புறப்படுகிறோம்.

2-ம் சாஸ்திரி :—மேரி ! உனக்கு எங்கள் தேசத்து உடுப்பு ஒன்று கொடுக்கிறேன். (மேரி வணக்கத்துடன் பெற்று கொள்ளுகிறாள்.)

3-ம் சாஸ்திரி :—எலியாஸ். நீ போய் யோசேப்பினிடம் இந்த இடத்தை சீக்கிரம் விட்டு எங்கேயாவது போகச் சொல். எல்லாம் வல்ல கடவுளும் அவருக்கு தெரிவிப்பார். வழி நடத்துவார். கடவுள் உங்களோடு இருப்பாராக.

மேரி ஒரு பாட்டு பாடுகிறாள். ஞானப்பாட்டு 65 (யோசேப்புக்குத் தெரிவிக்கப்போகிறாரோ)

சாஸ்திரிகள் :—பாடுகிறார்கள். ஞானப்பாட்டு 64

## காட்சி IV

மறுவாரம்

ரூத் :—(எலியாஸ் எழுதிக் கொண்டிருக்கிறார். மேரி பிள்ளையை பார்த்துக் கொண்டிருக்கிறாள். ரூத் வெளியிலிருந்து வருகிறாள்.)

பெத்லெகேமில் வடபாகத்தில் மிகுந்த அழுகையும் கூக்குரலுமாயிருக்கிறது. என்ன சங்கதி என்று விசாரித்தால் நல்லது.

பிலிப்பு :—(ஓடி வந்து வீட்டுக்குள் நுழைகிறான்) அம்மா! சிறு குழந்தைகளை எல்லாம் கொல்லுகிறார்கள். தம்பியை என்ன செய்கிறது ?

ரூத் :—என்ன சங்கதி? தெளிவாய்ப் பேசு.

எலியாஸ் :—(புஸ்தகச் சுருளை மூடி வைத்து விட்டு) அதென்ன பிலிப்பு ?

பிலிப்பு :—ஏரோது தன் சேவகரை அனுப்பி பெத்லேகேமிலுள்ள 2 வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொல்லுகிறான்.



ரூத் :—(கீழே உட்காருகிறாள்) ஐயோ, நான் என்ன செய்வேன்? நான் முதலில் சாகவேண்டும்.

எலியாஸ் :—ஆபிரகாமின் தேவனே ! ஏரோது தன்னை ராஜா என்று சொல்லி, எத்தனை அக்கிரமங்கள் செய்து வருகிறான். இப்போது குழந்தைகளையும் கொல்லுகிறானே ! தேவனே அக்கிரமக்காரன் தன் செய்கைகளை விட்டு ஓயமாட்டானா ? ரூத் ! தாவீதை வெளியே போட்டு விடு. நம்மால் காப்பாற்ற முடியாது. என் செய்வேன்? ஐயோ மகனே !

(எல்லாரும் திகில் அடைந்தவர்களாய்க் காணப்படவேண்டும்)

மேரி :—தாவீதை ஒளித்து வைக்கக்கூடாதா ?

எலியாஸ் :—எங்கே போவேன்? வீதியில் சேவகர்கள் காவல் காத்துக்கொண்டு நிற்கிறார்களே!

ரூத் :—நமக்கு ஆண் பிள்ளை இல்லையென்று சொல்லக்கூடாதா ? பிறந்து இரண்டு வாரங்கள் தானே ஆயிற்று.

எலியாஸ் :—நான் பெத்லேகேமின் குடி மதிப்பு அட்டவணை அனுப்பி விட்டேனே! ஒவ்வொருவருக்கும் ஆண் குழந்தை, பெண் குழந்தை எத்தனை என்று அந்த சேனாபதிக்கு அட்டவணையைப் பார்த்தவுடன் தெரியுமே !

ரூத் :—என்ன செய்யலாம்? ஐயோ !

எலியாஸ் :—பொய் சொன்னால் முடியாது. வீடு முழுவதும் தேடுவார்கள். மகனைக் கொல்லுவார்கள். என்னைச் சிறைச்சாலையில் போடுவார்கள். மேரியையும் உன்னையும் அடிமையாக்குவார்கள்.

மேரி :—அப்பா ! அட்டவணையில் வயது எழுதி விட்டீர்களோ ?

எலியாஸ் :—இல்லை என்று நினைக்கிறேன். ஆறுதலின் தெய்வமே எனக்கு இன்னொரு மகனைத் தரமாட்டீரா ? மேரி ! வெளியே போகாதே. (மேரி வெளியே போகிறாள்)

மேரி :—பிலிப்பு வீடு மட்டும் போய் விட்டு வருகிறேன்.

ரூத் :—நான் பிள்ளையை ஒளித்து, செத்துப்போனமாதிரி அழுது கொண்டிருக்கலாமா? ஐயோ, தெய்வமே ! ஏழைக்கு இரங்கும். நீரே என் தஞ்சம்.

எலியாஸ் :—அப்படியும் செய்யலாம். ஐயோ ! அழுது விட்டால் என் செய்வது? மகனே ! எத்தனை நாள் உனக்காகக் காத்திருந்தோம். இச்சமயத்தில் பிறந்தாயே !

மேரி :—(பையன் மாதிரி உடுத்தி இடுப்பில் கச்சை கட்டி, தலையில் தொப்பி மாதிரி கட்டி உள்ளே வருகிறாள்.)

அப்பா! நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். நான் பையன் மாதிரி உடுத்திக் கொண்டேன். தம்பியை பெண் குழந்தையாக வைத்துக்கொள்ளுவோம். நன்றாய் உடுப்பு போட்டு மூடி வைத்துக்கொள்வோம். நான் பெரிய பையனாக காணப்படுகிறேன். என்னை வேண்டுமானாலும் கொல்லட்டும். தம்பியைக் காப்பாற்றுவோம்.

எலியாஸ் :—ஐயோ மகளே ! ஒரு வேளை தப்பலாம். ரூத் ! மேரியின் தலை முடியைச் சரிப்படுத்து. நீ சரியாய் உட்கார்ந்து தையலை தைத்துக்கொண்டிரு. மேரி மேசை பக்கத்தில் நின்று, பத்து கற்பனைகளை என்னிடம் படித்து ஒப்புவித்துக் கொண்டிரு. தேவனாகிய கர்த்தாவே ! உமது செவியைச் சாய்த்துக் கேளும். ஜீவனுள்ள தேவனே ! இரங்கும்.

(ரூத்! தன்னை அடக்கி உட்காருகிறுள். மேரி பத்து கற்பனைகளை படிக்கிறுள்.)

மேரி :—உன் தேவனுகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

(திரை திறக்கிறது. இரண்டு வீரர் உள்ளே வருகிறுர்கள். ஒருவன் கையில் வாள் இருக்கிறது. வாள் இரத்த மயமாயிருக்கிறது. ஏலியாஸ் ஒன்றும் தெரியாதவர்போல் திரும்பிப் பார்க்கிறுர்)

ஏலியாஸ் :—என்ன சங்கதி?—யாரைத் தேடுகிறீர்கள்?

(சேனுபதி பெரிய சிரிப்பு சிரிக்கிறுர்.)

நான்தான் கணக்குப் பிள்ளை—யார் என்ன தப்பு செய்தது?

சேனுபதி :—ஏரோது ராஜா இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை எல்லாம் கொல்லும் படி உத்திரவு செய்திருக்கிறுர். வீடு வீடாய்ப்புகுந்து குழந்தைகளை மோதி அடிக்கிறேம். வீடுகளில் மனிதர் எங்களுடன் சண்டை இடுகிறுர்கள். பெண்கள் எங்கள் முகங்களையும், கைகளையும் பிறிப்போடுகிறுர்கள். நீங்களோ சமாதானமாயும் சந்தோஷமாயும் இருக்கிறீர்கள்.

ஏலியாஸ் :—பயங்கரம்! என் இப்படி செய்யவேண்டும்?

சேனுபதி :—ஒரு பாலகன் பிறந்திருக்கிறுராம் அவர் ராஜ குழந்தை என்று ஏரோது கேள்விப் பட்டாராம். சரி, இந்த வீட்டில் ஓர் ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் உண்டு.

ஏலியாஸ் :—ஆம்.

சேனுபதி :—நீங்கள் பயப்படவேண்டியதில்லை. பையன் பெரியவன். சேவகா! உனக்கு இங்கு ஜோலி இல்லை. போவோம்.

(போய் விடுகிறுர்கள். ரூத் விறைத்து உட்கார்ந்திருக்கிறுள்)

ஏலியாஸ் :—என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி. எங்களை வலு சர்ப்பத்தின் கைக்குத் தப்புவித்தீர்.

மேரி :—தாவீது பிழைத்தான். பாலகன் இயேசுவும் பெத்லேகேமில் இல்லை என்று சந்தோஷப் படுகிறேன் அம்மா. எருசலேமுக்குப் போகிற வழியில் அவர்கள் நேற்று இரவே போய் விட்டார்கள். என் சொல்லுக்கிணங்கி இயேசு பாலகனும் தப்பினுர்.

(ஞானப்பாட்டு 61 பாடுகிறுள்)

திரை விழுகிறது.

ADAPTED BY JANE MARY FENN.

## கிறிஸ்து நாதர்

இறைவரிற் சிறந்த இறைவர் தலைவ,
அறையின் உம்புகழ் ஆவ தெளிதோ?
பாவிக்கா உதித்துப் பாடுகள் உழன்றே
ஆவியை இழந்த அருங்குணச்செல்வ,
பலவிடம் சென்று பலரைக் கண்டு
பலவிதம் பிரசங்கம் பண்பாய்ச் செய்து
பாலரை அணைத்துப் பாவியை வாழ்த்திச்
சிலரைப் பாலனம் செய்த சீரானே,
பிணியர் பலரைப் பிரியமாய் நோக்கி
நன்றவர் பிணியை நயந்து நின்றகற்றிப்
பன்னிரு சீஷரைப் பாரினிற் கொண்டு
மன்னிடும் கிறிஸ்தெனும் மகிமை உடையோய்,
பெரிய எம் பாவம் பரிவுடன் துடைத்தே
வருக எம் வினைதீர்க்க வருகவே!

S. Samuel Jayaraj, Student,
St. Paul's High School, Madras.

## தமிழ்

என்னருந் தமிழே, என்னருந் தமிழே,
என்றும் வளர்ந்தோங்கி எனக்கருள் புரிவாய்!
அளவிலா ஆசை அடைந்தேன் உன்மேல்;
உன்னைக் கற்கவே உயிரை வளர்த்தேன்!
உன்னைப் போன்ற ஒரு மொழி வேறில்லை;
பூமியில் எங்கும் புகழ்வார் உன்னை;
உன்னை என்றும் ஓயாது படிப்பேன்.


R. Gopalakrishnan, Student,
St. Paul's High School, Madras.

## சேவல் விடுதூது

### பரீட்சை நீக்க வேண்டுகோள்

செந்நிறச் சேவல், செந்நிறச் சேவல்,
செந்தமிழ் நாட்டில் சிறப்புடன் வளரும்
காங்கிரஸ் என்னும் கட்சியின் சார்பில்
பாங்குடன் உழைக்கப் பதவியை ஏற்ற
கல்வி அமைச்சரைக் கட்டாயம் கண்டே
அல்லலைத் தந்திங் கதீதியைப் பெருக்கும்
பரீட்சையதனைப் பண்புடன் அகற்றப்
பரிந்தே அம்ம பல முறை வேண்டி
உத்தரம் கேட்டு நீ உடனே என்னிடம்
பத்திமாகப்பதிலைச் சொல்லுதி!
உனக்கு வேண்டிய உண் பொருள் யாவையும்
அன்புடைச் சேவலே. அளிப்பேன் நினக்கே.
மெத்தவும் மாணவர் மெச்சியே வாழ்ந்திட
இத்தகைப் பணியை இனிது செய்வாயே!

V. S. Ramanujam, Student,
St. Paul's High School, Madras.



“பட்டம் விடப்போகிறேன்”



Printed by S. T. Rhenius at the N.M.S. Press, 48 B, Peters Road, Royapettah and Published by Rev. T. A. Fenn, College Church, 12, Venkata Maistry Street, George Town, Madras.

201

# வித்யாதனம்

## (TAMIL TREASURE CHEST)




Vol. 1 டிசம்பர்மீ 1937வரு No. 9

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 |
| 2. | கிறிஸ்து ஜயந்தி நாடகம் | 3 |
| 3. | இம்மானுவேல் | 13 |
| 4. | கற்கும் முறை | 16 |
| 5. | பிள்ளைகளுக்குரிய படங்கள் | 18 |
| 6. | பெத்லகேமின் நட்சத்திரம் | 19 |
| 7. | சான்ற்ரு க்ளாஸ் (Santa Claus) கடிதம் | 20 |
| 8. | புகையிலை | 20 |
| 9. | பட விளையாட்டு | 23 |
| 10. | கிறிஸ்து ஜயந்தி தீபாலங்காரம் | 23 |
| 11. | சந்தோஷ நற்செய்தி | 24 |


## பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |


REV. T. A FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George Town,
MADRAS



6 JAN 1935



MADONNA OF THE CHAIR
—*Raphael*

8-JAN 1938
MADRAS

1937

Merry Christmas

# வித்யாதனம்

# VIDYADHANAM

தொகுதி 1 டிசம்பர்மீ 1937ளு பகுதி 9

## பத்திராதிபர் குறிப்பு.

நேயரனைவருக்கும் எம் கிறிஸ்து ஜயந்தி வந்தனம் அளிக்கின்றோம். எம் பெருமான் உம் இதயத்தில் உதயமாவதை விட ஆனந்தம் வேறு உளதோ? கிறிஸ்து ஜயந்தி விழாவின் விசேஷம், இதய பெத்லகேமில் இயேசு உதயமாவதே! அரசனைக் காண ஆசித்தோரின் கதை வாசித்திருக்கின்றீர்களா? அது எத்தனை அருமையான கதை! அக்கதை அறியாதார் அதை அறிவது அத்தியந்த அவசியம். அதுவே எம் செய்தி; அதுவே உமக்கு யாம் ஈயும் ஈவு; அதுவே தேடுவோருக்குக் கிடைக்கும் தேவ வாக்கு.

ஓர் ஊரில் அந்தம் வாய்ந்த ஓர் அம்மணி இருந்தனள். இதயபாய் என்பதவள் நாமம். அவளது அந்தம், ஆடை ஆபரணத்தைச் சார்ந்ததன்று, அவளுக்கு அங்க அலங்காரமும் அதிகமில்லை. ஆயினும் அவளது குணலட்சணம் மிகவும் மெச்சத்தக்கது. இதயபாயின் இல்லம் இன்ப இல்லமாயிருந்தது.

அவ்வூரி லுள்ளவர்கள் அவ்விடம் அரசன் தோன்றுவார் என்று எண்ணிக் காத்துக்கொண்டிருந்தனர். அநேகர் தம் தம் இடத்தை சுத்தம் செய்து அதை அரசனுக்கென்று

அலங்கரித்துக் காத்துக் கொண்டிருந்தனர். இதயபாயும் உண்ணும் உணவு, உடுக்கும் உடை,
படுக்கும் பாய் முதலியவற்றை ஆயத்தம் செய்து அரசனைக் காணக் காத்துக் கொண்டிருந்
தனள். அந்நேரம் ஆட்கள் வருகிற சத்தங் கேட்டு அரசன் என்று எண்ணி எதிர்கொண்
டழைக்கும்படி ஏகினள்.

வந்தவர் யாவர்? களைப்புற்ற ஓர் ஏழைத் தொழிலாளியும் குளிரினால் நடுங்கிக்
கொண்டிருந்த அவன் மனைவியும் குழந்தையுமே! "இன்றிரவு இங்கு இராத்தங்க இடங் கிடைக்
குமா?" என்று அவ்வேழை மனிதன் வினவினன். இதயபாய் என் செய்வாள்? "இது அரசன்
தோன்றும் நாள். இன்று இரவு இராத்தங்க எவ்வாறு இணங்குவேன்? இது வேறு ஒரு
நாளாய் இருக்கக் கூடாதா? அல்லது, இம்மூவரும் இங்கு வேறு ஒரு நாளில் வரக்கூடாதா?"
என்று தனக்குள்ளே சிந்திக்கலாயினள். பின்னும் அம்மனிதனைப் பார்த்து "ஐயா, இன்று
இரவு என் பிரிய சிநேகிதர் ஒருவர் வருகின்றார். ஒரு நாளும் வராதவர். சகலமும் அவருக்
கென்று ஆயத்தம் பண்ணியிருக்கின்றேன். இன்றிரவு எனக்கு உங்கள் மூவரையும் வரவேற்க
முடியாது. இந்த இரவு தவிர வேறு எந்த இரவும் வந்து தங்கலாம்." எனக் கூறினள்.

அதற்கு அம்மனிதன் "எந்த இடம் ஏகினும் இந்த விடை கூறுகின்றனர்.
எங்களுக்கு இன்றிரவு எங்கும் தங்க இடமில்லை." என்று கூறி விசனத்துடன் திரும்பிப்
போகையில், இதயபாய் கதவைத் தாழிடு முன் குழந்தையின் இனிய முகத்தைக் கண்டனள்.
அக்குழந்தையிடம் ஏகித் தன் கரத்தில் ஏந்தினள். அக்குழந்தை முகத்துக்காகப் பெற்றோரை
யும் தன் வீட்டிற்குள் அழைத்துச் சென்றனள். அரசனுக்கு ஆயத்தம் செய்திருந்த படுக்கை
யிற் பாலகனைக் கிடத்திப் பெற்றோருக்கு ஆகாரம் படைத்தனள்.

வீதியில் வேந்தன் வரவை எதிர் நோக்கினவர்கள் இன்னிசை கீதம் பாடினர். வீதி
யில் திரள் ஜனம் கூடினர். அவரை அழைத்து உபசரிக்கும் சிலாக்கியம் அற்றுப் போயினும்
அவரைத் தரிசித்து அவர் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட வேண்டும் என்று ஆசித்த
வளாய் இதயபாய் தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஏகினள்.

வீதியில் ஜனங்களுடன் வெளியில் மந்தை காத்த இடையரையும் கிழக்கிலிருந்து
வந்த ஞானியரையும் கண்டனள். அந்த ஞானியர் ஒரு பிரகாசம் பொருந்திய நட்சத்திரத்
தைப் பின் பற்றிச் சென்றனர். அவர்களுடன் யாவரும் ஏகினர். அரசன் அன்று தோன்று
வார் என்று எண்ணி வீதி வீதியாய், வீடு வீடாய்த் தேடினர்.

இதயபாய் வீட்டண்டை இவர்கள் வரும்போது நட்சத்திரம் நின்றது. இடையரும்
ஞானியரும் நின்றனர். அந்த வீட்டிலே அரசன் இருக்க வேண்டும் என்றுரைத்தபோது இதய
பாய் அது தன் வீடென்றும் தான் ஓர் ஏழைக் குடும்பத்திற்கு அன்று இராத்தங்கத் தங்கு
மிடம் தந்ததாகவும் கூறினள். விண் நட்சத்திரம் அவ்வீட்டின் மேல் தங்கினதைக் காண்பித்த
போது இதயபாய் நடுக்கத்துடன் கதவைத் திறந்தனள்.

வீடெங்கும் ஜோதிமயமானது. தூய குடும்பம் அங்கிருந்தது. நாசரேத்தூர் தச்ச
னும் கன்னி மரியாளும் இயேசு பாலகனும் இருக்கக்கண்டு இதயபாய் விழுந்து வணங்கினள்.
ஞானியர் காணிக்கை படைத்தனர். யாவரும் பணிந்தனர்.



(Tune. Joy to the world, the Lord is come)

1. ஆனந்தமே! பூலோகத்தில்
விண் வேந்தன் வந்ததால்
எம் இதயம் இடந்தரும்
விண், மண்ணும் பாடிடும்

2. ஆனந்தமே! பூலோகத்தில்
நற்பாலன் வந்ததால்
நாம் ஓசன்னா, அல்லேலூயா,
என்றேத்திப் போற்றுவோம்.

3. ஆனந்தமே! பூலோகத்தில்
நல் நேசர் வந்ததால்
நாம் ஏகமாய் உல்லாசமாய்
ஓயாது பாடுவோம்.

T. A. Fenn.

# கிறிஸ்து ஜயந்தி நாடகம்

## விசித்திர சத்திரம்

காட்சிகள்.

1. கிணறு 2. சத்திரம் 3. மலைச்சரிவு 4. முன்னணை 5. இடையன் குடிசை
6. பாலகன் தரிசனம்.

நடிகர்கள்.

கன்னிமரியம்மாள். யோசேப்பு. காபிரியேல். சத்திரக்காரன். அவன்
மனைவி. சாமுவேல். திமேயு. சேத். சில்லாள். பர்திமேயு. (குருட்டுப் பையன்)
எலிசபேத். தாவீது. தூதர்.

காட்சி 1.

கிணறு.

(கிணற்றோரம் கன்னிமரி பாடுகின்றாள்.)

(இராகம்—பூபாளம்—கீர்த்தனை—வி"டியல் நேரத்தின்")

கன்னிமரி:—

1. அந்தி ஆதவன் அஸ்த மித்தனன்
சுந்தர மிகு சந்திரன் எழுந்தனன்
அந்த ஒளிதர அருணன் அகன்றனன்
இந்த வேளை நீ அமர்ந்திராய்!

2. அந்த காரமும் வந்து தங்குது
எந்த மலரிலும் இதழ்கள் மடங்குது
இந்த நேரமும் இதயம் துதிக்குது
எந்த விதமும் நீ அமர்ந்திராய்!

ஆண்டவரே! அமர்ந்திருக்க அருள் அளிக்கமாட்டீரோ? கிணற்றின் அருகே குடத்தை வைத்துவிட்டுக் காத்திருப்பேன் காட்சி தரமாட்டீரா?

(சங்கீத கோஷ்டியுடன் தூதன் வருகின்றான்)

தோனி:—கிருபை பெற்றவளே, வாழ்க! மரியாளே, வாழ்க!
கன்னிமரி:—என்னைப் பேர் சொல்லி யழைப்பவர் யார்?
தோனி:—ஆண்டவர் உன்னுடனே இருக்கிறார்.
கன்னிமரி:—தொனியன்றி வேறு ஆளில்லையே! பயமாயிருக்கின்றதே! என்ன சொல்வேன்?

(காபிரியேல் தோன்றுகின்றான். மரியம்மாள் பணிகின்றாள். தூதன் லீலிப் புஷ்பக் கொத்து ஒன்று கொடுக்கின்றான்.)

காபிரியேல்:—

மரியாளே, பயப்படாதே, நீ கடவுளிடத்தில் கிருபை பெற்றாய். ஒரு குமாரன் உதிப்பார். அவருக்கு இயேசு என்று பேரிடுவாய். அவர் பெரியவராயிருப்பார். உன்னத மானவருடைய குமாரன் எனப்படுவார். ஆண்டவாகிய கடவுள் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் வம்சத்தை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது.

கன்னிமரி:—இது எப்படியாகும்? யான் கன்னியல்லவா?
காபிரியேல்:—பரிசுத்த ஆவி உன் மேல் வரும். உன்னதமானவருடைய வல்லமை உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது கடவுளுடைய குமாரன் எனப்படும்.

கன்னிமரி:—இதோ நான் ஆண்டவரின் அடிமை, உம்முடைய சொல்லின்படி எனக்காகட்டும்.
(தூதன் தன் கையை நீட்டி ஆசீர் அளிக்கின்றார்.)

## காட்சி II

### சத்திரம்.

(சத்திரக்காரனும் மனைவியும் சத்திர வாசலில் நிற்கின்றனர்.
விளக்கு எரிந்துகொண்டிருக்கின்றது)

சத்திரக்காரன்:—சகலமும் சரியாயிருக்கின்றதா?
மனைவி:—பக லெல்லாம் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றேன். சகலமும் ஏன் சரியா யிருக்காது?
சத்திரக்காரன்:—பாடுபட்டவர் பலனடைவர். படுக்கப்போவோம் வா. சமாதானத்தோடு நித்திரை செய்வோம். என்ன அழகான வானம் பார்! ஆயிர விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுபோல் விளங்குகின்றது. ஜனத்தொகைக் கணக்கு எடுக்கும்படி ஏராளமான ஜனம் இன்னும் வந்துகொண்டே யிருக்கின்றனர். இல்லாவிட்டால் இவ்வளவு வேலை ஏது? ஏற்கனவே தூங்கியிருக்கலாம். இனி



மேல் ஒருவரும் வரமாட்டார்கள் என்று எண்ணுகின்றேன். வந்தாலும் சத்திரத்தில் இடமில்லை.

(தூங்கும்படி படுத்துக்கொள்ளுகின்றான். மனைவி போய்விடுகின்றாள். திரை விழுகின்றது.
(மரியம்மாளும் யோசேப்பும் வருகின்றனர்)

யோசேப்பு:—மரி! என்மீது சாய்ந்துகொள். இன்னுங் கொஞ்சதூரம் மாத்திரம். அதோ அச்சத்திர விளக்கொளியே நமது வழிகாட்டும் நட்சத்திர ஒளியாகும். வெகுதூரம் பிரயாணம் செய்திருக்கின்றோம், என் பாதரட்சையும் தேய்ந்து போயிற்று. உனக்குப் பசியும், களையும் அதிகம். குளிரு மடிக்கின்றது. அனலும், உணவும், களையாற்றும் இடமும் காத்துக்கொண்டிருக்கின்றன. பழைய கஷ்டங்களை நினைக்கவேண்டாம்.
கன்னிமரி:—அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால் இடமில்லாவிட்டால் என் செய்வது? குளிரில் அநேகர் படுத்திருக்கின்றார்களே! பரிதாபம்! அவ்வாறே நாமும் அவதிப்படவேண்டியதிருக்கும்.
யோசேப்பு:—பயப்படாதே, நாசரேத்தின் வெண் ரோஜாப் புஷ்பமே! வாடையோ, வாதையோ உன்னை யணுகாது.

(சத்திரக் கதவைத் தட்டுகின்றான். சத்திரக்காரன் திறக்கின்றான்)

சகோதரா, சமாதானம்!
சத்திரக்காரன்:—சகோதரனே, உனக்கும் சமாதானமே! எங்கிருந்து இங்கு வருகின்றீர்கள்? என்ன தேவை?
யோசேப்பு:—நாங்கள் நாசரேத்திலிருந்து ஜனத்தொகைக் கணக்குக்காக வருகின்றோம். இருள் மூடிற்று. இராத்தங்க விரும்புகின்றோம்.

சத்திர்க்காரன்:—இராத்தங்க இடமில்லையே.
யோசேப்பு:—ஒரு சிறு அறைபோதும்.
சத்திராக்காரன்:—சத்திரத்தில் இடமேயில்லை.
யோசேப்பு:—நாங்கள் ஏழைகள். தச்சுவேலை செய்கின்றவன் யான். (கன்னிமரியைக் காட்டி) அந்த அம்மணி முகத்துக்காவது இரங்கவேண்டும்.
சத்திரக்காரன்:—இரங்கா மலென்ன? இடமில்லையே! எனினும், அதோ! மாடடையுங் கூடம். அவ்வோரிடமே யுண்டு. இவ்விரவைக் கழிக்கலாம். புல்லணையே தலையணை.
யோசேப்பு:—மாடடையுங் கூடமா? மிருகங்களோடு மிருகமாய் மேய்ந்து படுத்துறங்கவா நேர்ந்தது.
சத்திரக்காரன்:—இஷ்டமானல் இருக்கலாம்! இல்லாவிட்டால் ஏகலாம்,
கன்னிமரி:—நல்லவரே! உமக்கு க்ஷேம நன்றி. இங்கு இராத்தங்குவோம், (யோசேப்பைப் பார்த்து) கலங்கவேண்டாம், கூரைக்கூடே வான் நட்சத்திரங்களை யான் காணக்கூடுமானல் மாடடையுங் கூடமும் அரசிச்குரிய வீடதாகும்.
யோசேப்பு:—ஆடு, கழுதை, மாடு அடையும் வீடு! அதற்கு என்ன ஈடு?
கன்னிமரி:—அதோடு கூட கடவுளும் பாடும் தூதரும் உளரே!

## காட்சி 3

### மலைச்சரிவு

இடையன் 1. திமேயு ஏன் இன்னும் வரவில்லை? மூன்றும் சாமம் ஆயிற்றே, (தீபத்தை ஆட்டி அடையாளங் காட்டுகின்றான். இரண்டாவது இடையனைப் பார்த்து) எப்போது வந்தாய்? நம் தகப்பனாகிய யோசேப்பைப்போல குழியில் விழுந்தாயோ அல்லது காட்டு மிருகங்கள் பட்சித்துப் போட்டனவோ என்று மிகவும் பயந்தேன்.

இடையன் 2. நண்பா! மன்னிக்கவேண்டும். என் மகன் பர்திமேயு குருட்டுப்பையன்- தூங்கவேயில்லை. என் கையைப்பிடித்துக்கொண்டு போகவிடமாட்டேன் என்று அழுதான். அவனை விட்டு வரமுடியவில்லை.

இடையன் 1. சரி, மன்னிக்கலாம். அந்தப் பையனை நீ எவ்வளவாய் நேசிக்கின்றாய் என்பது எனக்குத் தெரியும். உன் சகோதரனாகிய சேத் எங்கே போனான்?

இடையன் 2. மலைச்சரிவில் ஓர் ஆடு தப்பிப்போயிற்று. அதைத் தேடிச் சென்றான். வெகு தூரம் போயிருக்கவேண்டும். (தூரத்தில் ஒரு தொனி கேட்கின்றது.) அதோ அவன் சத்தம் தொனிக்கின்றது. அது அவன்தான்!

(மூன்றாவது இடையன் வருகின்றான்)

இடையன் 3. திமேயு! வந்தனம். ஷேமுவேல்! வந்தனம், நீங்கள் காட்டின தீப ஒளி மலையின்மேல் தெரிந்தது. அதிகக் களைப்பாயிருக்கின்றேன். சற்று இளைப் பாறட்டும். குளிர்காயட்டும்.

இடையன் 1: தம்பி! உன்முகம் வெளுத்துப்போயிருக்கின்றது. கையில் இரத்தக்குறி இருக்கின்றது. காயமோ?

இடையன் 2. காயமல்ல. காலும் கையும் முட்களாற் பீறப்பட்டிருக்கின்றன. ஆடுகளை மேய்க்கக் காலையில் ஓட்டிக்கொண்டு போகும்போது காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்க இவ்வளவு நேரமாயிற்று. மேடும், பள்ளமும், கற்பாதையும் முட் பாதையுங் கடந்து செல்லுங்கால் செங்குத்தான பாறையின் சரிவிலுள்ள முட் செடியில் சிக்கிக்கொண்டிருந்த ஆடு கத்தும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன். ஆடு அரை உயிராயிருந்தது. அதின் உயிர்போனபின் அருந்த ஒரு பருந்து பறந்துகொண்டிருந்தது. கஷ்டத்துடன் நான் இறங்கி என் ஆட்டை இரட்சித் தேன். இரத்தக்கோலமானேன் என்பது ஆச்சரியமன்று.

இடையன் 1. என்ன வீரச்செயல்! நீ கூலிக்காரனன்று. ஆடுகளுக்காக உயிர் நீப்பினும் நீக்கும் ஊக்கமுடைய நல்ல மேய்ப்பன். சேத்! நாமும் ஆடுகளைப்போல வழிதப்பிப் போகின்றோம். ஒரு கனவு கண்டேன். கடவுள் விண்ணுலகை விட்டு மண்ணுலகுக் கேகி மானிடனாகி உன்னைப்போலவே பாடுகளேற்று நம்மை இரட்சித்ததாகக் கண்டு விழித்தேன்.



இடையன் 2. கடவுளாவது மனிதனாவதா? என்ன கனவு இது' வெளியே சொல்லாதே, வெட்கக்கேடு.

இடையன் 3. கனவோ, நினைவோ? விறகு போட்டு நெருப்பு மூட்டு.

இடையன் 1. (கையைப்பிடித்து) இரு. ஒரு நட்சத்திரம் விழக்கண்டேன். மின்னல்போல் பாய்ந்தது. அதோ ஒளியுடன் ஓசையுங் கேட்கின்றது. இனிய இராகம்! (பாட்டுச் சத்தம் கேட்கட்டும். ஒரு தூதன் தோன்றுகின்றார். இடையர் பணி கின்றனர்.)

விண் தூதனே! இரங்குமே!




தூதன்:—பயப்படாதிருங்கள்; இதோ, பெரிய சந்தோஷத்தை உங்களுக்கு நற்செய்தியாக அறிவிக்கிறேன்; அது ஜனத்துக்கெல்லாம் உரியதாகும். இன்று ஆண்டவராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றிப் பசுத் தொட்டியில் படுக்க வைத்திருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்.

இடையன்:—I. தெய்வமே! இது என்ன காட்சி? கண்ட கனவு இதுதானோ? சேத்! திமேயு! அதோ பாருங்கள். தூதர் கூட்டம் தூய கடவுளுக்குத் துதி பாடுகின்றனர்.

(வெள்ளுடை தரித்த தூதர் வந்து நின்று பாடுகின்றனர்.)

இராகம்—"ஸ்ரீ சிவ ஷண்முக வேலனே"

1. விண் வேந்தனின்றிங் குதித்தனர்
மண்ணில் மாட்டுத் தொழுவத்திலே
எண்ணுக் கடங்காத நன்மைகள்
மண்ணுளோருக்கு அளிக்கவே.

2. விண்ணி னுள்ளோருக்கு மகிமை
மண்ணி லென்றும் சமாதானமே
தொண்டராய் ஆண்டவன் பாதத்தை
அண்டினோர்க்கென்றும் ஆனந்தமே!

## காட்சி IV

## முன்னணை

(கன்னிமரி பாடுகின்றாள். தூதர் ரோஜா புஷ்பங்கள் சொரிகின்றனர். மூன்று தூதர் பணிகின்றனர். யோசேப்பு பக்கத்தில் கையில் தீபம் எடுத்து நிற்கின்றார்.)

ரார ராரோ ரார ராரீரோ
ரார ராரோ ராரரீரோ— (இருதரம் படிக்க)

குட்டி ஆடே கட்டிக் கரும்பே
தொட்டி லண்டைநின் றாட்டுவேன்—ரார
தூங்கு கண்ணே தூதர் கூட்டமும்
பாங்குட னின்றிங் காட்டுவார்.—ரார
ஆயர் காணுமுன் தூய தூதரே
ஈய வந்தீரோ நேயமாய்?—ரார

தூதன் I (முன் வந்து)

தாரகைத் தூதன் யானே! தூரமாயுள்ள ஞானியரையும் உம் தாள் பணிய வழி நடத்தும் ஒளியுடையோன். சில் னப் பாலகா! சகல ராஜாக்களும் உம்மிடம் வருவார்கள். சகலத்தையும் ஆளும் சக்தியே யானுமக் களிக்கும் ஈவு.

தூதன் II (முன்வந்து)

சந்திர தூதன் யானே! அந்தர வானிலுள்ளோர் உமது அடிபணியும்படி வழி நடத்தும் ஒளியுடையோன். தூய தூதர் சமாதான வழியில் நடத்துவர். இரவும் பகலும் உம்மைச் சுற்றிலும் கோட்டையாவர்.

தூதன் III (முன்வந்து)

சூரிய தூதன் யானே! மகிமை, சித்தி மாண்புறு சக்தி யாவும் உமக்கே உரியன எக்காலமுமே! உலக மேன்மையைக் களிம்பெனக் கருதி சிறுவை சிம்மாசனம் ஏறிடினும் இவை யாவும் உமக்கு மாண்புறு மகுடமாகும்.

(தூதர் பாடுகின்றனர்.) இராகம். "சத்தாய் நிஷ்களமாய்"

ஜோதி சுந்தரனே! சுக நித்திரை செய்திடுவாய்
ஆதி அந்த மற்றோன் அகம் மாட்டுத் தொட்டியிலோ?
நீதிக் காயுழைக்க நிகரற்ற மரி யிட்டமாய்
பாதி ராவினிலே பகலோனு யுதித்தீரோ?



யோசேப்பு:—கூரையின்மேல் நட்சத்திரம் ஜொலிக்கின்றதே! விடியும் நேரமாயிற்றே! சேவலும் கூவுகின்றது. (கதவு தட்டுகிற சத்தம் கேட்டு) யாரது? இன்னேரம் என்ன தேவை? (கதவண்டை போகின்றான்.)

இடையர்:—நாங்கள் மலைச் சரிவிலிருந்து வரும் இடையர். தயவு செய்து கதவைத் திறக்க மாட்டீர்களா?

யோசேப்பு:—யாரைத் தேடுகின்றீர்கள்?

இடையர்:—கிறிஸ்துவைத் தேடுகின்றோம்.

யோசேப்பு:—(கதவைத் திறந்து) உள்ளே வாருங்கள்.

(இடையர் உட்பிரவேசிக்கின்றனர்)

இடையன் 3. ஐயா, உலக இரட்சகர் உதித்த இடம் இதுதானோ?

இடையன் 1. நாங்கள் மந்தை காத்துக் கொண்டிருந்தபோது விண்தூதன் தோன்றி இந்த நற்செய்தியை எங்களுக்கு அறிவித்தனன். அவனுடைய முகம் பிரகாசித்தது. நாங்களோ முகங் குப்புற விழுந்தோம்.

இடையன் 2. அவன் காட்டின திசையில் ஒரு நட்சத்திரமும் தோன்றி பெத்லகேமில் வந்து நின்றது. தூதர் கூட்டம் கூடி கீதம் பாடினர். இக்காட்சியைக் கண்ட நாங்கள் நற் பாலனையுங் காண வந்தோம்.

கன்னிமரி:—இடையரே! இங்கு வாருங்கள். புற ஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியை வந்து பாருங்கள். உலகில் இவருக்கு நீங்களே முதற் பணி புரிகின்றவர்கள். அவர் கரத்தை உயர்த்தி முதல் ஆசீர் உங்களுக்கே அளிக்கின்றார். பயப்படாதிருங்கள். இவருடைய இதய இல்லத்தில் இன்று இடையருக்கே இடங் கிடைத்திருக்கின்றது.

இடையன் 1 என்ன பாக்கியம்!
இடையன் 2 எவருக்குண்டு இந்த சிலாக்கியம்?
இடையன் 3 தேவ ஆட்டுக்குட்டி போன்றவர் இவரே!

கன்னிமரி:—ஆட்டிடையரே! காணமற்போன மனித ஆடுகளைத் தேடி இரட்சிக்க வந்த ஆட்டிடையன் இவரே! இவருக்குச் செவி கொடுங்கள்.

(திரை விழுகிறது)

## காட்சி V

## (இடையன் குடிசை)

(சில்லாள், எலிசபேத், தாவீது, பர்திமேயு சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.)

சில்லாள்:—உதயமாயிற்றே! தந்தையைக் காணோமே!

பர்திமேயு:—சூரியன் தோன்றியும் வெப்பம் தெரியவில்லையே! சூரியனைக் காண எவ்வளவாய் வாஞ்சிக்கின்றேன்!

எலிசபேத் :—அது ஒரு பெரிய பந்து. பொன் மயமானது. நட்சத்திரத்தைக் காட்டிலும் பிரகாசம் பொருந்தியது.

பர்திமேயு :—அது தூதர் உருட்டி விளையாடும் பந்துதானே ?

சில்லாள் :—தேவ தூதருக்கு வேறு வேலையுண்டு. அவர்கள் தூங்கா பரிசுத்தர். நமது ஜெபத்தைக் கேட்டு தேவனிடத்தில் பேசுகின்றவர்கள். நமக்கு மோசம் வராமல் பாதுகாக்கின்றவர்கள்.

பர்திமேயு :—நீ தூதரைக் கண்டதுண்டா ?

சில்லாள் :—இல்லை. ஆனால் நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். பரம சேனையின் திரள் வானத்தில் தோன்றிப் பாடிற்று. என்ன இன்னிசைக் கீதம் பாடினர் அத்தூதர்! நான் விழித்துப் பார்த்தபோது ஒருவரையுங் காணோம்.

பர்திமேயு :—தூதர் ஒருவேளை வருவார்களோ ? நான் ஒரு நாள் இருட்டில் அலையும்போது ஒரு தூதன் வந்து என் கண்களைத் தொட்டதாகக் கனவு கண்டேன். அக்கனவில் நான் பார்வை யடைந்து மரத்தையும், வானத்தையும், மேகத்தையும், புஷ்பத்தையும் கண்டேன். என்ன ஆனந்தமடைந்தேன் தெரியுமா ?

(இரண்டாவது இடையன் உட்பிரவேசிக்கின்றான்)

இடையன் :—தூதரைப்பற்றிப் பேசுவது யார் ? பிள்ளைகளே ! கேளுங்கள். நேற்றிரவு பரம சேனையின் திரள் நாங்க ளிருந்த மலைச் சரிவில் தோன்றிற்று. ஒரு தூதன் எங்களோடு பேசினன். மற்றவர் பாடினர்.

எலிசபேத் :—தந்தையே ! கனவு கண்டீர்களோ ?

இடையன் :—கனவா ? அது ஆச்சரியமல்ல. விந்தையினும் விந்தை வேறொன் றுளது. எத்தனையோ ஆண்டுகளாய் எதிர் பார்த்திருந்த இயேசு கிறிஸ்து இன்று பெத்லகேமில் பிறந்திருக்கின்றார்.

சில்லாள் :—தேவன் மனிதனான விந்தையை சிந்தித்துக் களிகூறுவோம்.

இடையன் :—பரம தூதன் பாலகனைப் பசுத் தொட்டியில் பார்க்கச் சொன்னான். அங்கு தான் அப்பாலனைக் கண்டோம்.

சில்லாள் :—அவர் முகம் எப்படி இருந்தது ? யாரைப் போலிருக்கின்றார் ?

இடையன் :—புல்லணையில் நல்ல கண்களோடு செல்லப் பிள்ளையாய் கிடக்கின்றார். அழகு பாப்பா ! விழுந்து வணங்கினோம்.

சில்லாள் :—நானும் அந்தப் பாப்பாவைப் பார்க்கவேண்டும்.

எலிசபேத் :—நானும் வருவேன்.

பர்திமேயு :—நானும் ! குருடனாயிருக்கிறபடியால் வரவேண்டாம் என்று சொல்லவேண்டாம். தடவியாகிலும் பார்ப்பேன்.

இடையன் :—அவருக்குப் பிள்ளைகள்மேல் பிரீதியுண்டு. யாவரும் போய்ப் பார்க்கலாம். நட்சத்திரமொன்று வீட்டின்மேல் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. இதுவே உங்களுக்கு இடங் காட்டும்.



## காட்சி VI

## பாலகன் தரிசனம்

(கன்னிமரி பாடுகின்றாள்)

சில்லாள் :—(முழங்காலூன்றி) தாயே ! தூய தாயே ! தெய்வ பாலகனைக் காண வந்தோம். அவரைத் தொட்டுப் பார்க்கலாமா ?

கன்னிமரி :—கிட்ட வாருங்கள், பிள்ளைகாள் ! இதோ, தேவ ஆட்டுக்குட்டி !

பிள்ளைகள் :—(முன் வந்து முழங்காலூன்றி)

இயேசுவே ! உம்மைத் துதிக்கின்றோம்.

தேவ ஆட்டுக்குட்டியே ! உம்மை நேசிக்கின்றோம்.

கன்னிமரி :—பாருங்கள். உங்களைப் பார்த்துச் சிரிக்கின்றார்.

அவர் இதயத்தில் உங்களுக்கும் இடமுண்டு.

சில்லாள் :—தூய தாயே ! நாங்கள் ஏழைப் பிள்ளைகள். எனினும் வெறுங் கையோடே வர இஷ்டமில்லை. ஒரு கொத்துப் புஷ்பங்கள் கொண்டு வந்திருக்கின்றேன். இவை என் தோட்டத்தில் முதலாவது புஷ்பித்தவை.

கன்னிமரி :—இதற்கு அழகும் வாசனையும் அளித்த ஆண்டவர் உன் ஜீவியத்தையும் அழகும் செல்வாக்கு முடையதாக்குவாராக !

எலிசபேத் :—ஒரு வயது ஆட்டுக்குட்டியிலிருந்து முதலாவது கத்தரித்த வெண்மையான ரோமம் கொண்டு வந்திருக்கின்றேன். தூய தாயே! குளிர் காலத்திற்குதவும்படி ஒரு போர்வை செய்ய உதவும் என்று எண்ணுகின்றேன்.

கன்னிமரி :—ஆண்டவர் தம் அன்பினால் உன்னை அனல் மூட்டி ஆசீர்வதிப்பாராக !

தாவீது :—ஊதும் குழல் ஒன்று கொண்டு வந்திருக்கின்றேன். அதற்கு ஆறு துவாரமுண்டு (ஊதிக் காட்டுகின்றான்). இப்பாலகன் வளருங் காலத்தில் இதில் பாட்டு வாசிக்கப் பழகுவார்.

கன்னிமரி :—தூதர் பாட்டு வாசிப்பதைக் கேட்டு மகிழும்படி பாதி சிலுனக் கேற்ற மாளிகையுண்டாயிருப்பதாக !

பர்திமேயு :—தூய தாயே ! நான் ஒரு குருடன். இக்குருசைத் தவிர வேறு என்ன கொண்டு வரக் கூடும் ? கெத்சேமனே தோட்டத்திலுள்ள ஓர் ஒலிவக் கொப்பை வெட்டி என் தகப்பனர் இந்தச் சிலுவையை எனக்குச் செய்து கொடுத்தார். இதையே இப்பாலகனுக்கு என் காணிக்கையாகப் படைக்கின்றேன் (தடவிப்பார்த்துப் பக்கத்தில் வைக்கின்றான்)

கன்னிமரி :—பாவம் ! ஏழைப்பிள்ளை ! உனக்குங் கூட ஒரு சிலுவை இருக்கின்றதே ! இளவயதில் துன்பத்தைச் சகிக்கப் பிறந்திருக்கின்றாய். பொறுமையாயிரு. உன் மேல் இக்குருசை ஏற்றின கரமே இதை எடுத்து விடும் காலம் வரும். கூட்டத்தின் மத்தியில் நீ முழங்காலிட்டு நிற்பாய். இரக்கத்தின் பார்வையோடு இயேசுதாமே "பார்வை யடைவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளுவார். உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும்.

பர்திமேயு :—தாயே ! பொறுமையா யிருப்பேன். (குழந்தையைப் பார்த்து) ஆண்டவரே என் றும்மை அழைக்கும் நாளில் அடியேனுக்கு இரங்க மறவாதிரும்.

கன்னிமரி :—பயப்படாதே ! சமாதானத்தோடே போ !

பர்திமேயு :—(பாடுகின்றான்)

இராகம் "திவ்யதரிசனம் தாராகாதா ?"

பல்லவி : உய்ய அருள் வாந்தராகாதா ?
தெய்வ பாலகா !

அனுபல்லவி : பொய் வழி ஏகிடும் பூவிற் பிறந்தாய்
மெய், வழி, ஜீவனும் ஒன்றாய்— உய்ய

சரணம் : துய்யவர் போற்றிடும் தூய நேசா !
செய்யருங் காரியம் செய் வா ;
வெய்யவ னன்ன உம் வெப்பமும் ஜோதியும்
தெய்வமே ! என்தனுக் கீயும்— உய்ய

(கன்னிமரி பர்திமேயுவை யழைத்து முத்தமிடுகின்றாள். திரை விழுகின்றது)

Adapted by T. A. Fenn.

---

கிறிஸ்மஸ் மணிச் சத்தம் எங்கும் கேட்குதே
கிறிஸ்து ஜென்மித்தார் தம் மாந்தர் மீட்கவே
அன்பினால் தம் ஜீவன் ஈந்தவர்க்கு நீர்
என்ன விதம் ஈடு செய்யப் போகிறீர் ?

---

சர்வ லோகமும் விண் தூதர் கீத செய்தி கேட்கட்டும்
காடு மேடு பள்ளம் எங்கும் தென்றல் பாடி செல்லட்டும்
வாசந் தரும் புஷ்பம் யாவும் தம் சுகந்தம் வீசட்டும்
ராஜ ஜயந்தி வருக என் றிதயம் பாடட்டும்.

---



# " இம்மானுவேல் "

(Elizabeth Moreland)

இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட பல நாமங்களில் இம்மானுவேல் என்பது புராதனமான விசேஷமான அழகான நாமம்—இதின் கருத்து யாதெனில் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்பதே.

எல்லா மதங்களிலும், மனிதர் கடவுளோடு நெருங்கி ஜீவிக்கவும் அவரோடு சம்பாஷிக்கவும் பிரயாசப் படுகின்றனர். ஆனால் நம்முடைய இயேசு கிறிஸ்து கடவுளை நமக்கு சமீபமாக கொண்டு வருகிறார். அவர் நமக்கு கடவுளின் நற்செய்தியாகி அன்பையும், நம்பிக்கையையும், கொண்டு வருகிறதோடு தம்மையே மனிதரிடத்தில் கொண்டு வந்தார். அதாவது "கடவுள் நம்மோடிருக்கிறார்."

அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. அங்கே ஒரு வியாதியஸ்தன் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரிடம் தன்னை காட்ட விரும்புகிறான். அவன் அதிக பெலவீனமாயும், கஷ்டப்பட்டுக் கொண்டும் இருந்தபடியால் அவனால் ஆஸ்பத்திரிக்குப் போக முடிய வில்லை. ஆனால் ஒரு சிநேகிதன் டாக்டரைக் கூட்டிக் கொண்டு அவனிடம் வருகிறான். டாக்டர் வந்து பார்த்ததுமில்லாமல், ஆஸ்பத்திரி மோட்டார் கொண்டு வந்து அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்.

நமது சொந்த பெலத்தினால் நாம் கடவுளைச் சேர முடியாது. ஆனால் கடவுள் இயேசு என்னும் சகோதரனாக நம்மண்டையில் வருகிறார். மெய்யாகவே கடவுள் நம்மோடிருக்கிறவராகவே இருக்கிறார்.

நாம் விசுவாசப் பிரமாணத்தை அறிக்கை செய்யும் போது, இதை நம்புகிறோம் உண்மையாகவே, இதை நாம் உணருவோமானால், எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்போம் ! சீஷர்கள் சின்ன கூட்டம். அன்று இயேசு பெருமானை வழிவிட்டு அனுப்புகையில் கடைசித் தடவையாக அவர்களை ஆறுதல் படுத்தவும், உற்சாகப் படுத்தவும், அவர் இவ்வார்த்தைகளைப் பேசினார். "இதோ நான் உங்களுடன் இருக்கிறேன்." மேகங்கள் அவரை கண்ணுக்கு மறைவாக எடுத்துக்கொள்ளும்போது, தூதர்கள், அவர் எப்படியும் திரும்பி வருவார் என்று நிச்சயமாய் சொல்லிக் கொண்டிருக்கும் போது, இயேசுவின் கடைசி வார்த்தை "இதோ சதா காலங்களிலும் உங்களோடே இருக்கிறேன்." என்பதே. பின்னும், அவரை நாம் பார்க்காவிட்டாலும், அவர் நம்மை விட்டு தூரம் போகவே மாட்டார். ஒவ்வொரு நிமிஷத்திலும், அவர் நமது அருகில் நின்று கொண்டே இருக்கிறார்.

ஆதி சீஷர்கள் இதின் உண்மையை கண்டறிந்தார்கள். ஏனென்றால் சிஷர்கள் எங்கும் போய் எல்லா இடங்களிலும், பிரசங்கம் செய்தார்கள். எம்பெருமான் அவர்களோடே வேலை செய்தார் என்று மாற்கு சுவிசேஷகன் கூறுகிறான்.

நமது ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்று மெய்யாகவே நம்பினோமானால், நாம் பயப்படோம். ஒரு நாள் ஒரு வாலிபன் பாதிரியார் ஒருவரைப் பார்க்க சாயங்கால வேளை

யில் கிராமத்திலிருந்து வந்தான். அவன் தன் வீட்டுக்குப் புறப்பட்டபோது, ஐயர் ஒரு தடியை கொடுத்து, "நீ போகும்போது, தரையைத் தட்டிக்கொண்டே போ. வழியில் பாம்புகள் உண்டு. சத்தத்திற்கு அவை பயந்தோடும் என்றார்". அந்த வாலிபனோ, "ஐயா நான் பாம்புக்கு பயப்படுகிறதில்லை. ஆவிகளுக்குப் பயப்படுகிறேன். தாங்கள் தயவு செய்து என்னுடன் வரவேணும்." என்றான்.

ஐயர் அப்படிப்பட்ட ஆவிகள் ஒன்றும் இல்லையென போதித்த போதிலும் அவன் தான் ஒரு பெரிய வெள்ளை உருவத்தை கண்டதாகவும் அது தன் மேல் குதிக்க காத்திருந்ததாகவும் கூறி, பின்பு தான் பின்னேறிச் சென்று, பக்கத்திலிருந்த வீட்டுக்குள் புகுந்து அந்தவீட்டு மனிதனை கூட்டிக் கொண்டு, அந்த இடத்துக்கு வந்த போது, அந்த பிசாசு ஓடிப்போய் விட்டதெனக் கண்டதாகப் பயத்தோடும் நடுக்கத்தோடும் சொல்லி முடித்தான்.

அதற்குப் பாதிரியார் "பார்த்தாயா! நீயே ஆவிகள் இல்லை யென்று கடைசியில் சொல்லுகிறாய்."

வாலிபனோ " இல்லை ஐயா. ஆவிகளுக்கு தனி வழியே போகும் மனிதனை மாத்திரம் பயப்படுத்த வல்லமை உண்டு. இரண்டு பேர் சேர்ந்து போனால் ஒரு பயமுமில்லை." என்று விடை பகர்ந்தான்.

ஆகையால், நமது பெருமான் இயேசு எப்பொழுதும் நம்மோடிருப்பாராகில் கெட்ட ஆவிகள் இருந்தாலும் நம்மேல் யாதொரு அதிகாரமும் கிடையாது.

"தேவனே நீர் என்னோடே இருக்கிறீர். நான் ஒரு பொல்லாப்புக்கும் பயப்படேன்" என்று தாவீது ராஜா பாட்டு பாடியிருக்கிறார்.

மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன். ஏனென்றால், எம்பெருமான் இயேசு, மரணத்தையும் அதின் வல்லமையையும் ஜெயம் கொண்டார்.

பயம் என்பது எளிதில் ஜெயிக்கக் கூடிய தன்று. ஒரு பையன் இரவில் மாடிக்குப் போவதானால், பயந்து கூச்சலிடுவான். மாடியில் அவன் சகோதிரி சிறு குழந்தை தூங்கிக் கொண்டிருக்கும். இவன் கையில் விளக்கைப் பிடித்துக் கொண்டு, அதின் நிழல் விழுவதைப் பார்த்து, இருட்டுக்கு பயப்படுவதை விட அதிகமாய்ப் பயப்படுவான். மெத்தைப் படியில் கீழே நின்று கொண்டு அழுவான். ஒரு நாள் அவன் சிறிய தந்தை வீட்டுக்கு வந்திருந்தார் அவர் இச்சமாசாரத்தை அறிந்து, பையன் கையில் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து. "நீ தனிமையாய் ஏறிப்போனால் இந்த ரூபாய் உனக்கு சொந்தமாகும்" என்றார். பையன் பிரயாசப்பட்டான். ஒரு படிக்கு மேல் ஏற முடியவில்லை—பயம் அவனை ஆட்கொண்டது. தன்னோடு யாரும் வந்தால் அவன் ஏறுவான். நாமும் அப்படியே இருக்கிறோம். பயம் நம்மை ஆட்கொள்ளும்போது "இம்மானுவேலை" மறக்கவேண்டாம்.

கடவுள் நம்மோடிருக்கிறார் என்பதை உணருவோமானால் அநேக சோதனைகளை மேற்கொள்ள நமக்கு பெலனுண்டு. ஒருவன் மதுபானத்துக்கு அடிமையானான். அதைத் தனக்கு



அடிமையாக்க விரும்பினான். தேவ சகாயத்தைத் தேடினான். பழக்கத்தின் சக்தி கடுமையாயிருந்தது. தனியாய் சாராயக்கடை பக்கமாய்ப் போவானானால் கட்டாயம் சோதனைக்குட் படுவான். ஆனால் தன் சிநேகிதரோடே போகும் போது சோதனையை மேற்கொள்ளுவது அவனுக்கு எளிது. ஒரு சிநேகிதனும் கூட வராவிட்டால் அக்கடையின் பக்கமாய்ப் போகப்பயப்படுவான். ஒரு நாள் சிநேகிதன் வரவில்லை. அம்மார்க்கமாய் அவன் போக வேண்டியதிருந்தது. சோதனைக்குப் பயந்தான். திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம் உதித்தது தனிமையாய் இருக்கிறேனா? இல்லை என்னோடே எப்போதும் இருப்பதாக இயேசு வாக்குப் பண்ணியிருக்கிறாரே! சிநேகிதருட் சிறந்த சிநேகிதனவரே! அவரோடு போவேன்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு போனான். சோதனையை வெகு எளிதில் மேற் கொண்டான். "கடவுள் என்னோடு இருக்கிறார்" என்பதை அன்று முதல் முதலாக உணர்ந்தான். பவுலுக்கும் இந்த இரகசியம் தெரியும். "கிறிஸ்துவைக் கொண்டு சகலத்தையும் செய்ய எனக்கு சக்தியுண்டு" என்று சொல்லுகிறார்.

உங்களில் சிலர் ஒரு வேளை தனிமையாயிருப்பீர்கள். விசனமாயிருப்பீர்கள். மற்றவர்களின் மன மகிழ்ச்சியைக் காணும் போது நமது விசனம் அதிகப்படுகிறது. நமக்காகக் கவலைப்படுகிறவர்கள் இல்லை என்று எண்ணுகிறோம். ரஜா நாட்களைக் கழிக்க சொந்த வீடு இல்லையோ? வேறு இடமும் இல்லையோ? விசனப்பட வேண்டாம்.

"ஓர்போதும் விடேன்"
ஓர்போதும் விடேன்
உன்னைக் கைவிடேன்" என்றே
வாக்களித்தனரே!

இந்த வாக்கு எவருக்கும் உரியது. நம்முடைய தாக்கிக்கொள்ளுவோமாக! "கடவுள் இருக்கிறார்" என்பது மார்க்கத்தின் ஆரம்பம். "கடவுள் என்னோடு இருக்கிறார்" என்ற எண்ணம் இதயத்தி லுதயமாகும்போது தனித்தாள் மார்க்கம் உதிக்கிறது.

"இன்று, இங்கு, என் இதயத்தில் இம்மானுவேல் வருக!" என்று நல்வரவு கூறுவோமாக!

---

இன்ன லுற்றோரை யாதரிக்க
ஒன்னவர் தாபரிக்க
தன்னயந் தான் :மரிக்க—பிறர்
நயமே இலங்க
பயமே கலங்க
ஜெயமே துலங்க
தய வளித்திடும்.
கன்னியின் மைந்த னேசு பாலா—நற் சீலா
நன்னடை யுற்ற நீதி நூலா!

# கற்கும் முறை III

Mary Jean Daily

10. கற்பதற்குரிய சட்டங்கள்:—ஹால் க்வெஸ்ற் என்பார் நல்ல குறிப்புகள் எழுதியுள்ளார்:—

குறிக்கப்பட்ட பாடத்தை இன்னதென விளங்கிக் கொள்ளவேண்டும். வகுப்பு முடிந்தவுடன் வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும்' அக்கம் பக்கம் பார்க்கக்கூடாது. ஒரே காரியத்தில் மனதைச் செலுத்தவேண்டும். பழைய பாடத்தை அடிக்கடி திருப்பிப் பார்க்கவேண்டும். தானே தன் முன்னேற்றத்தை நிதானிக்கவேண்டும். தீர்மானத்தை சோதித்துப்பார்க்கவேண்டும். கொடுக்கப்பட்ட வேலையை செய்து பார்க்கவேண்டும். முக்கியமானவற்றைக் குறித்து மனதில் பதிக்கவேண்டும்.

11. மனதிற் பதிப்பது எவ்வாறு:—எண்ணங்களை ஒழுங்குபடுத்துவது ஞாபகம் பண்ண ஏதுவுண்டாக்கும். இது தெரியாவிட்டால் பிள்ளைகள் திருப்பிச்சொல்லி வாய்ப்பழக்கத்தினுல் ஞாபகம் பண்ணுகின்றுர்கள். அதைவிட பாடத்தை அல்லது ஒரு பாகத்தை வாசித்து பிரிவுகளாகப் பிரித்து முக்கியமான எண்ணங்களை ஒழுங்கு படுத்திப் படிப்பது நல்லது.

ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தை மனதில் பதிக்கும்படி மறுபடியும் மறுபடியும் சொல்லிப் பார்க்கவேண்டும். பாராமல் சொல்லவேண்டுமானுல் அநேகந்தரம் படிக்கவேண்டும் முப்பது நாள் படிக்கும் பாடத்தை மறப்பதைவிட முதல் இருபத்துநான்கு மணிநேரத்தில் படித்தவற்றை அதிகமாய் மறந்துவிடுவோம். ஆகையால் எதையும் படித்த பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ளே மறுபடியும் திருப்பிப் பார்க்கவேண்டும்,

படிக்கும்போதே படித்தவற்றை இன்னது இன்னதென சொல்லிப் பார்க்கவேண்டும். படிக்க ஒரு மணி நேரம், சொல்ல ஒரு மணி நேரம் என்று பிரிப்பது நன்றன்று. படிக்கும்போதே சொல்லிப் பார்க்க பழகவேண்டும். முதல் விசை கற்கும்போதே "கசடற கற்க"

தான் வாசித்த பாகத்தை மறுபடியும் வேறொருவர் வாசிக்கக் கேட்பதும் ஞாபகம் பண்ண ஏதுவுண்டாக்கும். இப்பழக்கமுள்ளவர்கள் வாசித்து கற்பவர்களைக் காட்டிலும் ஒரு வாரத்தில் நூற்றுக்கு பதினைந்து மடங்கு அதிகமாய் மனதில் பதிப்பிக்கக் கூடியவர்களாயிருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது. பாடத்தை வாசிப்பதும் அதைப் பற்றிப் பேசுவதும் மிகவும் பிரயோஜனம். பகலில் மாணவர் படித்தவற்றைப்பற்றி அவர்கள் பெற்றோர் இரவில் விசாரிக்கவேணடும். கலாசாலை மாணவர் மற்ற மாணவரோடு பாடங்களைப் பற்றிக் கலந்து பேசவேண்டும். கண், காது, மனோபாவனை, எழுதிப் படிப்பது முதலிய பல ஏதுக்களைக்கொண்டு படிக்கவேண்டும். படித்தவற்றைத் தானே சொல்லிப் பார்ப்பது பெரிய ஏது.

கொஞ்சம் கொஞ்சம் ஞாபகம் பண்ணுகிற முறையைக்காட்டிலும் மொத்தமாய் ஞாபகம் பண்ணும் முறை நல்லது. சிறு பிள்ளைகளுக்கு ஒருவேளை இது கஷ்டம். ஏனெனில் உடனே பலன் தெரியாது. ஆகையால் பெரும் பாகங்ளாய்ப் பிரித்துப் படிப்பிக்கலாம்.



லேயிட் என்பவர் 112 மாணவருக்கு 5000 சோதனைக் கேள்விகள் கொடுத்ததில் முன்னேரத்தில் ஞாபக சக்தி நன்று யிருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கின்றுர். பின்னேரத்தில் நூற்றுக்கு 5 வீதமும் சாயந்தரம் நூற்றுக்கு 6 வீதம் குறைவாயிருக்கின்றது. காலை ஏழு மணிக்கு முன் எழுந்து வேலை முடிக்கும் பிள்ளை 8 மணி முதல் பத்து மணி வரை படிக்கும் படிப்பே சிறந்தது.

ஹால் க்வெஸ்ட் என்பார் மௌன வாசிப்பின் முறையே கற்கும் முறை என்கின்றுர். நாம் மௌன வாசிப்பிலே அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியதிருப்பதால் நன்றுய் வாசிக்கப் படிக்கவேண்டும். வேகமாய் வாசிப்பவர்களே நன்றுய் விளங்கிக்கொள்ளக் கூடியவர்கள். வாசிப்பின் வேகத்தை அதிகரிக்கப் பிரயாசப்படவேண்டும். அமெரிக்காவில் 8-ம் வகுப்பு மாணவன் சராசரி நிமிஷம் ஒன்றுக்கு 250 வார்த்தைகள் வீதம் வாசிக்கக்கூடியவனு யிருக்கின்றுன். ஒரு மணி நேரத்துக்கு எத்தனை வார்த்தைகள் தனக்கு வாசிக்க முடியும் என்று ஒவ்வொரு மாணவனும் தன்னை சோதித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாளும் தன் வாசிப்பின் சக்தியை விருத்திசெய்யவேண்டும். உதடு அசையாமல் வாசித்தால் அதிக வார்த்தைகள் வாசிக்கலாம். ஒரே நேரத்தில் பல பதங்களைக் காணத்தக்கதாகக் கண்ணுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். வாசிப்பின் வேகம் அதிகரித்தால் கிரஹிக்கும் சக்தியும் விருத்தியாகும். ஒரு நாள் வேலையில் எவ்வளவோ கால ஆதாயமும் கிடைக்கும்.


எப்படி செய்வது என்பதைக் கற்பதைவிட பிறர் ஒவ்வாறு செய்கின்றனர் என்பதைக் காண்பதைவிட செய்து கற்பதே நமக்கு சக்திதரும். பெருக்கல் வாய்ப்பாட்டு சம்பந்தமாய் கர்க் பாட்ரிக் இரண்டு முறையை ஒப்பிடுகின்றுர். ஒன்று வாய்ப்பாட்டைப் பாராமல் படித்துக் கணக்குச் செய்வது. மற்றொன்று வாய்ப்பாட்டுப் புஸ்தகத்தைப் பார்த்துப் பார்த்துச் செய்வது. பார்த்து செய்வதே எளிதிற் கற்றுக்கொள்ளக் கூடிய முறையெனக் கண்டுபிடித்திருக்கின்றுர். பாராமற் படிக்கச் செலவிடும் காலம் அதிகம். ஒரு பாஷையைப் படிப்பதிலுங்கூட இலக்கண சட்டங்களைப் படித்தபின் பாஷையைப் படிக்கப் பிரயாசப்பட்டால் கால நஷடம் ஏற்படும் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைக் கொஞ்சங் கொஞ்சமாய் வாசிக்கப் பழகவேண்டும். அந்தந்த இடத்தில் தேவைக்குத் தக்கவாறு இலக்கணங் கற்று உபயோகிக்கலாம்.


தந்தி: பின்மென்


போன்: 2281

உங்கள் விலை உயர்ந்த உடைகளை தண்ணீரில் நனைக்காமல் அழுக்கை நீக்கவும், சாயம் போடவும், சலவை செய்யவும் வேண்டுமானுல்

ஆங்கிலோ பர்மா பின்மென்,
147, பிராட்வேக்கு அனுப்பவும்.



தச்சு வேலையின் தன்மை



மிருகங்களில் விளங்கும் மனிதத் தன்மை

---


இயேசு இதயங்களை உருவாக்குவதிற் சிறந்த ஒரு தச்சன்.

மனிதர் இதயங்களில் தெய்வத் தன்மை விளங்கும்படி உருவாக்க வல்லவர் அவரே!

---



# பெத்லகேமின் நட்சத்திரம்.



இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே நமது சூரிய மண்டலம் எவ்வாறிருந்தன எனக் காட்ட இரண்டு வருஷங்களுக்கு முன் அமெரிக்கா ஐக்ய மாகாணத்திலுள்ள நியுயார்க்பட்டணத்தின் கிரஹ மண்டல இயந்திர ஸ்தலாதிபர் தன் இயந்திரத்தைப் பின்னே திருப்பினார். இந்த இயந்திரம் சூரியனை எவ்வாறு கிரஹங்களாதிகள் சுற்றி வருகின்றன என்பதைத் தெளிவாய்க் காட்டும்படி அமைக்கப் பட்டிருக்கின்றது. பிறகு அவர் வருஷா வருஷம் எவ்வாறு கிரஹங்களின் நிலை மாறிக் கொண்டு வந்தது என்று காட்டத் திருப்பிக் கொண்டே வந்தார். கி. மு. 8-ம் ௵. சின்ன ஆசியாவில் வானம் எவ்வாறு தோன்றிற்று எனக் காட்டினார். கி. மு. 7-ம் ௵. சனியும் யூப்பித்தரும் ஒரே நேர் கோட்டில் அமைந்தன. கி. மு. 6-ம் ௵ செவ்வாயும் சேர்ந்து அதே கோட்டி லமைந்தது. மிகவும் பிரகாசமுள்ள நட்சத்திரம் போ லிவை மூன்றும் சேர்ந்து ஜொலித்தன. ஒரே நட்சத்திரம் போல் காணப் படத்தக்கதாக மூன்று கிரஹங்கள் சமீபித்து வருவது சாதாரண காரியமன்று. 800 வருஷங்களுக்கு ஒரு தடவை இது நடக்கலாம். இந்த மூன்று நட்சத்திரக் கொத்தும் யூதருக்கு விசேஷித்தது. யூத சரித்திரத்தில் ஏதோ விசேஷமான சம்பவம் நடக்கும் என்று எவரும் எண்ண ஏதுவுண்டு. ஐப்பிராத்து நதி தீரத்திலுள்ள ஞானியர் வானசாஸ்திரிகள். இவைகள் போகும் போக்கிலிருந்து சரித்திர சம்பந்த சம்பவங்களை முன்னறிவிக்கக் கூடியவர்கள்.

இம்மூன்று கிரஹங்களும் மறுபடியும் கி. பி. 799 ம் ௵ ஒரே கோட்டில் நெருங்கித் தோன்றின. அப்போது ஜோஹான் கெப்லர் எனும் ஜெர்மெனி தேசத்து வான சாஸ்திரி இதுவே பெத்லகேமின் நட்சத்திரமாய்த் தோன்றியிருக்கவேண்டும் என்ற தம் எண்ணத்தை வெளியிட்டார்.

வேறு சிலர் இதை ஒப்புக் கொள்ள வில்லை. அவர்கள் ஒரு வால் வெள்ளி நட்சத்திரம் தோன்றி சாஸ்திரிகளை வழி நடத்தியிருக்கலாம் என்று எண்ணுகின்றார்கள். வேறு சிலர் ஒரு புதிய நட்சத்திரம் தோன்றி, ஜொலித்து சிறிது காலத்திற்குள் மறைந்தது என்று நினைக்கின்றார்கள். இன்னும் சிலர் அது இயற்கையின் சம்பவமல்ல, பெத்லகேமின் நட்சத்திரம் ஓர் அற்புத நட்சத்திரம், ஓர் அதிசய காட்சி என்று கூறுகின்றார்கள்.

---

## சான்றற்ரு க்ளாஸ் (Santa Claus) கடிதம்.

அமெரிக்கா ஐக்ய மாகாணத்தில் சான்றற்ரு க்ளாஸ் என்னும் ஒரு சிறு கிராமம் உண்டு. அங்குள்ள தபால் உத்தியோகஸ்தர் தான் மரிப்பதற்கு 28 வருஷங்களுக்கு முன் பிள்ளைகளிடத்திலிருந்து தனக்கு வரும் ஒவ்வொரு கடிதத்திற்கும் தவறாமல் பதில் எழுதுவார். சான்றற்ரு க்ளாஸ் (Santa Claus) முத்திரை யடித்துக் கடிதம் பெற பிள்ளைகள் எவ்வளவு வாஞ்சையாயிருந்தார்கள் தெரியுமா? பெற்றோரும் சிநேகிதரும் தங்கள் நன் கொடைகளையும் கடிதங்களையும் தபால் உத்தியோகஸ்தரிடம் கொடுத்து முத்திரை யடித்து தங்கள் பிள்ளைகளுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்வார்கள். இன்றைக்கும் அந்த வழக்கம் அங்கு இருக்கின்றது. 75 பேருள்ள அக்கிராமத்தில் கிறிஸ்து ஜயந்தி விழாக் கொண்டாடும் காலத்தில் உத்தியோகஸ்தருக்கு வேலை அதிகம். தபால் சேவகரும், வேலையாட்களும் வெகு வேலை செய்ய வேண்டிய திருக்கின்றது. சான்றற்ரு க்ளாஸ் (Santa Claus) முத்திரை யடிப்பதே பெரும் வேலை.

---

## புகையிலை

இது ஒரு செடி. ஐந்து ஆறு அடி உயரம் வளரும். அகலமான இலைகள் உண்டு. இந்த இலைகளைக் காயப்போட்டு, சுருட்டுகள் வெற்றிலையுடன் உபயோகிக்கும் புகையிலை முதலியவைகள் செய்து விற்கிறார்கள்.

இதின் உபயோகம். செடி கொடிகளில் உண்டாகும் பூச்சிகளையும் புழுக்களையும் கொல்ல சமுசாரிகள் உபயோகிக்கிறார்கள். சில சமயம் மிருகங்களில் உண்டாகும் பூச்சிகளையும் கொல்லக்கூடியது. ஒரு காலத்தில், வியாதிக்காரருக்கு புகையிலை உபயோகித்து வந்தார்களாம். அதின் நஞ்சு தன்மையை அறிந்த பிறகு உபயோகிக்கவில்லை.

புகையிலையை உபயோகிக்கும்போது, அந்தப் புகையானது நமது சுவாச பைகளில் சென்று உள் உறுப்புகளுக்குக் கெடுதி செய்ய ஆரம்பிக்கிறது. இதனால் உண்டாகும் கஷ்டங்கள் அதிகம். கொஞ்சமாய் முதலில் உபயோகிக்கும்போது, மனதுக்கு நன்றாயிருப்பதுபோல் தோன்றும். ஜீரண சக்திக்கு உதவி செய்வதாகவும் நம்பப்படுகிறது. இந்த கெட்ட பழக்கத்துக்குள் விழுந்தவர்களை திருப்புவது கஷ்டம். இந்த கெட்ட ழக்கத்தில் பழகின வாலிபர் பெரியவர்களாகும்போது, புகையிலை உபயோகிக்காத பெரியவர்களை விட, பலத்திலும், ஞானத்திலும் குறைவாகவே காணப்படுவார்கள். அதிகமாய் உபயோகித்தால் பல் கறுத்துப் போகும். சுவாசத்தைக் கெடுக்கும். மனதுக்கு நல்ல சந்தோஷம் இருக்காது. தூக்கக் குறைவு ஏற்படும். தலைவலி, கை கால் சோர்வு முதலியவைகளுக்குப் புகையிலை ஒரு காரணமாகும். கை நாடி விரைவாகப் போகக் காணப்படுதல், படபடப்பு, வெளிறின நிறம், இரத்தக் குறைவு நிச்சயமாய் ஏற்படும். தொண்டை கெட்டுப் போகும். கரகரப்பு உண்டாகி தொண்டைப் புண்வரக் காரணமாகும். நாக்கும் தன் ருசிக்கும் தன்மையை இழக்க நேரிடுகிறது! காரமான ஆகாரம்தான் பிரியமாயிருக்கும். ஆகா இது மாத்திரமோ? கண்கள் தங்கள் பார்வையை சீக்கிரம் இழக்க



நேரிடுகிறது. வயது காலத்தில் பார்வை அவசியம் வேண்டும். ஆனால் வாலிபத்தில் கெட்ட பழக்கம் உள்ளவர்கள் தங்கள் பலனை சீக்கிரம் அனுபவிப்பார்கள்.


பையன்களும் சிகரெட்டுகளும் :—ஒரு பெரிய ஆள் சிகரெட் உபயோகிப்பதைப்போல ஒரு பையன் உபயோகித்தால், அது அவனுக்கு மிகுந்த கெடுதியை உண்டாக்குகிறது. ஒரு வைரம் பாய்ந்த மரத்தை கொஞ்சம் வெட்டினால், சீக்கிரம் காயம் ஆறி வளர்ந்து விடும். சின்ன மரத்தை வெட்டினால் பலவீனம் அடையும். ஒரு சமயம் பட்டுப் போனாலும் போகும். சின்ன பையனுடைய இருதயம் தசைநார் இன்னும் சரிவர உண்டாகவில்லையே. அவனுடைய வளர்ச்சி குறைகிறது. வளர்த்தியிலும், சதையிலும், குறைவு திட்டமாய் ஏற்படும். பையன்கள் சிகரெட் குடிக்கும்போது, தங்களை பெரிய ஆண்களாகப் பாவித்து, ஒரு கௌரதைக்சாக குடிக்கிறார்கள் ஐயோ, பரிதாபம்! இவர்கள் பெரியவர்களாகும்போது தங்கள் அவயவங்களில் ஒன்று பலவீனம் அடைந்து கஷ்டத்துக்கு ஆளாகி ஆயுசு காலமெல்லாம் துன்பத்தைச் சகிக்க வேண்டியது வருமே! குடிக்கும் பையன் விளையாட்டில் முதலாவது வரமுடியாது. பையன்களுக்குரிய சந்தோஷங்களில் நல்ல பங்கு கிடையாது. வகுப்பில் பாடம் விஷயமாய் பார்க்கும்போது, குறைவான மார்க்கு. கேவலம். ஞாபக சக்தி குறைந்து போகும். வகுப்பில் யாரை யாவது முந்தி முதலில் வரப் பிரயாசப்பட முடியாது. இது மாத்திரம் அல்ல. அவனுடைய பேர் கெட்டுப் போகும். நல்ல மனிதர் தங்கள் குழந்தைகளை அவனுடன் சேரவிடமாட்டார்கள். பெற்றோருக்கும் உபாத்திமாருக்கும் ஒளித்து சிகரெட் குடிக்கவேண்டும். கண்டு பிடித்தால் பொய் சொல்லி தப்பும்படிப் பார்ப்பது சன்மார்க்க வளர்ச்சியில் ஒரு படி கீழே விழுதல். பின்பு காசு விஷயத்தில் பெற்றோரை ஏமாற்ற வேண்டியதிருக்கிறது. பெற்ற தாயுங்கூட ஒரு தம்படிக்கும் சந்தேகப்பட சமயம் வரும். யாரும் காசு கொடுத்தாலும் அவர்களை ஏமாற்றி சில காசு எடுத்தால்தான் சிகரெட் வாங்கலாம். ஐயோ காசு திருடும் தன்மை உண்டாகி, நம்மை நாமே கெடுத்து, சாத்தானின் பிள்ளை ஆகிறோம். இன்னும் இதெல்லாம் கடந்து வேலைக்குப் போனால், சிகரெட் குடிக்கும் பையன்களை வேலைக்கு வைக்க பெரிய ஆபீசுகளில் எஜமான்கள் பயப்படுவார்கள். வேலையில்லா திண்டாட்டம் உண்டாகி ஒரு தம்படிக்கும் விதியில்லாமல் அலைய நேரிடும். அப்போதாவது புகையிலை பையனை விடுமோ? விடாது. அது தன் காரியத்தை ஜெயிக்கத்தான் பார்க்கும். இதை வாசிக்கும் பையனே! நீ நல்ல ஜீவியம் செய்யப் பார். உன்னை இதற்கு ஆளாக்காதே.


Jane Fenn

---

கிறிஸ்மஸ் மணி ஒலிக்கும் அன்பின் காலம் வந்திடும்
கேட்கும் எவ்விதயமும் மகிழவே,
கிறிஸ்து அரசாளுவார்; ராஜனாய்ப் பிறந்தார்;
இந்த எதிரொலி எங்கும் ஏகுமே!

---






## பட விளையாட்டு

ஒற்றை எண்கள் வெண்மையாயும் இரட்டை எண்கள் கருப்பாயும் இருக்கின்றன. மறு பக்கத்தின் கீழே கொடுக்கப்பட்ட எண்களை வெட்டி வட்ட அட்டையில் ஒட்டிக் கொள்ளுங்கள். மேலே இருக்கும் படத்தில் அந்தந்த இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

பின்வரும் வரிசையில் வரத்தக்கதாக ஒழுங்குபடுத்துவதுதான் விளையாட்டு:—

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |

எண்களை கோடுகளின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு மாற்றலாம். ஆனால் ஒரு நிபந்தனை உண்டு. கருப்பு வெள்ளையோடும் வெள்ளை கருப்போடுமே யன்றி இனம் இனத்தோடு மாற்றக்கூடாது. 7உம், 10உம் அல்லது 9உம், 12உம் மாற்றலாம். 4உம், 6உம்; 5உம், 11உம் மாற்றக்கூடாது. ஏனெனில் இவை ஓரினமாகும்.

17 தடவைக்குள் மாற்றப் பிரயாசப்படுங்கள். இது உங்களால் செய்யக் கூடிய காரியம்.

---

## கிறிஸ்து ஜயந்தி தீபாலங்காரம்

Flora Robinson Howells

அநேக நூற்றாண்டுகளுக்கு முன் பரிசுத்த போனிவெஸ் (St. Boniface) என்னும் நல்லார் ஒருவர் வட ஐரோப்பாவில் பிரயாணம் பண்ணி கிராமங்களிலும் பட்டணங்களிலும் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்து வந்தனர். கிறிஸ்து ஜயந்தி தினத்திற்கு முந்தின இரவு ஓரிடத்தில் வந்து மன வேதனை உண்டாக்கும் காட்சி யொன்று கண்டனர். அந்த ஊரார் பரிசுத்த ஓக் மரத்தடியில் நரபலி செலுத்தப் போயினர். கடவுளின் பெரிய ஈவாகிய கிறிஸ்து பாலகனின் கதையைத் தான் சொல்லி முடிக்கும் வரை நரபலி செலுத்தக் கூடாது என்று அவர்களைப் பணிவாய் வேண்டிக் கொண்டனர். அவர்களும் சம்மதித்தனர். நரபலிக்குக் கொண்டு வரப்பட்டவனை விடுதலை பண்ணி கூடி வந்திருந்தவர்களை ஒரு சவுக்கு மரத்தைச் சுற்றி நிற்க வைத்து அதிலிருந்து சில நல்ல படிப்பினைகள் கற்றுக் கொடுத்தனர்:—

1. அதின் வேர் பூமிக்குள்ளிருந்தாலும் அது எப்போதும் வானத்தை யளாவி வளருகின்றது.

2. அண்டையில் வளரும் மரங்களைப்போலவே பனி காலத்திலுங்கூட உயிருடனிருந்து நிர்விசாரம் நிறைந்த உயிரற்ற உலகத்துக்கு உயிரளிப்பவரைப்பற்றிப் போதிக்கின்றது.

இரவின் இருண்ட நேரத்தில் மரத்தின் செய்தி மறைந்து போகாமல் மரத்தை தீபாலங்காரம் செய்யும்படி மெழுகு வர்த்தி முதலிய தீபங்களைக் கொண்டு வரும்படி சொன்னர். இந்த ஒளியின் மூலமாய் மனிதருக்கு ஜீவனும் உலகத்துக்கு ஒளியுமானவரைப்பற்றி எடுத் துரைத்தனர். ஜனங்கள் கூட்டம் முடிந்து தங்கள் வீடுகளுக்குப் போகும்போது ஆளுக் கொரு தீபம் எடுத்துச் செல்லும்படி சொன்னர். உண்மையான ஒளி உள்ளத்தில் உதிக்க இடந்தர வேண்டு மென்றும் அதை பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டு மென்றும், அவ்வாறு அஞ் ஞான இருளை அகற்றி அருள் பெறவேண்டு மென்றும் போதித்தனர். இதுவே கிறிஸ்து ஜயந்தித் தருவின் தீபாலங்கார ஆரப்பம்.

## சந்தோஷ நற்செய்தி

Kate Douglas Wiggin




நாசரேத்தின் நற்பாலன் பிறந்தபோது சூரியன் வானத்திற் பாய்ந்து நிற்க, நட்சத்திரங்க ளனைத்தும் அதைச் சுற்றி ஆடின என்பது ஒரு பாரம்பரியம். அதோடு மலைகளும் மர மடர்ந்த காடுகளும் அமைத ஹற்றனவாம். பட்டுப்போன மரங்களுங்கூட நிமிர்ந்து நின்று உயிர்பெற்று செழித்தோங்கினவாம். புற்றரை மீதெங்கும் புது புதுப் புஷ்பங்கள் தோன்றினவாம். நாடெங் கும் சுகந்தம் வீசினதாம். பறவைகள் பாடினவாம். சர்வமும் சர்வ வல்லவருக்கு சாஷ்டாங்கம் செய்தனவாம்.

இது ஒரு கட்டுக்கதையாயிருந்தாலும் இதற்குள் ஒரு சத்திய மடங்கி யிருக்கின்றது. பரம பாலகனுக்குப் பணி புரியும் பலரை யும் ஒரு நூதன சக்தி, ஒரு நல்லெண்ணம், ஒரு புது அன்பின் சிந்தை ஆட்கொள்ளுகின்றது.

முதல் கிறிஸ்து ஜயந்தி விழாவில் ஞானியர் மூவர் கிழக்கி லிருந்து மேற்கே சென்று பெத்லகேமில் பிறந்த பாலகன் பாதத் தில் பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளமாகிய மூன்றுவிதக் காணிக்கைகள் படைத்தனர். அன்று தொட்டு இன்று மட்டும் ஈகையின் சிந்தை உலகத்தின் இதயத்தில் இடம் பெற்றிருக் கின்றது.

ஞானியரைப்போல நாமும் நன்கொடை கொடுக்கப் பழகு வோமாக! தேவையை நீக்கும் பொன்போன்ற ஈவும், நேச வாசம் வீசும் தூப வர்க்கம்போன்ற ஈவும், அன்பைப் பெருக்கும் ஈவும், ஊழிய வாஞ்சையின் ஈவும் 2000 ஆண்டுகளுக்குமுன் தாவீதி ஊரில் ஜொலித்த நட்சத்திரத்தின் சிந்தையாலேவப்பட்டு கொடுக் கப்படும் ஈவும் நமது நன்கொடையாயிருப்பதாக! தேவையானோ ரைத் தேடித் திரிந்து திருப்தி செய்யப் பிரயாசப்படுவோமாக!

20934
N37.1.6-9



Registered. No. M. 3804




# கி[illegible] ஜயந்தி வெண்பா

T. A. Fenn

1

ஆதி வினையகல அம்புவியோ ருய்வடைய
நீதி வழுவா நெறிபெருக—ஜோதிமிகு
மில்ல மதையகற்றி இவ்வுலகில் வந்துதித்தா
ரெல்லையறு மெம்பெருமா னேசு.

2

கன்னி மரியிடமாய்க் கர்த்தருதித் தாரெனவே
மின்னு மொருதூதன் மேய்ப்பருக்குச்—சொன்னவொரு
விந்தைமொழிகேட்டு வேகமா யன்னவரும்
வந்து தொழுதார் மகிழ்ந்து.

3

ஆதியந்த மற்றோனை யண்டர்களி னாயகனைச்
சோதியிற் சோதிச் சுடரொளியாய்—நீதியிலாக்
கல்லான உள்ளம் கரைத்துருக்க வந்தோனை
நல்லானை எந்நாளும் நாடு.

Printed by S. T. Rhenius at the N.M.S. Press, 48 B, Peters Road, Royapettah
and Published by Rev. T. A. Fenn, College Church,
Venkata Maistry Street, George Town, Madras.